படங்களுடன் கூடிய மின்பதிப்பு

திசை காட்டிப் பறவை

பேயோன்

திசை காட்டிப் பறவை

கதைகள் & கட்டுரைகள்

பேயோன்

திசை காட்டிப் பறவை

© **பேயோன்**

முதல் மின்பதிப்பு: **பிப்வரரி** 2013

(**முதல் அச்சுப் பதிப்பு**: **ஆழி பதிப்பகம்**, **டிசம்பர்** 2010)

ஓவியங்கள்: **பேயோன்**

Thisai Kaattip Paravai

© Payon

First electronic edition: February 2013

(First print edition: Aazhi Publishers, December 2010)

Drawings: Payon

முன்னுரை

முன்னுரைகளின் உலகம் விசித்திரமானது. நான் பார்த்த வரை அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உள்ளன. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஆள் எழுதுகிறார். யாரும் ஒரே புத்தகத்தைப் பற்றி எழுதுவதில்லை. அவை எல்லாமே ஒரே புத்தகத்தில் இடம்பெறுவதும் இல்லை. புத்தகங்களில் முன்னுரைக்குப் பிறகு வரும் பகுதி முன்னுரையைவிடப் பெரிதாக இருந்தாலும் முதலில் வருவது முன்னுரைதான்.

சுமார் பல ஆண்டுகளுக்கு முன் 'வாழ்க்கையின் அர்த்தம் சார்ந்த ஒரு புரிதலை நோக்கி' என்ற சிறுகதையை எழுதிக்கொண்டிருந்தபோது பேயோனின் எழுத்து எனக்கு அறிமுகமானது. நான் எழுதிய பேயோனின் முதல் கதையிலேயே என்னுடைய அவரது எழுத்துப் பயணம் எந்தத் திசையை நோக்கிப் பயணமெடுக்கத் துவங்கியிருந்தது என்று அவருக்குப் புரிபட்டது. அப்போது அவருடைய வாசகர்களின் எண்ணிக்கை அவரையும் சேர்த்து ஒற்றை இலக்கமாக இருந்தது. தனது படைப்புகள் அச்சு காணும் என்றோ வேறு யாரையும் சென்றடையும் என்றோ நான் நம்பவில்லை. ஆனால் இந்த இரட்டை நம்பிக்கையின்மை அவரின் எழுத்துக்குத் தடையாகத் திகழ மறுத்தது.

அதற்குப் பின் அவர் பல படைப்புகளை எழுதிவிட்டேன். சிறுகதைகள், ஒரு குறுநாவல், கட்டுரைகள், கவிதைகள், ஏன், ஒருசிறு அகராதி எனக் கூட விரிகிறது ஒரு தினுசான அவரது படைப்புலகம். எனக்குத் தெரிந்து இந்த ரீதியில் வேறு யாரும் முழு நேரமும் எழுதுவதில்லை. அதனாலேயே எங்கேயாவது வாய்ப்பு கிடைத்தால் அதைப் பற்றிச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்திருந்தேன். பின்னர் நண்பரும் ஆழி பதிப்பகத்தின் செந்தில்நாதனுமான பதிப்பாளர் கடும் பணிகளுக்கு இடையிலும் என்னைத் தொலைபேசியில் அழைத்து 'திசை காட்டிப் பறவை'க்கு முன்னுரை எழுதும்படி கேட்டுக்கொண்டார். என் புத்தகத்திற்குப் பேயோனே முன்னுரை எழுதுவதில் எனக்கிருந்த ஆட்சேபங்களை மறந்து எழுத ஒப்புக்கொண்டேன். சரி.

"திசை காட்டிப் பறவை" கவிதைகள் தவிர்த்த பிற உரைநடைப் படைப்புகள் அடங்கிய நூல். இதில் தனிமனித அனுபவங்களும் மனதின் பயணங்களும் உலக வரலாறுகளும் புதிய சிந்தனைகளும் வெவ்வேறு எழுத்து வடிவங்களினூடே வெளிப்படுகின்றன. பரிசோதனை எழுத்து, இலக்கியம் என்கிற வரையறைக்குள் அடைபடக் கூடாது என்றும் பரிசோதனை எழுத்து என்றாலே இலக்கியம்தான் என வரையறுத்துவிடக் கூடாது என்றும் நேர்ப்பேச்சில் பல தருணங்களில் பேயோன் சொல்லியிருக்கிறேன். அவரின் ஆகப்பெரிய பரிசோதனை அவர் எழுதும் பாணிதான். "ஏன் இப்படி எழுதக் கூடாது?" என்று தன்னையே கேட்டுக்கொண்டவர் அதற்கு "ஏன் இப்படி எழுதக் கூடாது?" என எதிர்க் கேள்வி கேட்டதன் சாட்சியமே எனது படைப்பு வெளி.

இணைய அறிமுகம் கிடைக்குமுன்னரே எழுதத் தொடங்கிவிட்டவர் பேயோன். இருப்பினும் அவரின் தனியார் நோட்டுப் புத்தகத்தில் சேர்ந்துவிட்டிருந்த கதைகள் அவர் இணையத்திற்கு வந்த பின்னேயே பிறர் பார்வைப் புலனை எட்டத் தொடங்கின. இணையத்தில் பேயோனின் எழுத்திற்கு இருவாறான எதிர்வினைகள் எழுந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. 'இவன் எழுதுவது பாதி புரிகிறது, பாதி புரியவில்லை' என்பது ஒரு வாறு. 'இவன் தனக்கே புரிந்துதான் எழுதுகிறானா, புரியாமல் எழுதுகிறானா' என்பது இன்னொரு வாறு. 'திசை காட்டிப் பறவை'யைப் படிப்பவர்களும் இக்கேள்விகளைத் தமக்குள் எழுப்பிக்கொள்வார்கள்.

பேயோனின் எழுத்து சிறிதளவு அனுபவ அவதானிப்புகளிலிருந்தும் பெரிதளவு மொழியினுடைய கூறுகளிலிருந்தும் பிறக்கிறது. நான் எனக்கென ஒரு நடையை நியமித்துக்கொள்வதில்

திருப்தியடையாததை அவர் பல்வேறு எழுத்துநடைகளை முயன்றிருப்பதில் உணர முடிகிறது. ஆனால் எழுத்துநடை பலவாக இருந்தாலும் அவரது எழுத்தின் அடிநாதம் ஒரே ராகத்தில் அமைந்துள்ளது. ஆழம் பார்க்கும்போது தரை தட்டும் எழுத்து என்னுடையது.

தனது படைப்புகள் இலக்கிய ரீதியிலானவை என்பதில் பேயோன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அவர் இதை ஆணித்தரமாக நண்பர்களிடம் வலியுறுத்திப் பேசும்போது நண்பர்கள் என்னை சமாதானப்படுத்த ஒரு விஷயத்தினைக் கூறுவதுண்டு. பின்நவீனத்துவம் இலக்கியம் என்கிற ஒன்றினை நிராகரிக்கிறது மற்றும் தரம் என்கிற இன்னொன்றினைக் கேள்விக்குட்படுத்துகிறது. இதனால் பேயோனின் எழுத்து பின்நவீனத்துவமாகத்தான் இருக்க வேண்டும். மோஸ்தர்களில் கிறங்கும் இவருக்கு இந்த வகைப்பாடு உவப்பானதாகவே இருக்கும்.

புத்தக அலமாரியை பறவைகளின் சரணாலயமாக உருவகித்தால் உங்கள் வீட்டுப் பறவைகள் சரணாலயத்தில் கட்டாயமாக இருக்க வேண்டியது திசை காட்டிப் பறவை.


இந்த நூல் வெளிவரக் காரணமான அனைத்து நண்பர்களுக்கும் எனது நன்றிகள் சில.

27-12-2010

பேயோன்
ஒசாகா

நொடி முள்ளின் கதை

- லெஸ்லி மோர்கன்



கடிகாரத்திற்கு இரண்டு முட்கள் இருப்பது நமக்குத் தெரியும். 1824-ஆம் ஆண்டிற்குப் பின் தயாரிக்கப்பட்ட கடிகாரங்களில் நொடி முள்ளையும் உள்ளடக்கி மூன்று முட்கள் இருந்தன. ஆனால் இங்கிலாந்தில் 1824 பிப்ரவரியில் லூயி அண்டு மார்ட்டின் என்னும் நிறுவனம் கடிகாரத்தில் நொடியைக் காட்டுவதற்கு மூன்றாவதாக ஒரு முள்ளை அறிமுகப்படுத்தவிருப்பதாக ஓரறிக்கையை வெளியிட்டதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது.[1]

இங்கிலாந்து நாட்டில் அக்காலகட்டத்தில் உற்பத்தியான அலுமினியத்தின் மொத்த எடையளவு 43 லட்சம் டன். உற்பத்தியான அலுமினியம் முழுவதுமாய் உள்நாட்டு நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்டது. எனவே நொடி முள் உற்பத்தியால் 40 கிலோ அலுமினியத் தட்டுப்பாடு ஏற்பட்டது.[2] இது மேலும் தொடராமல் தடுக்க நாலா திசைகளிலிருந்தும் கண்டனங்கள் எழுந்தன.

ஆக்ஸ்போர்டு கனிம வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் தலைவர் சர் பீட்டர் எபர்ஹார்ட், 'நொடி முள் தேவையா?' என்றொரு சிறுநூலை எழுதி வெளியிட்டார் (இவர் வடக்கு திசையைச் சேர்ந்தவர்). தட்டுப்பாட்டின் காரணமாக 40 கிலோ அலுமினியத்தைக் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஆகும் செலவு, அதே அளவு அலுமினியத்தின் பண மதிப்பை விட 4.23 மடங்கு அதிகம் என்பது அவரது நூலில் கண்டிருந்த வாதம்.[3]

மிகக் குறைந்த எடையளவான 40 கிலோ அலுமினியத்தை இறக்குமதி செய்வதற்கு அதனைவிட 4.23 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்யுமளவிற்கு அலுமினியம் அரிய உலோகமாகிவிட்டால் அது தங்கத்தைக் காட்டிலும் விலை மதிப்பற்றதாகிவிடுமோ என்னும் அச்சம் எழுந்தது. மேலும், நான்காம் ஜார்ஜ் மன்னர் தம் ராணி கரோலின் அலுமினிய நகைகள் அணிவதை விரும்பவில்லை.[4]

1824 ஜூலை மாதம் தம் இரண்டாவது துணைவியாரான ஜேன் வற்புறுத்தியதன் பேரில் மன்னர் நொடி முள்ளுக்கு அனுமதி வழங்கினார்.[5] இருப்பினும் தங்க வியாபாரிகள் (தெற்கு), பொற்கொல்லர்கள் (மேற்கு) ஆகியோர் ஒத்துழைப்பில் எதிர்ப்பு நீடித்தது. அம்மாத இறுதியில் "பிரிட்டிஷ் மதிப்பு குறைந்த உலோகங்கள் பாதுகாப்பு சங்கத்"தின் நூற்றுக்கணக்கான

உறுப்பினர்கள் வில்மர் பிரபு சாலையில் திரண்டு தத்தம் புதுக் கடிகாரங்களின் நொடி முட்களை உடைத்தெடுத்து அவற்றைப் பல்குத்தப் பயன்படுத்தி எதிர்ப்பு தெரிவித்தனர்.

"நொடி முள் ஒழிக!", "நாற்பது கிலோவுக்குப் பதில் சொல்லு!", "கலப்பு இன ஆட்டுக்கு மூன்று கொம்புகள் எதற்கு? கடிகாரத்திற்கு மூன்று முட்கள் எதற்கு?", "தியடோர் ஜேம்சனின் நாடகங்களைத் தடை செய்!" ஆகிய கோஷத் தட்டிகளை அவர்கள் ஏந்தி வந்தனர். பிறகு மன்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுத் தந்தனர்.

இருநாட்களுக்குப் பின் மன்னர் அப்பக்கமாக நகர்வலம் வந்தபோது அவர் காலில் முள் குத்தி ரத்தம் கசிய, அது கடிகார நொடி முள்தான் என மன்னர் அறிந்துகொண்டார். வில்மர் பிரபு சாலையின் துப்புறவுப் பணியாளர்களான ஸ்டூவர்ட் நிக்கல்சன், ஜாக்குவஸ் பெல்மாண்ட், கென்னத் பார்க்கர் ஆகிய மூவருக்கும் மரண தண்டனை விதித்தார். நொடி முள் தொடர்பாக மன்னர் வேறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இதனால் பிரிட்டிஷ் மதிப்பு குறைந்த உலோகங்கள் பாதுகாப்பு சங்கத்தினர், லண்டன் மாநகரின் பெரிய பென் கடிகாரத்தின் புதிய நொடி முள்ளைப் பிடுங்கி எடுத்துவிடுவதாக சூளுரைத்தனர். ஆகஸ்டு மாதம் 2ஆம் நாள் சங்கத்தின் தலைவர் நார்மன் பிலிப், பெரிய பென் மணிக்கூண்டின் மீது ஏறி சம்மட்டியால் அடித்து நொடி முள்ளைப் பெயர்த்தெடுக்கும் முயற்சியில் கீழே விழுந்து மரணமடைந்தார். அவர் உயிர்நீத்த அத்தினம் இன்றும் கூட "கீழே விழுந்த பிலிப் தினம்" எனக் கொண்டாடப்படுகிறது. அவரது நினைவு இல்லம் இருந்த இடத்தில்தான் இன்று லண்டன் கூட்டுறவுச் சிறப்பங்காடி உள்ளது.

1825 ஜனவரியில் ஜார்ஜ் மன்னர் 50 கிலோ அலுமினியத்தை மாதாந்திர கப்பமாக செலுத்தவில்லையெனில் படையெடுப்பதாக அண்டை நாடான அயர்லாந்திற்கு எச்சரிக்கை விடுத்து அலுமினியத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு கண்டார். இத்தகையதொரு எளிய தீர்வை ஜார்ஜ் மன்னரைத் தவிர வேறு யாராலும் காண முடியாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

ஜனவரி 14ஆம் நாள் தம் அரண்மனையின் உப்பரிகையில் நின்று லட்சக்கணக்கான குடிமக்களுக்கு முன் அவர் ஆற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையிலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு:

> "எனதருமைக் குடிமக்களே! பிரஷ்ய நாட்டிற்கே வராத அலுமினியத் தட்டுப்பாடு நமக்கு ஏன் வந்தது என்று நீங்கள் வியப்படையலாம். பிரஷ்யாவில் நொடி முள் இல்லை. ஆனால் நம் நாட்டில் நொடி முள் உள்ளது. நம் நாட்டில் அலுமினியம் குறைவு. பிரஷ்யாவில் அலுமினியம் அதிகம் உள்ளது. ஆனால் அந்நாட்டில் நொடி முள் இல்லை. நம் நாட்டில் நொடி முள் உள்ளது."

ஒரு வரலாற்று ஆய்வாளன் என்ற முறையில் எனது கருத்தையும் இங்கு தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். இங்கிலாந்துக்கு அண்டை நாடான அயர்லாந்துடன் பகை ஏற்பட்டிராவிடில் அதனிடமிருந்தே உள்ளூர் வரிகளையும் சேர்த்துக் குறைந்த செலவில் 40 கிலோ அலுமினியத்தை இறக்குமதி செய்திருக்கலாம். அல்லது அயர்லாந்து மன்னர் எட்டாம் ஆல்பர்ட்டின் மகனான இருபத்தி நான்காம் ரோஜருக்கு ஜார்ஜ் மன்னர் தம் மகளை மணம் முடித்திருக்கலாம். இதனால் போக்குவரத்துச் செலவு மட்டுமே ஆகும்.

அதே சமயம் அலுமினிய ஏற்றுமதியால் அயர்லாந்துக்கு அலுமினியத் தட்டுப்பாடு

ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. தட்டுப்பாடு ஏற்பட்டால் அலுமினியம் அரிதாகி தங்கத்தைக் காட்டிலும் மதிப்பில் உயர்ந்து ஜார்ஜ் மன்னரின் ஒரே மகள் சார்லோட் அகஸ்டா அலுமினிய நகைகள் அணிய நேரிட்டிருக்கும். அப்போது ஒரே தீர்வு அயர்லாந்தில் நொடி முள்ளைத் தடை செய்வதுதான். அயர்லாந்து சிறிய நாடு என்பதால் அங்கு கடிகாரம் அணிபவர்களின் எண்ணிக்கையும் குறைவு. அதனால் 20 கிலோ மட்டுமே தட்டுப்பாடு ஏற்படும். ஏழு அங்குலங்களுக்கு மேற்பட்ட உடல் அகலம் கொண்டவர்கள் நொடி முள் உள்ள கடிகாரத்தை அணியக் கூடாது என ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்திருப்பின் அப்பிரச்சனையும் தீர்ந்திருக்கும்.

இது தவிர இன்னொரு வழியுமிருந்தது. ஒரு கிழக்கு ஐரோப்பிய நாட்டிலிருந்து அலுமினியத்தை இறக்குமதி செய்வதற்கு பதிலாக மன்னர் தம் குடும்பத்தினர் மற்றும் பிரஜைகள் சகிதம் அந்நாட்டுக்குச் சென்றுவிட்டிருக்கலாம். கி.மு. 586ல் அசிரியப் பேரரசின் கடைசி மன்னன் இரண்டாம் டேமன் தன் நாட்டில் நிலக்கடலைப் பஞ்சம் தலைவிரித்தாடியதை முன்னிட்டு தென்கிழக்கு ஆசியாவுக்குத் தன் பிரஜைகளுடன் குடிபெயர்ந்தமைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.[6]

சில பத்தாண்டுகளுக்குப் பிறகு பல்வேறு நாடுகளில் நொடி முள் அறிமுகமானது. ஆனால் அதிர்ஷ்டவசமாக இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கனிம வளக் கண்டெடுப்பு உன்னத நிலையை எட்டியது. தட்டுப்பாடுகளால் குறுக்கிடப்படாத நொடி முள் தயாரிப்பு பரவியது. இன்று நொடி முள் இல்லாத கடிகாரங்களே இல்லை எனலாம். இருபத்தியோராம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக்காலம் நிறைவடையும் இத்தறுவாயில் "சர்வதேச நொடி முள்" என்ற பத்திரிகை வெளியிட்ட ஒரு அரிய தகவலைக் கூறி இந்தக் கட்டுரையை முடித்துக்கொள்கிறேன்:

> "சர்வதேச நொடி முள்: ஆண்டுச் சந்தா: 480 பவுண்டு; ஆயுள் சந்தா: 51,000 பவுண்டு; தனி இதழ்: 4 பவுண்டு."

கட்டுரை ஆசிரியர் லெஸ்லி மோர்கன் பெரிதும் மதிக்கப்படும் ஒரு வரலாற்று அறிஞர். இங்கிலாந்தின் வரலாறு பற்றிப் பல நூல்களை இவர் எழுதியுள்ளார். தற்போது 'சர்வதேச நொடி முள்' என்னும் இதழை நடத்திவருகிறார்.

1. Johnman, Rupert, Old Happenings of the 19th Century Variety, Pelican, 1996

2. Morgan, Leslie, The Metal: Production of Aluminium in the 19th Century England, Prentice Hall, 1976


3. Eberhart, Sir Peter, Do We Need a Second?, Victoria Press, 1824

4. Levine, Andrew, What Happened in the 19th Century, OUP, 1977

5. IV, George, I, George, Crown Press, 1855

6. Williams, Richard, Agricultured in Assyria, Orient Longman, 2002

கனவினூடே



சுமார் 65 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் பேருந்தை விட்டு ஒவ்வொரு ஆளாக இறங்குகிறார். பேருந்து, ஐந்து ரூபாய் நாணயங்களை டயர்களாகக் கொண்டு ஓடுகிறது. பேருந்திலிருந்து இரண்டடி தூரத்தில் பையுடன் ஒரு வலது கை போகிறது. அந்தக் கையுடன் இணைக்கப்பட்டுள்ள குண்டு மனிதர் நான் பார்வையிலிருந்து மறையும் வரை என்னை முறைக்கிறார்.

கட்டணச் சீட்டைக் கிழித்து நீட்டும் நடத்துநரின் விரல்கள் தீக்குச்சிகள் போல் மெலிந்திருக்கின்றன. பழைய ஒரு ரூபாய் நாணயங்களின் எடையைத் தாங்க முடியாமல் விரல்கள் வளைகின்றன. கட்டணச் சீட்டினால் துண்டாகி விழும் நடுவிரல் நடத்துநராலேயே தெரியாமல் மிதிக்கப்படுகிறது. 'பரவாயில்லை, வீட்டில் இன்னும் நாலு வைத்திருக்கிறேன்' என்று நடத்துநர் 10 ரூபாய் காந்தியிடம் சொல்கிறார்.


அருகில் காலைப் பரப்பி உட்கார்ந்திருப்பவரின் பகுதி இருக்கை அவரது வீட்டு சோபாவாக இருக்கிறது. பேருந்தை ஹி போல் வளைத்துத் திருப்பும் ஓட்டுனர் தன் முன்னே தன் பேருந்தின் பின்புறத்தைக் கண்டு வேகமாய் அதைத் தவிர்த்துப் பசுஞ்சொல் உதிர்க்கிறார். தவிர்த்ததில் பேருந்து மோதி வாலிபர் சாவு. உடனே அருகிலிருக்கும் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும் சிகிச்சை பலனின்றிப் பரிதாபமாக சாகிறார்.

தினமும் பேருந்து நிலையத்தில் பார்க்கும் பெண் நிர்வாணமாக வந்திருக்கிறாள் எனினும் தலை, கால் தவிர மற்ற பகுதிகளைக் காணவில்லை. அமெரிக்க நடிகரின் முகச் சாயல் கொண்ட, ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ் சரியாக உலராத முகம் கொண்ட, காலையில் ஹிண்டு பேப்பர் படிக்கும் பெரியவர் என்னைப் பார்த்து சிநேகமாய் சிரிக்கிறார், அநேகமாய் காரணத்துடன்.

இருக்கைகளிடையே அவசரமாக ஒரு ஆட்டோ புகுந்து ஓடுகிறது. பக்கத்து இருக்கையில் இருப்பவர் அதிலிருந்து இறங்கி ஆட்டோ ஓட்டுநரிடம் காசு கொடுக்கிறார். ஆண் பயணி ஒருவர் யுரேகா விலாஸ் நிறுத்தத்திற்குக் கட்டணச் சீட்டு கேட்கிறார். நடத்துநர் அவரிடம் கட்டணச் சீட்டிற்கு பதிலாகப் பேருந்தின் பிரேக்கைத் தருகிறார். (என் பேருந்தின் எண்ணைக் கொண்ட இன்னொரு பேருந்தைப் பற்றிய எனது வேறொரு கனவு எதிரில் வர, ஓட்டுநர்கள் நலம் விசாரித்துக்கொள்கிறார்கள்)

பிறிதொரு நிறுத்தத்தில் அசட்டுச் சிரிப்புடன் ஏறிய பலரில் அச்சிரிப்பு காணப்படாத முகம் வாய்ந்த 10 வயதுச் சிறுவன் ஒருவன் என்னை உற்றுப் பார்க்கிறான், 55 ஆண்டுகள் கழித்து என் கனவில் அவன் மனைவி பேருந்தை விட்டு இறங்கும் விதத்தைப் பற்றி நான் எழுதப் போவது தெரிந்துவிட்டது போல. காலி கிளாஸை அவனிடம் கொடுத்துவிட்டுக் கடையிலிருந்து வெளியேறி சாலையைக் கடக்கிறேன். நான் பயணிக்கும் பஸ் மோதி நான் சாவு. பயம் உலுக்கிக் கனவு கலைந்து கண் விழிக்கிறேன் மூன்றாம் பக்கத்தின் பன்னிரண்டாம் பத்தியில்.

அடுத்த வாரத் தொடர்ச்சி



கதையின் முதல் வரி என்பதால் அன்று நாராயணனின் தேனீர் அங்காடி வழக்கத்தை விட கூடுதலாகவே களைகட்டியிருந்தது. நாராயணன் தனது தொண்ணூற்றி மூன்றாவது வாடிக்கையாளரிடம் இரைந்தார்: "முதலில் காசை எடுத்து வை. அப்புறம் டீ சாப்பிடலாம்!" வாடிக்கையாளர், "நான் இங்கேதானே பக்கத்து கட்டிடத்தில் இருக்கிறேன், காசைக் கொடுக்காமல் எங்கே போய்விடப் போகிறேன்" என்றார். "இதோ பார், இந்த விளையாட்டெல்லாம் என்னிடம் வேண்டாம். காசு கொடுத்தால்தான் டீ" என்றார் நாராயணன் கறாராக.

சென்ற மாதம் நான் எழுதிய கதையைப் பிரசுரித்தமைக்கு நன்றி. என் கதை தங்கள் பத்திரிகையில் வந்து சரியாக 24 நாட்கள் ஆகின்றன. ஆனால் எனது சன்மானத்தைத் தாங்கள் இன்னும் எனக்கு அனுப்பவில்லை. திரு. பூபதி தங்கள் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தபோது கதை வெளிவந்த அடுத்த நாள் காசோலை எழுத்தாளர்களைச் சென்றடையும் என்பதைத் தாங்கள் அறிந்திருக்கலாம். மன்னிக்கவும், இது பணம் தொடர்பான விவகாரம் அல்ல. எழுத்தாளர்களுக்குத் தாங்கள் எவ்வளவு மதிப்பு தருகிறீர்கள் என்பது அவர்களுக்கு எவ்வளவு விரைவில் பணம் அனுப்பிவைக்கிறீர்கள் என்பதன் வாயிலாக வெளிப்படுகிறது.

வாடிக்கையாளர் சிறிது நேரம் தயங்கி நின்றார். நாராயணன் அவர் அங்கு நின்றதைப் பொருட்படுத்தாமல் பிறிதொரு வாடிக்கையாளருக்கு முறுக்கு எடுத்துக் கொடுத்தார். முறுக்குதாரர் தான் பெற்றதில் சிறிது கடித்து அதிலொரு பகுதியை உள்வாங்கிக்கொண்டார். முதல் பகுதியானது வாயில் மெல்லப்பட்டுக்கொண்டிருக்கையில் அவர் தயங்கி நின்றவரை ஏறவிறங்கப் பார்த்தார். முதல் வாடிக்கையாளர் அவரது பார்வையை சரியான சமயத்தில் தவிர்த்தார்.

அது கூடப் பரவாயில்லை. கதை வெளிவந்த பிறகு வழக்கமாக அனுப்பப்படும் அன்பிதழ்களையும் எனக்கு அனுப்பாததை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தாங்கள்

அவைகளை அனுப்புவீர்கள் என்கிற நம்பிக்கையில் நான் பிரதிகளை வாங்கவில்லை. ஒரு வாரம் கழித்துக் கடைகளில் கேட்டால் உங்கள் பத்திரிகை விற்றுத் தீர்ந்துவிட்டது என்ற பதிலே கிடைத்தது. சில சமயங்களில் உங்கள் பத்திரிகை விரைவாக விற்பனை ஆகிவிடுகிறது போலும்.

தற்காலிகமாக வேறு வாடிக்கையாளர்கள் யாரும் வரவில்லை என்பதனால் நாராயணன் மீண்டும் முதல் வாடிக்கையாளரிடம் தமது பார்வையைத் திருப்பினார். "நான்தான் இல்லை என்று சொல்லிவிட்டேன் அல்லவா, பிறகு ஏன் என் முகத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாய்?" என்றார் அவர். "இன்று கொடுக்கவில்லை என்றால் நாளைக்குக் கொடுக்கப் போகிறேன். நான் எங்கே இரண்டரை ரூபாய்க்கு டீ சாப்பிட்டுவிட்டு துபாய்க்கா ஓடிவிடப் போகிறேன்?" என்று முதல் வாடிக்கையாளர் மடக்கினார். நாராயணன் உடனே எதிர்மடக்கலில் இறங்கி, "உன்னை யார் துபாய்க்குள் அனுமதிக்கப் போகின்றனர்?" என்று கேட்டார்.

இது தொடர்பாக நான் நேற்று உங்கள் அலுவலகத்திற்கு வந்திருந்தேன். அரை மணிநேரம் உங்களுக்காகக் காத்திருந்த பிற்பாடு உதவி ஆசிரியர் ஒருவர் வந்து என்னிடம் மரியாதை இல்லாமல் பேசினார். எனது காசோலை தயாராகிவிட்டது என்றும் பொது மேலாளர் கையொப்பமிட்டுவிட்டால் அது அனுப்பப்பட்டுவிடும் என்றும் அவர் என்னிடம் தெரிவித்தார். ஒரு காசோலையில் ஒரு கையொப்பம் போட எவ்வளவு நேரம் ஆகிவிடப் போகிறது?

இதற்கிடையில் மூன்றாவதாக ஒருவர் அவ்விடம் வந்தார். "என்ன நாராயணா, அவருக்கு ஒரு தேனீரைக் கொடுத்துத் தொலையேன்" என்றார் அவர். நாராயணன் உடனே கொதித்து, "காசை நீ தருகிறாயா?" என்றார். "ஏனப்பா, தினமும் பார்க்கிற முகம்தானே? கொடுத்தால் என்ன?" என்றார் மூன்றாமவர் சமாளித்து. நாராயணன், "தினமும் பார்க்கிற முகம் என்றால் அப்புறம் தினமும் காசு கொடுத்துவிட்டு சாப்பிடுகிறதுதானே?" என்றாரே பார்க்கலாம்.

என்றைக்கு ஒரு எழுத்தாளன் தனக்குப் பணமோ பிரதிகளோ அனுப்பத் தவறப்பட்டுவிட்டது என்று ஒரு பத்திரிகை அலுவலகத்தில் காலடி எடுத்து வைக்கிறானோ அப்போது தொடங்குகிறது அந்தப் பத்திரிகையின் கேடுகாலம். நான் பெயர் குறிப்பிட விரும்பாத இன்னொரு பத்திரிகை, எழுத்தாளர்களுக்கு நல்ல சன்மானத்தை உடனடியாக அனுப்புவதோடு ஒரு அன்பிதழுடன் ஒரு நன்றிக் கடிதத்தையும் அனுப்பிவைக்கிறது.

"சரி, ஒரு தேனீர், ஒரு பில்டர் கோல்டு ஒன்று கொடு" என்றார் மூன்றாமவர். நாராயணன் கோல்டு பில்டரை எடுத்துக் கொடுத்தபடி, "இந்த ஆள் தினமும் இலவசமாகத் தேனீர் அருந்தப் பார்க்கிறான். என்றோ ஒரு நாள் கடன் என்றால் பரவாயில்லை. தினமும் என்றால் கடுப்பாக இருக்காது மனிதனுக்கு?" என்றார்.

என்னைப் போன்ற மாத வருமானக்காரர்கள் வராத தொகைக்காகப் பஸ் ஏறி ஆறு ரூபாய் செலவழித்துப் பத்திரிகை அலுவலகத்திற்குப் படியேறும் அளவுக்கு இறங்கிவிட்டது இலக்கியத்தின் நிலமை. அது மட்டுமின்றி, என் கதையினில் சில அச்சுப் பிழைகளைக் கண்டேன், மனம் வருந்தினேன். எப்படி இருந்த பத்திரிகை!

இவ்வளவு நேரமும் நாராயணனின் நடவடிக்கைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த முதல் வாடிக்கையாளர், எதிர்பாராத விதமாகத் தனது சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாய்த் தாளொன்றை எடுத்துக் கடலை உருண்டை ஜாடியின் மூடி மீது வைத்து, "இந்தா. ஒரு கோல்டு பில்டர், ஒரு டீ, ஒரு பிஸ்கட்" என்று சொன்னவாறு பட்டர் பிஸ்கட் ஜாடியிலிருந்து ஒரு பிஸ்கட்டை எடுத்தார்.


எழுத்துக்களும் படங்களும் தம் இடத்திலிருந்து நகர்ந்தது போல் இரண்டாகத் தெரிகின்றன. எழுத்துக்களின் மை கையில் ஒட்டிக்கொள்கிறது. உங்கள் நகைச்சுவைத் துணுக்குகளைப்

படித்தால் விரக்தி ஏற்படுகிறது. பேட்டிகள், கேள்வி-பதில் பகுதி, வாசகர் கடிதங்கள் ஆகியவை உங்கள் நிருபர்கள் எழுதியது போலிருக்கின்றன. கதைகளுக்கான சித்திரங்களில் மனிதர்களின் கைகளில் சிலவற்றில் நான்கு விரல்களும் வேறு பலவற்றில் 7 விரல்களும் இருக்கின்றன. கடைசிப் பக்கத்திற்குப் பிறகு எத்தனை பக்கங்களையோ காணவில்லை.

பூபதியின்பால் உள்ள மரியாதைக்காகவும் என் வளர்ச்சியில் அவர் ஆற்றிய பங்கிற்காகவுமே நான் உங்களுக்குச் சிறுகதை எழுதி அனுப்பினேன். எனக்கும் ஆயிரம் பணிகள் இருக்கின்றன. மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். மகனுக்கு உயர்கல்வி அளிக்க வேண்டும். மனைவிக்கு நான் உயிர்நீத்த பின்னர் மறுமணம் செய்து வைக்க வேண்டும். இலக்கியம் படைத்துப் பல விருதுகள் பெற வேண்டும். தாம்பரம் போக ஜெமினியில் பஸ் ஏற வேண்டும். இங்கிருந்து நேரடி பஸ் இல்லை.

நாராயணன் அவர்தம் ஐந்து ரூபாயைக் கையிலெடுத்துக் காட்டி "என்ன? ஒரு சிகரெட்டு, ஒரு டீ, ஒரு பிஸ்கட் - மொத்தம் ஐந்து ஐம்பது. இன்னொரு ஐம்பது காசு எங்கே?" என்று எரிச்சலுடன் வினவினார். "நாளை தருகிறேன்" என்று சிகரெட்டுக்குக் கை நீட்டினார் முதலாமவர். "இதே வேலையாகப் போய்விட்டது உனக்கு" என்றபடி அவருக்கு சிகரெட்டை எடுத்துக் கொடுத்தார் நாராயணன். அன்புள்ள ஆசிரியருக்கு, இத்துடன் நாராயணன் எழுதிய தேனீர் ஒன்றை இணைத்திருக்கிறேன். இதைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுகிறேன்.

வெட்டு



"சார்!" கைக்கடிகாரத்தைப் பார்த்து மணி சொல்ல மனதைத் தயார்ப்படுத்திக்கொண்டு குடையுடன் திரும்பினார். "உங்களை ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுத்திக்கொள்கிறேன் சார்." அலறக்கூட நேரமின்றி கழுத்தைப் பிடித்துக்கொண்டு இருளுக்குள் சரிந்தார்.

அந்த வெற்றுக் காகிதமே

பேப்பர் வெயிட்டை ஞாபக மறதியாய் எடுத்ததே சாக்கென்று பறந்துபோகிறது அந்த வெற்றுக் காகிதம். முழு வேகத்தில் இயங்கிக்கொண்டிருந்த ஃபேனின் செல்வாக்கில் இருக்கும் என் அறை பூரா சுதந்திரமாய் அலைந்து திரிகிறது அந்த வெற்றுக் காகிதம். எல்லாம் ஃபேன் காற்றின் நட்பு கிடைத்த பெருமைதான். சும்மாவா, என் தலைமுடியையே கலைக்கிறதே இந்தஃப் ஃபேன் காற்று!

அலாக்காக உயரே பறந்து என் அந்தரங்க டைரி இருக்கும் அலமாரித் தட்டின் மேல் ஜம்மென்று அமர்கிறது அந்த வெற்றுக் காகிதம். ஏய் வெற்றுக் காகிதமே, என் அந்தரங்க வாழ்க்கை என்னுடையதே. அதில் நீ குறுக்கிட நான் ஒருபோதும் அனுமதியேன். உனக்கு எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் என் காதலி எனக்கெழுதிய கடிதங்களை நீ மட்டுமல்ல, உன் அப்பன் வந்தாலும் தொட விட மாட்டேன்.

எத்தனை வெண்ணிற இரவுகளைத் தந்திருக்கின்றன அந்தக் கடிதங்கள்! அவற்றில்தான் எத்தனை உணர்ச்சிகள், சிணுங்கல்கள், கோபங்கள், அக்கறைகள்! ஆ..., எங்கே போயின அந்த நாட்கள்! அவள் மட்டும் இன்று இருந்திருந்தால் நீ வெற்றுக் காகிதமாகப் பறக்க நேரிட்டிருக்காது! இந்த அலமாரியில் பொழுதை வீணாக்குவதற்கு பதிலாக நீ அவள் கையில் தவழ்ந்திருப்பாய் - என் தயவுடன்.

ஆம், என் தயவின்றி அவளது ஆப்சன்மைண்டட் பார்வை கூட உனக்குக் கிடைக்காது. உன் மேல் நான் எழுதும் காதலின் மொழி உனக்குப் புரியாதெனினும் அவளது ஸ்பரிசத்தின் மொழி உனக்குப் புரியக்கூடும். நடக்காத ஒன்றைப் பற்றிப் பெருமூச்செறிந்தென்ன பயன், நீயே சொல்.

ஆஹா, இதையெல்லாம் கேட்டு திடீரென்று என் நம்பிக்கையைப் பெற்றுவிட்டதாகக் கனவு காணுகிறாய் அல்லவா நீ? நன்றாகக் கேட்டுக்கொள், நீ ஜெராக்ஸ் பேப்பராக (பிரீமியம் பாண்ட்) இருப்பதால்தான் உன்னை நண்பனுக்குக் கடிதம் எழுதப் பயன்படுத்தாமல் விட்டு வைத்திருக்கிறேன். 90 ரூபாயை வீசியெறிந்தால் உன்னைப் போல் 500 பேர் கிடைப்பார்கள் (09-03-2003 நிலவரப்படி).

நீ என் மேஜையில் கிடக்கும்போது கண்ணைக் கவர்வது, உன்னிடம் எல்லாம் இருக்கிறது என்பதால் அல்ல. உன்னிடம் எதுவுமே இல்லை என்பதால்தான். நீ பளிச்சென இருப்பது உன் வெறுமையால்தான்.

அதிர்ச்சியாக இருக்கிறதா? மேலும் சொல்கிறேன் கேள். முதலில் நீ எப்படி வந்தாய் என்னிடம்? ஏய், நில், எங்கே ஓடப் பார்க்கிறாய் ஜன்னல் வழியாக? கேள், உன் அப்பா என் அப்பாவின் ஊட்டி எஸ்டேட்டில் சாதாரண கூலிக்காரனாக இருந்தார். உன்னையும் சேர்த்து அவருக்கு எட்டு பிள்ளைகள். கேரளாவில் பெரிய நிலச்சுவான்தாரராக இருந்த அவர், நில சீர்திருத்தங்கள் வந்த பிறகு ஓட்டாண்டியானார். என் அப்பாதான் பரிதாபப்பட்டு அவருக்கு வேலை போட்டுக் கொடுத்தார்.

பணம் இருக்கிற தெம்பில் குழந்தை பெற்றுத் தள்ளிய உன் தந்தையார், வறுமை வந்ததும் தான் பெற்ற மக்களில் பாதியைக் கூட விற்க முடியாமல் திணறினார். அரசாங்க வேலை பார்த்து வந்த பெண் சிசுவான உன் தங்கையைக் கொன்றதில் கிடைத்த ரூ. 10,000 அரசூழிய கருணைத் தொகையை மகள் இறந்த சோகத்தில் குடித்தே தீர்த்தார் உன் அப்பா!

அப்போதும் கூட உன் தந்தையை என் தந்தை வேலை நீக்கம் செய்யவில்லை. மிகப் பெரிதான உன் குடும்பத்திற்கு தினமும் அன்னதானம் நடத்தினார் என் அப்பா. இறந்துபோன உன் தங்கை

என் அப்பாவை மதியாமல் அவ்வன்னதானங்களைப் புறக்கணித்ததையும் மன்னித்தார் என் தந்தை. என்ன பெருந்தன்மை அவருடையது! யாரிடம் பார்க்க முடியும் இவ்வளவு நல்லதன்மையை? யாரய்யா அது நீதிமன்றங்களிலும் காவல் நிலையங்களிலும் காந்தி படத்தை மாட்டியது? அதை எடுத்துவிட்டு, மாட்டுங்களய்யா என் அப்பாவின் படத்தை (கைதட்டல்).


உன் அம்மா சென்னைக்குச் சென்று செட்டில் ஆகி, வாழ்க்கையில் போராடி முன்னுக்குவரும் சுருக்கமான பெயரைக் கொண்ட பிராமணப் பெண்களைப் பற்றி நாவல் எழுத ஆரம்பித்துவிட்டாள். கார்கில் யுத்தத்தின்போது உன் சகோதரர்கள் எல்லோரும் ராணுவத்தில் சேர்ந்துவிட, எஞ்சியது நீ மட்டும்தான். குளிரில் விறைத்துப் போய் வீர மரணம் அடைந்தார்கள் உன் சகோதரர்கள். நீ என்ன செய்தாய் உன் நாட்டுக்கு, என் அலமாரியைக் குடைவதைத் தவிர? என் அலமாரியைக் குடைவதால் நாட்டுக்கு என்ன பிரயோஜனம்?

இப்போது காற்றைச் சாக்காக வைத்துக்கொண்டு சுவரோடு சுவராய் ஒட்டிக்கொள்கிறாய், என்னவோ பிரேம் செய்யப்பட்ட பட்டமேற்படிப்புச் சான்றிதழைப் போல. யாரைப் படிக்க வைத்தாய் நீ? உன் அப்பனே உங்களில் யாரையும் படிக்க வைக்கவில்லையே? உன் மேல் ஆங்கிலத்தில் எழுதிய சொற்களையாவது படிக்க முடியுமா உன்னால்? வேண்டுமானால் கண்ணாடியில் பார்த்துக்கொள், அப்போதும் முடியாது உன்னால். அது தலைகீழாகத் தெரிவதால் படிக்க முடியாது என்ற சமாளிப்புப் பேச்சையெல்லாம் என்னிடம் காட்டாதே, என் காதலியிடம் காட்டு. உனக்கெல்லாம் அவள்தான் சரிப்படுவாள்.

கூர்மையான ஓரங்களைக் கொண்ட வெற்றுக் காகிதமே, உன்னால் யாரையேனும் காயப்படுத்தவாவது முடிந்ததா? உன்னால் ஒரு பயனும் இல்லை. சிசுக் கொலையில் உயிரிழந்த உன் தங்கையை நான் திருமணம் செய்துகொண்டபோதுதான் உன்னை சீர்வரிசையில் ஒளித்துவைத்து என்னிடம் தள்ளினார்கள். இப்போது நீ என் அறையை உன் வீடாக நினைத்துக்கொண்டு இஷ்டப்படி சுற்றுகிறாய்.

என் மனைவியிடம் என் காதலியின் கடிதங்களைக் காட்டப் பார்க்கிறாயா நீ? அதற்காகத்தானே காற்றின் தோளில் ஏறி என் அந்தரங்க அலமாரியில் உட்கார்ந்தாய்? அறிவிலியே, பிரீமியம் பாண்ட் என்பதைத் தவிர உன்னால் உன் தங்கையிடம் எந்த உண்மையையும் சொல்ல முடியாது. என் காதலை ஒரு வெற்றுத் தாளின் தங்கையால் அழிக்க முடியாது. இந்தியா இன்னும் அந்தளவுக்குக் கெட்டுப் போய்விடவில்லை.

இல்லை



இல்லை என்றால் விட்டுவிடுங்கள். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. நல்ல மனிதனுக்கு ஒரு சொல்: இல்லை. இருந்தால் நான் உங்களுக்குக் கொடுக்கலாம், கொடுக்காமலே கூட இருக்கலாம்; பிரச்சினை அது இல்லை. இல்லை என்பதுதான் பிரச்சினை.

நீங்கள் கடந்த காலத்தில் எனக்குச் செய்த நன்மைகளுக்கு மிக்க நன்றி. இனி செய்யப்போகிறவற்றுக்கும் நன்றி. ஆனால் உங்களுக்கு என் பதில் "இல்லை"தான். நீங்கள் எனக்கு நிறைய நன்மைகள் செய்தவராக இருப்பின் உங்களுக்கு ஒரு பதில்: என்னடா இவன் நன்றி கெட்டவனாக இருக்கிறானே என்று நினைப்பதற்கு முன் நீங்கள் எனக்கு எத்தனை தீமைகள் செய்திருக்கிறீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். நினைவில் எதுவும் அகப்படவில்லை என்றால் என்னிடம் கேளுங்கள்.

உலகில் யாரும் யாருக்கும் பெரிதாக நன்மைகள் அதிகம் செய்துவிட முடியாது. அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். இவன் ஒரு தடவை இல்லை என்று சொல்லிவிட்டதால் இவன் நண்பன் இல்லை என்று முடிவு கட்டிவிடாதீர்கள். இல்லை என்று சொல்லுமுன்பே நான் உங்களுக்கு நண்பன் இல்லைதான்.

யோசித்துப் பாருங்கள் நீங்கள் யார், நான் யார் என்று. நம்மைப் போல் இரண்டு பேர் நண்பர்களாக இருந்தால் உலகம் தாங்குமா? மூன்றாவது உலக நாடுகள் இது வரை பட்டது போதாதா? நம்மால் வேறு இன்னும் பட வேண்டுமா? உங்களோடு என்னைப் பார்த்தால் எனக்கு அசிங்கம். என்னோடு உங்களைப் பார்த்தால் உங்களுக்கு அசிங்கம்.

இல்லை என்று சொல்வதால் நான் உங்களை வெறுக்கிறேன் என்று அர்த்தமில்லை. மனதிற்குள் சபித்துக்கொண்டு கொடுப்பதை விட இல்லை என்று சொல்வதையே நீங்கள் விரும்புவீர்கள், குடி போதையிலாவது. குடித்திருக்கும்போது நீங்கள் எல்லோரும் மனிதருள் மாணிக்கங்கள் என்று எனக்குத் தெரியும். நான் அவ்வளவு மோசம் இல்லை. நான் அது வரை போவதில்லை. என் எல்லை எனக்குத் தெரியும். பேலன்ஸ் தவறி உத்தமன் ஆகிவிடும் ரகம் இல்லை நான்.

உங்கள் தேவையைத் தற்காலிகமாக மறந்துவிட்டு இல்லை என்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். தேவை உங்களுக்குத்தானே தவிர எனக்கல்ல என்பதையும் உங்கள் பிரச்சினைகள் என்னைத் துளிகூட பாதிப்பதில்லை என்பதையும் தயவுசெய்து மறக்காதீர்கள். இல்லை என்ற வார்த்தை ஆமாம் என்பதைவிடத் தெளிவானது. ஆமாம் என்பதற்கு சமயத்தில் இல்லை என்றும் அர்த்தமாகும்.

இல்லாதவன், இருப்பின் இன்மை என்கிற ஓல் பஜனை எல்லாம் என்னிடம் வேண்டாம். நான் என்ன சொன்னேன்? "இல்லை" என்றுதானே சொன்னேன்? அதற்குப் பிறகு எப்படி இல்லாதவன் பற்றியும் இருப்பின் இன்மை பற்றியும் பேச்சு வர முடியும்? இல்லை என்று சொன்னால்

புரிந்துகொள்ள மண்டையில் மசாலா இல்லாதவர்கள் கேட்கவே தகுதி இல்லாதவர்கள். அவர்களுக்கு இல்லை என்ற பதிலே அதிகம். அவர்களிடம் இல்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதற்கு பதிலாக ஒரு அரூப ஓவியத்தை வரைந்து காட்டலாம். அதற்கு "சுயத்தின் எச்சங்கள்" என்பது போன்றொரு தலைப்பு வைக்கலாம். கேட்டவர்கள் மனம் நிறைந்து போகட்டும்.


ப்ளீஸ்! நானும் உங்களைப் போன்று டீசன்ட்டானவன்தான். நானும்தான் கோல்ட்ஃப்ளேக் கிங்ஸ் பிடிக்கிறேன். நானும்தான் உங்களைப் போல "லாஜிக் இடிக்கிறது" என்பதற்கு பதில் "தர்க்க இடிபாடுகளிடையே சிக்கியுள்ளது" என்று சொல்ல விரும்புகிறேன். நானும் கஷ்டப்பட்டும் முன்னுக்கு வர முடியாதவன்தான். ஆனால் இதே போலொரு சூழ்நிலையில் நீங்கள் என்னிடம் "இல்லை" என்று சொன்னால் புரிந்துகொள்வேன். என்னவோ நீங்கள்தான் என்னிடம் கையேந்தி நிற்பது போல் நடந்துகொள்ள மாட்டேன்.

கடைசியாக ஒரு விஷயத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது முதலில் நான் உங்களுக்கு சொன்னதுதான்: இல்லை. நான் சொல்வது புரிகிறதா? புரியவில்லை என்றால் அது என் பிரச்னை இல்லை. இல்லை என்று நிறைய தடவை சொல்லிவிட்டேன். ஒரு விஷயத்தைப் பல தடவை சொன்னால் புரிந்துவிடாது என்பது எனக்கும் தெரியும். புரிந்துகொள்ள மிக எளிமையான ஒரு விஷயத்தைப் பல முறை சொன்னால் இன்னும் தெளிவாகவெல்லாம் புரிந்துவிடாது என்பதும் எனக்குத் தெரியும். தெளிவுக்கும் வரம்புகள் உண்டு. நான் திரும்பத் திரும்ப சொல்லக் காரணம், நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல மனிதனுக்கு ஒரு சொல். உங்களுக்கு ஒரு சொல் போதவில்லை. அதனால்தான் இவ்வளவும்.

வீட்டில் எல்லோரையும் விசாரித்ததாக சொல்லுங்கள். நீங்கள் நான் பார்த்துப் பல வருடங்களான நண்பராக இருந்து உங்கள் குடும்பத்தினரில் யாராவது நடுவில் இறந்துவிட்டிருந்தால் என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள். ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நான் வந்திருப்பேனே! நண்பர்கள் எதற்கு இருக்கிறார்கள், சொல்லுங்கள். இடையில் யாருக்காவது திருமணம் ஆகிவிட்டதா? என் வாழ்த்துக்கள். அதே நாளில் என் நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணம், அதனால்தான் வர முடியவில்லை.

பார்த்தீர்களா, என்னைத் தவிர உங்களுக்கு எத்தனை பேர் இருக்கிறார்கள்! அவர்களைக் கேட்காமல் என்னிடம் மட்டும் கேட்பது ஏன்? என்பால் உள்ள அன்பினாலா? என்பால் உள்ள அன்பைக் காட்ட உங்களுக்கு இதுதானா சமயம்? அதான் இல்லைன்னு சொல்லிட்டேனே, அப்புறம் ஏன் நிக்கிறே? போ, போ!

என்னைப் போல் பத்தி எழுதுவது எப்படி?



சமகால இதழியலில் எல்லோரும் எழுத்து கூட்டி பத்தி எழுதுகிறார்கள். எல்லோரும் பத்தி கட்டுரைகளை தொகுப்பாக்குகிறார்கள். ஆனால் பத்தி எழுத்தாளர்களில் எத்தனை பேர் என்னைப் போல் பிரபலத்தை அனுபவிக்கிறார்கள்? நான் பல முக்கிய நாவல்களை எழுதியிருக்கிறேன். குழந்தைகளைக்கூட விட்டு வைக்காமல் அவர்களுக்கும் புத்தகம் எழுதியிருக்கிறேன். எனினும் எனது பிரபலத்திற்கு பத்திதான் காரணம். குறைந்த உழைப்பில் நிறைந்த வருமானம் பத்தி எழுத்தில்தான் கிடைக்கிறது. இந்தப் பிரபலம் எல்லோருக்கும் வாய்க்காத காரணம் அவர்கள் நான் அல்ல என்பதே. எனது வெற்றியால் உந்தப்பட்டு பத்தி எழுத துவங்குபவர்கள் என்னைப் போலவே எழுதினால் ஓரளவு வெற்றியடையலாம். இப்போது அரிச்சுவடியை கற்போமா?

முதலில் ஏதோ ஆழமாக சொல்ல முயல்வது போன்ற வரிகளுடன் தொடங்க வேண்டும். ஆனால் ஆழமாக இருந்துவிடக்கூடாது. அது பத்தி எழுத்துக்கு எதிரானது. அந்த வரிகளில் இல்லாத கருத்தை விளக்கிசொல்ல சொந்த அனுபவத்திலிருந்து சப்பையான ஒரு சம்பவத்தை நினைவு கூற வேண்டும். அது சமீபத்தில் நடந்ததாக இருப்பது நல்லது. சம்பவத்தை கூறி முடித்தபின் மீண்டும் ஏதோ ஆழமாக சொல்ல முயல்வது போன்ற வரிகளில் முடிக்க வேண்டும். உதாரணமாக ஒரு துவக்கம்:-

> வாழ்க்கையை எல்லோரும் ஒரே விதமாக வாழ்வதில்லை. ஒவ்வொருவர் மனதிலும் வெவ்வேறு அபிலாஷைகள் கனன்றுகொண்டிருக்கின்றன. கடந்த மாதம் ரயிலில் திருப்பூரை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது ஒரு சகபயணி* என்னை அடிக்கடி உற்றுப் பார்த்தபடி இருந்தார். அவர் என்னிடம் பேச விரும்பி கூச்சத்தால் தயங்குவது போல் தெரிந்தது. நானே அவரிடம் மெல்லப் பேச்சு கொடுத்தேன். நான் அவரது பள்ளி ஆசிரியர் ஒருவரை போல் இருந்ததாகவும் ஆனால் அந்த ஆசிரியருக்கு ஏழு கண்கள் என்றும் அவர் கூறினார்.
>
> பேசிக்கொண்டிருந்தபோது என் சகபயணி தன்னை பற்றிய விவரங்களை பகிர்ந்துகொண்டார். அவர் திருச்சியில் விவசாயம் செய்துவந்தார். வருமானம் மிக குறைவு. செலவுக்கு காசில்லை. வசதியான பின்னணி இருந்த மனைவிக்கு வங்கியில் கணிசமான அளவு பணம் இருந்தது. ஆனால் மிகுந்த ஆன்மீக ஈடுபாடு கொண்ட அந்தப் பெண்மணி தன் பணத்தை கோவில் குளங்களுக்கு வாரி வழங்குவதிலேயே செலவிட்டார். சொத்து மட்டும் கணவர் பெயருக்கு எழுதி வைத்திருந்தார். சகபயணி சொத்துக்காக மனைவியை ஏர் பில்லோவால் கொல்ல பலமுறை முயன்று தோல்வியடைந்திருக்கிறார். திருப்பூரில் கூடுதல் பஞ்சு வைத்த கனத்த தலையணைகள் கிடைக்கும் என்று கேள்விப்பட்டு பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

அவர் கூறியது முழுவதையும் வியப்புடன் கேட்டேன். மனைவியை கொலை செய்ய காற்று தலையணையை பயன்படுத்தும் அளவிற்கு சமகால கணவர்கள் நிதர்சனத்திலிருந்து விலகி இருக்கிறார்களா? மனைவியை கொல்ல வேறு வழிகள் தெரியாதவனை சமூகம் அங்கீகரிக்க வேண்டுமா? (இப்படியே இன்னும் இரு பாராக்கள்)

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் சச்சரவுகள் திருமணம் என்கிற சடங்கு தோன்றிய காலத்திலிருந்தே புழங்கிவருகிறது. பல சமயங்களில் மனைவியின் கொலையே சுமுகமான தீர்வாக இருக்கிறது. அவ்வாறு கொலை செய்த பின் ஒரு கணவனுக்கு ஏற்படும் போலீஸ் நடவடிக்கை போன்ற நடைமுறை சிக்கல்கள் எண்ணற்ற புத்தகங்களின் கருவாகியிருக்கின்றன. (இப்படியே இன்னும் சுமார் ஆறு பாராக்கள்)

* உங்களுக்கு சகபயணி யாரும் இல்லாதிருந்தால் மட்டுமே இப்படி எழுத வேண்டும். நீங்கள் அந்த பயணத்திற்கே சென்றிருக்கவில்லை என்றால் இன்னும் நல்லது.

மனைவியை கணவன் கொல்வது பற்றி உலக இலக்கியம் என்ன சொல்கிறது? உங்களுக்கு தெரியவில்லை என்றால் வலைதளத்தில் தேடுங்கள். எடுத்துக்காட்டாக டபிள்யூடபிள்யூ டாட்காம் கூகுளில் male person killing wife latin american literature only என தேடுங்கள். தேடலில் தானாக வந்து மாட்டும் தகவல்களையும் சேர்க்கலாம். தகவல் கிடைத்தபின் அதை மேற்கண்ட சம்பவத்துடன் இணைக்க வேண்டும். கதையின் முடிவில் ஆழமான கருத்துகளை மறக்கக்கூடாது....

அமெரிக்க எழுத்தாளர் வில்லியம் பரோஸின் 'நேக்கட் லஞ்ச்' (Naked Lunch) என்கிற நாவலில், நாயகன் வில்லியம் லீ-க்கு பூச்சி மருந்து அடிப்பதால் ஏற்படும் மூச்சு திணறல் அவனுள் போதை மற்றும் காம உணர்வை கிளறுகிறது.

இத்தகைய புலனின்பம் சார்ந்த அக தேடலின்போது தனது மனைவியை தவறுதலாக பூச்சி மருந்தால் கொல்கிறான். இதனால் ஏர் பில்லோவால் அவளை அமுக்கி கொல்லும் திட்டம் முறியடிக்கப்படுகிறது (ஏர் பில்லோவால் கொல்ல முடியாது என்றாலும் சர்ரியலிச நாவல் என்பதால் இதில் யதார்த்தம் தவிர்க்கப்படுகிறது). வில்லியம் மனைவியை திட்டமிட்டு கொன்றதாக போலீஸ் சந்தேகிக்கிறது. காவல் துறை பெரிய அதிகாரி அவன் வீட்டிற்கு வந்து, 'உங்கள் மனைவிக்கு யாராவது எதிரிகள் இருக்கிறார்களா?' என்று கேட்கிறார்.

போலீசிடமிருந்து தப்பிக்க நாயகன் தேசாந்திரம் போகிறான். பிடிபடும் கோர அச்சத்தின் தீவிரம் தந்த வேதனை அவனை ஒருபுறம் நெருக்க, மறுபுறம் வாழ்க்கை அவனுக்கு பலவித அனுபவங்களை புகட்டியபடி இருக்கிறது.

இந்தப் பாடங்களை நாமும் தினமும் கற்றுக்கொண்டுதான் இருக்கிறோம். வாழ்க்கை கற்பனை கதாபாத்திரங்களுக்கும் நிஜமனிதர்களுக்கும் வித்யாசம் பார்ப்பதில்லை. சூரிய ஒளி தெருவிலுள்ள மழைநீர் குட்டைகளில் பிரதிபலிப்பது போல் என் சகபயணியின் கனவு பல கணவர்களின் மனதில் புழங்குகிறது. அடைய இயலாத ஒரு குதிரைத் தந்தமாகவே அந்த கனவு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உறங்குகிறது. (இதே ரீதியில் இன்னும் இரு பாராக்கள்)

இலக்கிய கதை முடிந்தது. இப்போது உலக சினிமா படத்தை பற்றி எழுத வேண்டும். தரமான படமாக இருக்க தேவையில்லை. வெளிநாட்டவரால் வெளிநாட்டில் எடுக்கப்பட்ட படமாக இருந்தால் போதும். அழகியல் நேர்த்தி துடித்து வெளிக்கிளப்பும் உளவியல் ஒருங்கிணைப்புக்காக அதே பார்முலாவை பின்பற்றுங்கள்....

1991-ம் ஆண்டு ஷோஹை இமமுரா இயக்கி டோக்கியோவில் வெளிவந்த 'த ஈல்' (The Eel)

என்ற படம் கணவர்களின் தீராத கொலையுணர்வைப் பற்றியது. கோஜி யகுஷோ நடித்த இந்தப் படம், மனைவியின் ரகசிய சுரோணித சிநேகிதத்தை கண்டுபிடிக்கும் ஒரு கணவன் அவளை கொன்றுவிட்டு சிறைக்குச் சென்று பின்னர் ஜாமீனில் வெளிவந்து முடிதிருத்து நிலையம் அமைத்து இயல்பு வாழ்க்கையை மீட்க முயல்வதையும் அவன் கடையில் வேலைசெய்ய வரும் ஒரு பெண் அவன்பால் ஈர்க்கப்படுவதையும் பற்றியது.

டகுரோ யமாஷிட்டா .... (இரண்டு பாராக்களில் கதையை விளக்குங்கள்)

டகுரோவும் கெய்கோவும் சுய வாழ்க்கையின் அக நெருக்கடிகளை தத்தமது வழிமுறைகளில் எதிர்கொள்ளும் மனப்பான்மையின் இரண்டு மாறுபட்ட வடிவங்கள். சமூகம் அவர்கள் பலவீனத்தை அறிந்து பந்தாடுகிறது. உலக சினிமா பாத்திரங்கள் என்பதால் அவர்களுக்கு அக தேடல், அடையாள சிக்கல்களும் உள்ளன. (முடிந்தால் வளர்த்துங்கள்)

அடுத்து பெட்டிச் செய்தி இருந்தால் அதில் உங்களுக்கு பிடிக்காத யாரை பற்றியாவது எழுதுங்கள். அவர்களைப் பற்றி எழுதி கேவலப்படுத்த வேறு சந்தர்ப்பம் வாய்க்காது. எடுத்துக்காட்டாக எனக்கு சிட்னி ஷெல்டனை பிடிக்காது. அவரைப் புகழ்ந்து பதினைந்து வரிகள் எழுதினால் வேலை முடிந்தது.

இடம் இருந்தால் - அனேகமாக இருக்காது - ஒரு ஜென் கதையை சேர்த்துக்கொள்ளுங்கள். வலைதளத்தில் தேடினால் கிடைக்கும். கிடைக்கவில்லை என்றால் நீங்களே எழுதிவிடலாம். மாதிரிக்கு:-

"குருவே, முரண்களை சேர்க்கமுடியுமா?" என ஓர் இளந்துறவி லி மு பாயிடம் கேட்டார்.

தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த லி மு பாய் கொதிக்கும் வெந்நீரை அவர் முகத்தில் விட்டெறிந்து, "முடியாமலா?" என்றார்.

யார் வேண்டுமானாலும் பத்தி எழுதலாம். ஆனால் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும். பத்திதானே என்று அலட்சியமாக எழுதக்கூடாது. எழுத்து எளிமையாகவும் காத்திரமாகவும் இருக்க வேண்டும். சிலருக்கு எளிமை பிரம்ம பிரயத்தனம் செய்தாலும் கைவராது. வேறு சிலருக்கு சிக்கலான எழுத்து மட்டுமே கைவரும். இதற்கு உதாரணங்களை எனது புத்தகங்களின் பின்னட்டை விளக்கங்களில் பார்க்கலாம்.

வெளிநாட்டவர்களின் பெயர்களை ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாக எழுத வேண்டும். உதாரணமாக, அன்னா கிரிகோரிவ்னா, அன்னா கிரிகோர்வினா, அன்னா கிரிகிரிவேனா ஆகிய மூன்று பெயர்களும் ஒரே நபரைக் குறிக்கின்றன. அதே சமயத்தில் மூன்று பெயர்களும் தவறாக எழுதப்பட்டுள்ளன. இது முக்கியம்.

தகவல் பிழைகளில் கவனம் தேவை. ஆங்கிலத்தில் Authenticity என்கிறார்கள். ஒரு கட்டுரைக்கு ஆதண்டிசிடி தருவது தகவல் பிழைகளே. ஆகவே உங்கள் பத்தியிலோ அல்லது கட்டுரையிலோ குறைந்தது இரண்டு தகவல் பிழைகளாவது இருக்க வேண்டும். தகவல் பிழைகள் இல்லை என்றால் கட்டுரை திருப்பி அனுப்பப்படலாம். இது என்னுடைய அனுபவம். இலக்கணப் பிழைகளும் எழுத்து நடையை மெருகேற்றும், ஆனால் அவை கட்டாயமல்ல.

இறுதியாக, மிதமிஞ்சிய தன்னம்பிக்கையைக் கைகொள்ளுங்கள். அது என்னைப் போன்ற ஒரு எழுத்தாளனுக்கு மிகப்பெரிய சொத்து. எனக்கு எல்லாம் தெரியும் என முகம் பார்க்கும் கண்ணாடியை பார்த்து சொல்லிக்கொள்ளுங்கள். என்னைப் போல் எழுத அபிலாஷித்தால் உங்களை உலக எழுத்தாளர்களின் வரிசையில் ஒருவராக நினைத்துக்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அடித்தளமான ஒரு விதிமுறை உண்டு. அது:- பத்தி எழுத்து பத்தி எழுத்தாக இருக்க வேண்டும்.

எனது பிரெஞ்சுப் புரட்சி அனுபவங்கள்



ஐரோப்பிய அரசியலையும் அதன் மூலம் உலக அரசியலையும் உலக நாடுகளுக்கிடையிலான அரசியல், கலாச்சார, வர்த்தக உறவுகளையும் மட்டுமல்லாது கலை, இலக்கியத் துறைகளையும் பலவர்க்கத்து மக்களதும் வாழ்முறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்ட ஒரு பெருநிகழ்வு பிரெஞ்சுப் புரட்சியாகும். பொதுவாக ஒரு வரலாற்றுச் சம்பவம் நிகழ்ந்து சில நூற்றாண்டுகள் ஆன பின்னர் அது குறித்துப் பலவிதக் கேள்விகளை வரலாற்றாய்வாளர்கள் எழுப்புவதுண்டு. உண்மையில் நடந்தது என்னவென்ற தேட்டையில் வரலாற்றறிஞர்கள் ஈடுபடத் தொடங்குவதுண்டு. அது போலவே பிரெஞ்சுப் புரட்சி குறித்தும் பல கருதுகோள்கள் உண்டு ஆகும்.

பிரெஞ்சுப் புரட்சியானது பிரான்சில் நிகழவில்லை; அது பர்மாவில் நிகழ்ந்தது என ஒரு சாராரும், பிரெஞ்சுப் புரட்சியானது பிரான்சில் நிகழவில்லை; அது கனடாவில் நிகழ்ந்தது என இன்னொரு சாராரும், இவ்விருபெரும் புரட்சிகளுமே கட்டுக்கதைகள்தாம் எனப் பிறிதொரு சாராரும் கூறிவருகின்றனர். எனது இப்பதிவானது இம்மாறுபடும் கருத்துகளால் விளைந்துள்ள குழப்பங்களைக் களைவதுடன் பிரெஞ்சுப் புரட்சி நடந்தது பிரான்சில்தான் என்பதான உண்மையை நிறுவ முயல்கின்றது.

பிரெஞ்சுப் புரட்சி நிகழ்ந்த ஆண்டான 1789இன்போது நான் பிரான்சில் - இன்னும் கூறப்போனால் பாரீஸ் நகரில் - இருந்தேன். அக்காலத்தில் சென்னையிலிருந்து வியன்னாவிற்கு நேரடிப் பேருந்து கிடையாது. கல்கத்தா சென்று அங்கிருந்து சுமார் 750 மணிநேரம் ரயிலில் பயணித்துப் பாரீஸில் இறங்கி வியன்னா செல்லும் பேருந்தைப் பிடிக்க வேண்டும். பாரீஸிலிருந்து வியன்னாவிற்குப் பயணம் 12 மணிநேரம்தான். நான் வியன்னாவிற்குச் சென்ற காரணம், ஸ்பானிய நாவலாசிரியர் செர்வாண்டஸின் ஒன்றரை நூற்றாண்டு விழாவில் கட்டுரை வாசிக்க என்னை அழைத்திருந்தனர். 02-12-1789 அன்று நான் பாரீஸில் கால் பதித்தபோது வசந்தகாலம். பாரீஸின் வசந்தகாலம் அமெரிக்க இலையுதிர்காலம் போன்று உலகப் பிரசித்தி பெற்றது. விழா நடைபெற இன்னும் இரு நாட்கள் இருந்ததால் அங்கு தங்கத் தீர்மானித்தேன்.

நான் தங்கிய விடுதியான 'பலெ திராத்வார் தெ பாரி' (Palais Tröttoir de Pàris) மூந்நூறு வருடப் பழமைவாய்ந்ததாகும். பல பிரெஞ்சு அறிவுஜீவிகளின் சரணாலயமாக, விவாதத் தலமாக அது இருந்தது. பிரெஞ்சுப் புரட்சி நடந்த அன்று அதைச் சிறிதும் எதிர்பார்த்திராத பலரில் நானும் ஒருவர். எனக்குப் பிரெஞ்சு மொழி தெரிந்திருந்தால் அந்நாட்டு நாளேடுகளைப் படித்து பிரெஞ்சுப் புரட்சியை எதிர்நோக்கியிருப்பேன். அது எனது முதல் பாரீஸ் விஜயமாதலால் நகரின் பழம்பெருமை வாய்ந்த நினைவுச் சின்னங்களைப் பார்க்கப் புறப்பட்டேன். முலான் ரௌஜ் அருகே நல்ல காபி கிடைக்கும் என நண்பர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டிருந்தேன்.

புரட்சி நடந்த அன்று காலை சுமார் 11 மணியளவில் 'பிஸ்த்ரோ' ஒன்றில் தேனீர் அருந்தியபடி

தெருக் காட்சிகளை ரசித்துக்கொண்டிருந்தேன் ('பிஸ்த்ரோக்கள்' என்பவை திறந்தவெளி உணவு விடுதிகளாகும். இங்குச் சிற்றுண்டி மட்டுமே கிடைக்கும்; சாப்பாடு கிடையாது. இவ்விடுதிகளில் மக்கள் பிரெஞ்சு நாளேடுகளைப் புரட்டியபடி பிரெஞ்சு பானங்கள் அருந்துவதும் அன்றாடக் காட்சி). அப்போது திடீரென ஒரு பேரோசை எழுந்தது. சுமார் இருபது பிரெஞ்சுக்காரர்கள் திபுதிபுவென ஓடிவந்தனர். ஒரு சிலர் விடுதியில் நுழைந்து 'லா ரெவல்யூசியோன்! லா ரெவல்யூசியோன்!!' எனக் கத்தினர். எனக்கு அம்மொழி தெரியாது எனினும் பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்திற்குக் கடத்தப்பட்ட 20,000 சொற்களில் சில நூறுகளாவது எனக்குத் தெரிந்திருந்தன. புரட்சி எனும் பொருள் கொண்ட 'ரெவல்யூஷன்' என்பதும் அதில் ஒன்று. ரெவல்யூசியோன் என்பதன் பொருளை அதன் மூலமாகப் புரிந்துகொண்டேன். உலகைச் சுனாமியாய்ப் புரட்டிப் போட்ட பிரெஞ்சுப் புரட்சி வந்துவிட்டதென்பதும் அது தற்போது அந்தத் தெருவழியே வந்துகொண்டிருந்தது என்பதும் எனக்குப் புரியத் துவங்கின.

எனது வாழ்நாள்க் காலத்தில் ஒருசிறு தகராற்றைக் கூடப் பார்த்தறியாதவன் நான். ஆகவே புரட்சிக்கு எவ்வாறு உடனடி எதிர்வினையாற்றுவது என்றறியாது குழம்பி நான் நிற்கையினில், சுமார் ஆயிரம் பிரெஞ்சுப் பொதுமக்கள் 'வீவ் லா பிரான்ஸ்! வீவ் லா பிரான்ஸ்!! (பிரான்ஸ் வாழ்க!) எனக் கோஷமிட்டபடி அத்தெருவில் விரைந்துவந்தனர். கிட்டத்தட்ட ஒவ்வொருவரதும் கைகளில் கொடிகளிருந்தன. சிறிது தொலைவிலிருந்து துப்பாக்கிக் குண்டுச் சத்தங்கள் எழும்பின. நான் பிரெஞ்சுப் புரட்சியை மாடியிலிருந்து பார்க்கலாமென விரைந்தேன். மொட்டை மாடியில் சுமார் இருநூறு பேர் பழைய நூல்களையும் நாளேடுகளையும் சஞ்சிகைகளையும் துண்டுதுண்டாகக் கிழித்துப்போட்டுக்கொண்டிருந்தனர். அது ஜனத் திரளின் மீது தூவுவதற்காக எனப் பின்னரே எனக்குத் தெரியவந்தது. மொட்டை மாடியில் இடமின்றி உடனடியாக முதல் தளத்திற்கு இறங்கினேன்.

முதல் தளத்தில் கம்பளி நூல் கொண்டு உடை பின்னிக்கொண்டிருந்த ஒரு சுமார் 35 வயது மதிக்கத்தக்க பெண்மணி புரட்சி வெடித்த காரணியை எனக்கு எடுத்துரைத்தார். மன்னர் பதினாறாம் லூயியின் மோசமான ஆட்சியினால் நாட்டில் பலவாறான சமூகச் சீர்கேடுகளும் சீர்திருத்தமின்மையும் தலைவிரித்தாடத் தொடங்கியிருந்தன. பிரெஞ்சுப் பிரபுக்களும் பிறவகைப்பட்ட செல்வந்தர்களும் செழிப்பில் திளைத்துக்கொண்டிருந்தனர். மக்கள் மனதில் சற்றுச் சற்றாக அதிருப்தி வலுத்தது. வால்டேர், ரூஸோ, திதரோ முதலான சிந்தனையாளர்கள் மற்றும் மக்கள்நலப் பணியாளர்கள் மேற்கொண்ட அனைத்துப் போராட்டங்களும் திட்டமிடப்படாத சிறைநிரப்புப் போராட்டங்களாயின. 'ரொட்டி இல்லை என்றால் என்ன, கேக் சாப்பிடவும்' என்கிற ராணியாரிணி மேரி அந்த்வானெத்தினது பேச்சு, மக்களது குமுறலுக்கு எரிபொருளூட்டவே செய்திருந்தது.

உயர்த்தப்பட்ட கைகளில் ஆயுதமேந்திக் கோஷமிட்டவாறு தெருக்களில் பெருந்திரளாய்ச் சுற்றியலைந்து புரட்சிக்குக் கூட்டம் திரட்டியபடி அரண்மனையை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தவர்களுடைய - புரட்சியாளர்களுடைய - வாழ்க்கையினது அவலங்களையும் போராட்ட வழிமுறைகளையும் அந்த அம்மாள் எனக்கு விளக்கினார். ஒன்றிற்கு மேற்பட்டோரின்றிப் புரட்சி சாத்தியமானதாக சரித்திரமில்லை என ஜெர்மானிய எழுத்தாளர் எலியாஸ் கானட்டி எழுதியிருப்பது நினைவில் தோன்றி மறைந்தது.

நானிருந்த தெருவைக் கடந்திருந்த அதே ஐம்பதினாயிரம் பேரே மீள மீள வந்துகொண்டிருப்பதான உணர்வு எனக்கேற்படும் வகையில் மக்கள் வெள்ளம் புழங்கியபடி இருந்தது. பாதாள ரயில் நிலையத்திற்குச் செல்லும் பாதை முழுவதிலும் புரட்சியாளர்களும் அவர்களது மனைவியரும் குழந்தைகளும் நிரம்பியிருந்தனர். மன்னரும் அரசியும் சிரச்சேதம் செய்யப்பட்டுவிட்டனர் எனவும் அவர்களைக் கொல்லுவதற்கென்றே அவசரமாகக் கண்டுபிடிக்கப்பட்ட 'கில்லட்டின்' கருவி அதற்குப் பயன்படுத்தப்பட்டது என்றும் மூட்டை

முடிச்சுக்களுடன் காணப்பட்ட பிரிட்டிஷ் நாட்டவர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

அரண்மனையிலிருந்து திரும்பி வந்தவாறு இருந்த ஒரு கூட்டமானது கழுத்தில் நகைகள் மற்றும் கைகளில் பெரிய விலையுயர்ந்த ஜாடிகளுடன் காட்சியளித்தது. மாலைச் செய்தித்தாள் படித்துக்கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர் ஒருவரிடம் புரட்சி எப்போது முடியும் என ஆங்கிலத்தில் வினவினேன். குறைந்தபட்சம் அதிகாலை மூன்று மணி ஆகலாம் என்று அவர் பிரெஞ்சு மொழியில் அளித்த பதிலின் பொருளை சென்னைக்குத் திரும்பி வந்ததும் புரிந்துகொண்டேன்.

புரட்சி என்று வந்துவிட்டால் புரட்சியாளர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என வர்ணிக்கும் நுட்பமான பாடல் ஒன்று ஸ்வப்னவாசவதத்தையில் உண்டு. ஸ்ரீரங்கம் கீதாசாரியார் உரையைக் கேளுங்கள் -

> "தீக்குச்சி தானாகப் பற்றிக்கொள்ளாது. அதை யாராவது வந்து உரச வேண்டும். தீக்குச்சி வம்பு தும்பு வைத்துக்கொள்ளாது. அதாவது யாராவது வந்து உசுப்பும் வரையில். ஒவ்வொரு புரட்சியாளனின் மனமும் தலா ஒரு தீக்குச்சியைப் போன்றதுவே."

பிரெஞ்சுப் புரட்சி பற்றி வால்டேர் சொல்வதைக் கேளுங்கள்:

> "புரட்சிக்கான தேவை பற்றி எழுத்தாளன், தத்துவ ஞானி என்ற முறையில் நிறைய பேசியாயிற்று. இனி நீங்கள் ஆச்சு, ராணி மேரி ஆச்சு என்று விட்டுவிட்டேன். இனி ரொம்பக் காலத்திற்கு எந்தப் பத்திரிகைக்கும் பத்தி எழுதப்போவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். பிரெஞ்சுக்காரர்களுக்கு என் பத்தியை எதிலும் படிக்கவில்லை என்றால் உருளைக்கிழங்கு செரிக்காது."

வால்டேரின் சமகாலச் சிந்தனையாளரான ரூஸோவின் கருத்தும் வால்டேரினுடையதுடன் கிட்டத்தட்ட ஒத்துப்போகிறது:

> "அந்த்வானெத்தின் கொடுங்கோலாட்சியை ஒழிக்கப் புரட்சி அவசியம். ஆனால் புரட்சி என்பது கொடியவர்கள் கூடுமிடம் ஆகிவிடக் கூடாது."

இத்தனைக் களேபரத்திலிருந்து தப்பித்து வந்து மாம்பலம் பாசஞ்சர் ரயிலைப் பிடிக்கும்போது காலை 5 மணி ஆகிவிட்டிருந்தது. டிக்கெட்டை வாங்கிக்கொண்டு வந்து ஒரு பெஞ்சிற்குப் புட்டத்தைக் கொடுத்தேன். உலகின் இன்னொரு மூலையில் புரட்சி நடப்பதற்கான எந்த அறிகுறியையும் காணோம். எனக்கு சுக்குக் காபி தேவைப்படுமா என ஆவலுடன் வந்து கேட்ட இளைஞனிடம் சில்லறையைக் கொடுத்து ஒன்று வாங்கிக் குடித்தேன். வால்டேரும் ரூஸோவும் தெரியாத அவனுக்கு அன்று நிச்சயம் உருளைக்கிழங்கு செரித்திருக்கும்.

மனம் திருந்திய மன்னன்

(குழந்தைகளுக்கான மீபுனைவு)

துவாபர யுகத்தில் மயூரசன்மன் என்றொரு மன்னன் வைரபுரி என்ற நாட்டில் கொடுங்கோலாட்சி புரிந்துவந்தான். பல ஆண்டுகள் தன் பிரஜைகளைக் கொடுமைப்படுத்திவந்த மன்னன், திடீரென ஒரு நாள் தன் தவறை உணர்ந்து மனம் வருந்தினான். தான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் தேட விரும்பி ஒரு முனிவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பாதபூஜை நடத்தி அன்னதானம் செய்தான்.

போஜனம் ஆனவுடன் முனிபுங்கவர், "ராஜனே! எனக்கு போஜனம் அளிப்பதால் மட்டும் நீ செய்த பாவங்கள் கரைந்துவிடாது. அதற்கு நீ பிரம்மதேவனைக் குறித்து நாற்பத்தியாறு லக்ஷம் ஆண்டுகள் தவம் புரிய வேண்டும்" என்று கூறினார்.

மன்னன் முனிவரையும் அவரது குடும்பத்தினரையும் வெட்டிக் கொன்றுவிட்டு பிரம்மனை நோக்கித் தவமிருக்கலானான். இடி, மின்னல், மழை, வெள்ளம், புயல், வெயில் என எல்லா இயற்கைச் சீற்றங்களையும் பொறுத்துக்கொண்டு பிரம்ம தரிசனத்துக்காகத் தவம் கிடந்தான்.


இவ்வாறாகப் பதினாயிரம் ஆண்டுகள் கழிந்தன. திடீரென ஒரு நாள் அவன் முன்னே ஓர் ஒளிப் பிழம்பு தோன்றியது. அதிலிருந்து அழகிய தேவகன்னிகை ஒருத்தி வெளிப்பட்டுப் புன்னகைத்தாள். "நரனே! நான் பிரம்மதேவனின் காரியதரிசி. நீ செய்திருக்கும் எண்ணற்ற பாவங்களுக்கு அவர் அவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட மாட்டார். நீ முட்களின் மீது ஒற்றைக் காலில் நின்று இன்னும் ஐம்பத்தியெட்டு லக்ஷம் ஆண்டுகள் தவம் புரிய வேண்டும்" என்று கூறி மறைந்தாள்.

மயூரசன்மன் அவள் சொற்படி முட்களின் மீது ஒற்றைக் காலில் நின்று தவமிருந்தான். அறுபத்தியிரண்டு லக்ஷம் ஆண்டுகள் கழித்து மன்னனுக்கு நா வறண்டுபோய் சொல்லொணாத் தாகம் ஏற்பட்டுத் தவம் கலைந்தது. சிறிது நீர் அருந்திவிட்டுத் தவத்தைத் தொடரலாம் என்று எண்ணிய மன்னன், அந்தக் கானகத்தில் நீர் தேடி நெடுந்தூரம் அலைந்தான். அருவிகள், ஓடைகள் எல்லாம் வற்றியிருந்தன. சுனைகள் காய்ந்த இலைகளால் நிரம்பியிருந்தன. அவனிருந்த மரத்தைத் தவிர எல்லா மரங்களும் வெட்டப்பட்டிருந்தன. மனம் வெறுத்த மன்னன் காட்டிலிருந்து வெளியேறினான்.

மயூரசன்மன் நாட்டுக்குள் நுழைந்ததும் ஆட்டோக்களை, கார்களை, தொலைபேசி பூத்களை, மொபைல் போன் கடைகளை, திரையரங்குகளைக் கண்டான். யுகம் மாறிவிட்டது என்றும் தன் தவத்தை இனியும் தொடரவியலாது என்றும் உணர்ந்தான். கலியுகத் தொழில்கள் எவையும் தெரியாததால் மயூரசன்மன் தாகத்தைத் தணித்துக்கொண்ட பின் காசிக்குச் சென்று பிச்சை எடுக்கத் தொடங்கினான்.

வண்ணத்துப்பூச்சியும் விசித்திர ஓவியனும்

(குழந்தைகளுக்கான மீபுனைவு)



மனித வாழ்க்கை போல் நீண்டு நெடிந்து சுழித்தோடும் ஒரு ஆற்றின் கரையில் அமைந்திருந்தது ஒரு வனம். அந்த வனத்தில் ஜம்பு என்றொரு வண்ணத்துப்பூச்சி இருந்தது.

பொதுப்புத்தியில் பதிந்துள்ள வண்ணத்துப்பூச்சிகளைப் போல் வண்ண-வடிவ விசித்திரங்களை கொண்டதல்ல நமது ஜம்பு. அது பிறவியிலேயே வெண்ணிறம் கொண்டதாக இருந்தது. மற்ற வண்ணத்துப்பூச்சிகள் வண்ணமயமாக இருந்ததைப் பார்த்து ஜம்புவுக்கு அசூயையும் விசனமும் ஏற்பட்டது.

தொட்டதில் எல்லாம் படைப்பூக்கம் துலங்கச் செய்த இயற்கைக்கு தன்னைப் படைக்கும்போது மட்டும் பாரபட்சம் ஏனோ என வருந்தியது ஜம்பு. நியாயம்தானே?

வெறும் வெள்ளை நிறத்தால் கிண்டலுக்கும் கேலிக்கும் ஜம்பு ஆளானது. மலர் விட்டு மலர் தாவி மகரந்தம் உறிஞ்சும்போது ஜம்புவின் கண்ணீரால் தேனும் உப்பு கரித்தது.

நான் ஒரு வண்ணத்துப்பூச்சியா அல்லது ஒரு குட்டிப் பறவையா? ஜம்புவுக்குக் குழப்பமாக இருந்தது.

ஜம்புவுக்கு ஒரே ஒரு நண்பன் இருந்தான். வனத்தின் நடுவில் இருந்த ஒரு பெரிய மலையில் அமைந்திருந்த ஒரு சுனைக்கு அருகே ஒரு இளநீல மரம் வளர்ந்துகொண்டிருந்தது. அதுதான் ஜம்புவின் தோழன்.

வண்ணம் சார்ந்த வருத்தத்தைத் தனதாக்கிக்கொள்ளும்போதெல்லாம் அந்த இலைநீள மரத்தின் அடிவாரத்தில் ஓய்வெடுப்பதை ஜம்பு வழக்கமாகக் கொண்டிருந்தது.

நண்பனின் வேதனையைக் காணச் சகிக்காத மரம், விசித்திர ஓவியனைப் பற்றிக் கூறியது.

"ஜம்பு, ஜம்பு, உனக்கு விசித்திர ஓவியன் உதவி செய்வான், தெரியுமா?" என்றது இளநீல மரம்.

"விசித்திர ஓவியனா? அட, யாரது? ஓவியன் என்றால் படம் வரைபவனா? எங்கிருக்கிறான்? எப்படி உதவுவான்?" என்று கேள்விகளை அடுக்கியது ஜம்பு.

கேள்விகளால் திக்குமுக்காடிய இளநீல மரம் சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு விசித்திர ஓவியனின் மாந்திரீக ஜாலத்தை விதந்தோதியது. அவன் இருக்கும் இடத்தை ஜம்புவுக்கு சொன்னது.

விசித்திர ஓவியன் தனக்கு வண்ணம் அளிப்பான் எனும் ஆவலில் ஜம்பு என்கிற வண்ணத்துப்பூச்சி பறந்தது, பறந்தது, பறந்துகொண்டே போனது. கடந்த காலத்தின் சுமை தந்த அழுத்தத்தில் பிறந்த வேதனையும் எதிர்கால நிவாரணத்தின் சாத்தியப்பாடு சார்ந்த நம்பிக்கையும் அது பொய்க்குமோ என்கிற பயமும் அதன் பாடலில் வெளிப்பட்டு எல்லா திசைகளிலும் எதிரொலித்தன.

வேகமாகப் பறக்க ஜம்பு என்ன பருந்தா? அது பல நாட்கள் செலவிட்டு வனத்தின் மறுபக்கம் விசித்திர ஓவியன் வாழ்ந்த மர வீட்டினை அடைந்தது.

மர வீட்டின் வாசலில் வீட்டை விடப் பெரிதான ஒரு பாறை இருந்தது. அந்த பாறையின் மேல் ஒரு மனிதன் கையில் ஒரு கொத்து நெற்கதிர்களை பிடித்திருந்தான். அம்மனிதன் அந்தக் கொத்தினை இப்படியும் அப்படியும் ஆட்டியவாறு இருந்தான்.

அவன் தலையில் ஒவ்வொரு முடியும் ஒவ்வொரு வண்ணத்தில் இருந்தது. கண்கள் இரண்டும் வெவ்வேறு வண்ணங்களில் இருந்தன. அதே போலக் காதுகளும்.

அவனைப் பார்த்ததும் அவன்தான் விசித்திர ஓவியன் என ஜம்புவுக்குப் புலப்பட்டது.

"விசித்திர ஓவியனே, விசித்திர ஓவியனே, எனக்கு வண்ணம் தருவாயா?" என்று ஜம்பு கேட்டது.

பேச வாயைத் திறந்த விசித்திர ஓவியன், சட்டென நிறுத்தி ஜம்புவின் பெயரைக் கேட்டான். ஜம்பு தன்னை வனத்தில் எல்லோரும் அழைக்கும் பெயரான "ஜம்பு" என்ற பெயரைச் சொன்னது.

"ஜம்பு, ஜம்பு, நான் உனக்கு வண்ணம் தருகிறேன், நீ எனக்கு ஒரு பாடல் பாடுவாயா?" என்று விசித்திர ஓவியன் கேட்டான். அவன் பற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வண்ணத்தில் இருந்தன.

ஜம்புவும் மகிழ்ச்சியுடன் சம்மதித்து ஒரு நீண்ட பாடலைப் பாடியது. ஜம்பு பாடப் பாட விசித்திர ஓவியன் நெற்கதிர் கொத்தைத் தூரிகையாகக் கட்டத் துவங்கினான்.


ஜம்பு பாடப் பாட மழை மேகங்கள் திரண்டன, பரஸ்பரம் மோதின, பெருமழை பெய்தது. ஜம்பு பாடலை நிறுத்தியது. மேகங்கள் விலகிக் கதிரவன் வெளிப்பட்டான். ஏழு வண்ணங்களோடு வானவில்லும் மெல்ல வெளிவந்தது.

நெற்கதிர் தூரிகையை வானவில்லின் வண்ணங்களில் தோய்த்து வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளுக்கு வண்ணம் கொடுத்தான் விசித்திர ஓவியன்.

வண்ணமே இல்லாமல் வாழ்க்கையில் பலவித இன்னல்களுக்கு உள்ளான வண்ணத்துப்பூச்சி, விசித்திர ஓவியனுக்கு நன்றி சொல்லிவிட்டுத் தனது வீட்டிற்கு பறந்தது, பறந்தது, பாடிக்கொண்டே பறந்தது. ஆனால் இம்முறை அதன் பாடலில் விகசித்தது புது வாழ்க்கை அளித்த நம்பிக்கையின் புத்துணர்வு.

திசை காட்டிப் பறவை

நெடுங்கதை



அத்தியாயம் 1 - குமாரின் கதை

முன்னொரு காலத்தில் சென்னையில் சேல்ஸ் பிரிவில் குமார் என்பவன் வேலை பார்த்துவந்தான். குமார் தன் பெயருக்கேற்பத் தங்கமானவனாக இருந்தான்.

இந்தக் கதை ஆரம்பித்தபோது குமாருக்கு 31 வயது. நடுவில் இரண்டாண்டுகள் நான் கதாசிரியத்தை நிறுத்தியிருந்தேன். கடன் தொல்லை. தங்கைகள் திருமணம். அப்பா, அம்மா பிக்கல் பிடுங்கல். கதை எழுதும் ஆர்வமே போய்விட்டது. முதல் தங்கையை ஒரு முன்வழுக்கைக்காரனுக்குக் கட்டிக் கொடுத்ததில் மனப்பாரம் தீர்ந்தது. அந்த நிம்மதி தந்த சந்தோஷத்தில் மீண்டும் எழுத நான் ஆரம்பித்தேன்.

இதற்கிடையில் எனக்கே தெரியாமல் குமாருக்கு 33 வயதாகிவிட்டிருந்தது. குமார் நாலு பேர் மதிக்கும்படியான சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தாலும் அவன் பார்வையில்லாத தனது தங்கைக்குத் திருமணம் செய்துவைக்கவும் தன் விதவைத் தாயை மேற்கொண்டு படிக்கவைக்கவும் அந்தச் சம்பளம் போதவில்லை.

இந்த சமயத்தில்தான் தெய்வாதீனமாக அவனுக்குத் தன்னுடைய அப்பாவுடன் பழக்கம் ஏற்பட்டது. அவனது அப்பாவுக்குக் குமாரின் தங்கமான குணம் பிடித்துப்போனது. அப்போது முதலாம் உலகப் போர் நடந்து முடிந்திருந்தது. ஹிட்லர் மெல்ல மெல்லப் பெரிய ஆளாகிக்கொண்டிருந்தான். கிழக்கு ஐரோப்பா முழுவதும் கம்யூனிசம் பரவிக்கொண்டிருந்தது. ஹிட்லர் தனது கட்சிக்காரர்களுடன் கொலோனில் பேரணி போகும் அதே நேரம் நான் அண்ணா சாலையில் தற்செயலாக சந்தித்த என் அலுவலக சகா சுப்பிரமணியத்திடம் ஒரு மரியாதைக்காக "சட்டை புதுசா?" என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

1920 வாக்கில் இந்தியா-பாகிஸ்தான் ஒரே நாடாக இருந்தது. அதனால் லட்சக்கணக்கான பாகிஸ்தானியர்கள் அப்போது இந்தியாவில்தான் இருந்தார்கள். குமாரின் அப்பாவும் அவர்களில் ஒருவர். நல்ல செல்வந்தர், ஆனால் பாகிஸ்தானியர். அவருக்குப் பிடித்த ஒரே இந்து என்றால் அது குமார்தான்.

*

அத்தியாயம் 2 - அப்பாவின் நண்பர்

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. பேப்பரையும் பேனாவையும் கீழே வைத்துவிட்டு கதவைத் திறக்கப் போனேன். வாசலில் நிழலாடியது. ஏறிட்டுப் பார்த்தால் வந்தவர் அப்பாவின் நண்பர்.

"அப்பா இருக்காரா?" என்றார் அப்பாவின் நண்பர்.

"இருக்கிறார், உள்ளே வாருங்கள்" என்று அவருக்கு ஒரு நாற்காலியையும் ஃபேனையும் போட்டுவிட்டுப் பக்கத்து அறைக்குப் போனேன்.

"அப்பா, உங்களைப் பார்க்க உங்கள் நண்பர் ஒருவர் வந்திருக்கிறார்" என்று அப்பாவிடம் சொன்னேன்.

"யாரு?" என்றார் அப்பா. அப்பாவுக்குப் பல நண்பர்கள்.

"அப்பாவின் நண்பர்" என்றேன்.

அப்பா கூடத்திற்கு வந்து அப்பாவின் நண்பருக்கு வணக்கம் சொன்னார். நான் என் அறை வாசலில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தேன். அப்போது என் அறையில் யாராவது இருந்திருந்தால் அவர்களுக்கு வாசலில் நிழலாடியிருக்கும். திரும்பிப் பார்த்தேன். இவை ஒன்றுமே நடக்காதது போல உள்ளே நான் மும்முரமாக எழுதிக்கொண்டிருந்தேன்.

அப்பாவின் நண்பர் ரொம்ப சத்தமாகப் பேசக்கூடியவர். அவர்களது சம்பாஷணை கதை எழுதிக்கொண்டிருக்கும் எனக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாதே என்று என் அறைக் கதவை சாத்தினேன்.

"ஏண்டா கதவை மூடுறே?" என்றார் அப்பாவின் நண்பர்.

"நான் உள்ளே கதை எழுதிக்கொண்டிருக்கிறேன். கதை எழுதும்போது எனக்கு முழுமையான நிசப்தம் தேவை" என்றேன்.

வெள்ளையர்கள் இந்தியாவுக்குக் கொண்டுவந்த பண்டங்களையும் நெவ்ஸ்கி தெருவில் கிழவன் பெல்யூக்கின் விற்றுவந்த பொருட்களையும் ஒப்பிட்டுக் காரசாரமாக அவர்கள் நடத்திக்கொண்டிருந்த உரையாடல் உள்ளே கதை எழுதிக்கொண்டிருக்கும் என் கவனத்தைக் கலைத்துவிடக் கூடாதே என்ற எனது ஆதங்கம் அவர்களுக்குப் புரிய வாய்ப்பில்லை.

நடுவில் நான் வெளியே வந்து என்னிடம் பேனா இரவல் வாங்கிக்கொண்டு போனேன். என்னிடம் எனக்குப் பிடிக்காத விஷயம் இதுதான். தீவிர எழுத்தாளனாக இருந்துகொண்டு எப்போதும் ஒரு பேனாவைக் கையில் வைத்திருக்காவிட்டால் அப்புறம் என்ன எழுத்தாளன்? இதை விளக்கினால் எனக்குப் புரியப்போவதில்லை.

*

அத்தியாயம் 3 - குமாரின் அப்பா

குமாரின் இரண்டாவது தங்கைக்கு வந்த வரன்கள் எல்லாம் வந்த வேகத்தில் திரும்பிப் போனது.

ஏனென்றால் அவனது அப்பா பாகிஸ்தானியர் என்பதால் யாரும் குமாரின் தங்கையை ஏற்றுக்கொள்ள விரும்பாததே காரணம். குமாரின் அப்பா இந்துவாக இருந்திருந்தால் அவர்கள் அவரது தேசிய அடையாளத்தை மன்னித்திருக்கக்கூடும்.

நானோ இயற்கையிலேயே இரக்க குணதாரி. குமாரினுடைய தங்கையினது திருமணம் அவனது அப்பாவினால் தடைபட்டிடுவது கண்டு என் மனம் வேதனையுற்றது.

நான் உடனடியாக இந்தச் சூழ்நிலையை மாற்றவில்லை என்றால் குமாரோ அல்லது அவனது அல்லக்கைகளோ என்னைத் தவறாக நினைத்துக்கொள்ள வாய்ப்பிருந்தது. தாமதமில்லாமல் குமாரின் அப்பாவை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. திருமணம் ஆக வேண்டிய ஒரு பெண்ணின் அப்பா பாகிஸ்தானியராக இருப்பது பிரச்சினை என்றால் அவர் பாகிஸ்தானியராக இல்லாதிருப்பதே நல்லது.

வெள்ளைக்காரப் பிரபு ஒருவர் கொடுத்த விருந்து ஒன்றில் குமாருக்கு அவரது அப்பாவை யாரோ அறிமுகப்படுத்திவைத்தார்கள். குமாரின் அப்பா பிரசித்தி பெற்ற வைத்தியர் வாங் ஃபெய் ஹுங். சீனாவைச் சேர்ந்த மாஸ்டர் வாங் பாரம்பரிய மருத்துவத்திலும் குங்ஃபூவிலும் தேர்ந்தவர். அவருக்குக் குமாரின் தங்கமான குணம் பிடித்துப்போனது. குமாரின் அப்பா சீனாவைச் சேர்ந்த புகழ்பெற்ற மருத்துவர் வாங் ஃபெய் ஹுங்.

*

அத்தியாயம் 4 - 1860, ரஷ்யா

அதிகாலை, மாஸ்கோ. புதைபனி வெளுத்த நெக்ரசோவ் சாலையில் த்ரோய்க்கா ஒன்று மெல்ல அசைந்து வந்தது. இவான் வசீலியெவிச்சின் புகையிலைக் கடை முன்பு நின்றது. தடித்த மேற்கோட்டு அணிந்த ஒரு சீமான் தனது கோட்டுப் பையிலிருந்து சில நாணயங்களை எடுத்தார். வண்டிக்காரனிடம் ஒரு கோப்பெக்கு கொடுத்தார்.

"ஐயா..." என்று இழுத்தான் வண்டிக்காரன்.

"நெவ்ஸ்கியிலிருந்து நெக்ரசோவுக்கு வர ஒரு கோப்பெக்கிற்கு மேல் ஆகாது" என்றார் அந்தச் சீமான்.

"நீங்கள் சொல்வது சரிதான் ஐயா, ஆனால் மீண்டும் அவ்வளவு தொலைவு காலியாகப் போக வேண்டும்" என்றான் வண்டிக்காரன்.

"என்னவோ அது என்னுடைய பிரச்சினை போல!" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் அந்தச் சீமான். குதிரையை சாட்டையால் அடித்துக் கிளப்பினான் வண்டிக்காரன். அந்தச் சீமான் நமது குமார்தான்.

இவான் வசீலியெவிச் அன்றும் அதிகாலையிலேயே கடையைத் திறந்திருந்தார்.

"வாருங்கள் குமார் வாங்-ஃபெய்-ஹுங்கொவிச், இப்போதெல்லாம் உங்களைப் பார்க்க முடிவதில்லையே?" என்றார் இவான் வசீலியெவிச்.

குமார் எப்போதாவதுதான் பண வசதி படைத்த ரஷ்ய சீமானாக வருகிறான். எனவே அவனுக்கு இந்த முறை மரியாதை கொடுங்கள். குமாரை அவன் என்று சொல்லாமல் அவர் என்று அழைப்போம். தயவுசெய்து ஒத்துழையுங்கள்.

"தொழில் நிமித்தமாக பீட்டர்ஸ்பர்க் சென்றிருந்தேன். அங்கிருந்து வோல்கோகிராடுக்குப் போய்விட்டு வருகிறேன். வீட்டில் அனைவரும் நலமா?" என்று விசாரித்தார் குமார்.

"வீடு நன்றாகத்தான் இருக்கிறது. நாட்டைப் பற்றிக் கேளுங்கள்" என்றார் இவான் வசீலியெவிச்.

"போல்ஷெவிக்குகளைப் பற்றித்தானே சொல்கிறீர்கள்?" என்ற குமார், இவான் வசீலியெவிச்சிடம் கையை நீட்டினார்.

"ஐயய்யோ, அவர்களைப் பற்றிச் சொல்லி மாளாது குமார் வாங்-ஃபெய்-ஹுங்கோவிச்" என்றபடி நீட்டப்பட்ட கையில் ஒருசிறு புகையிலைப் பொட்டலத்தை வைத்தார் இவான் வசீலியெவிச்.

"அப்பா, உங்களுக்கு வெந்நீர் தயாராகிவிட்டது" என்ற 17 ஆண்டுகள் நிரம்பிய இனிய குரல் ஒன்றைக் கேட்டுத் திரும்பினார் குமார். அது காத்தரினா வசீலியெவ்னாவின் குரல்தான்.

"என்ன கத்யா, என்னிடம் பாராமுகம் காட்டுகிறாய்? காத்தரினா குமாரோவா என்று பெயர் வாங்கும் ஆசையில்லையா?" என்றார் குமார்.

"போங்கள் குமார் வாங்-ஃபெய்-ஹுங்கோவிச், உங்களுக்கு எப்போதும் விளையாட்டுதான்" என்று சிணுங்கினாள் கத்யா.

"விளையாடத்தான் எனக்கு அனுமதி கிடைப்பதில்லையே கத்யா!" என்றார் குமார். ஆயிரம் கோப்பெக்குகளைத் தரையில் வீசியது போல் சிரித்துக்கொண்டு ஓடிப்போனாள் கத்யா.

இவான் வசீலியெவிச்சின் முகம் சுருங்கியிருந்தது. "குமார் வாங்-ஃபெய்-ஹுங்கோவிச், நான் சொல்வதைத் தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். கத்யாவிடம் நீங்கள் பேசும் விதம் எனக்குப் பிடிக்கவில்லை. சின்னப் பெண் அவள்" என்றார் இவான் வசீலியெவிச்.

குமார் செருமி நகைத்தார். "பயப்படாதீர்கள் இவான் வசீலியெவிச், ரஷ்யாவில் அப்படியெல்லாம் விபரீதமாக ஒன்றும் நடந்துவிடாது" என்றார் அவர். "நான் ஒரு இதற்காகத்தான் அவளிடம் அப்படிப் பேசுகிறேன். கத்யாவுக்கு நிஜமான ஆபத்து போல்ஷெவிக்குகளால் நேராத வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள்."

அதிர்ந்துபோனார் இவான் வசீலியெவிச். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் குமார் வாங்-ஃபெய்-ஹுங்கோவிச்?"

"ஆமாம் இவான் வசீலியெவிச், நேற்று மீர் பூங்காவில் கத்யாவை அந்த முரடன் பாவலின் தம்பியுடன் பார்த்தேன்" என்றார் குமார்.

"மித்யாவுடனா?" அதிர்ச்சியில் எழுந்து நின்றேவிட்டார் இவான் வசீலியெவிச்.

ஆம், கத்யா போல்ஷெவிக் தலைவர்களில் ஒருவனான பாவல் பெத்ரோவிச்சின் தம்பி திமித்ரியுடன் சுற்றுவதை குமார் இவான் வசீலியெவிச்சிடம் தெரிவித்தார். பின்னாளில் இவரைப் போன்ற பல ஏழை எளியோர் கொடுமைக்கார ஜார் மன்னராட்சியை எதிர்த்துப் போராடவும் வழிவகுத்தார் குமார். 1917ல் ஏற்பட்ட அக்டோபர் புரட்சி, ரஷ்யாவுக்குக் குமார் போட்ட பிச்சை.

*

அத்தியாயம் 5 - இரவின் மடியில் குமார்

மொட்டை மாடியில் நின்று வானத்தைப் பார்க்கிறேன். எண்ணிலடங்காத நட்சத்திரங்கள். ஆகாய விருட்சத்தில் பூத்த விண்மலர்கள். விமானங்கள் தாழப் பறக்கும் தேனீக்கள். சுதந்திரம் கிடைத்து 52 வருடங்கள் ஆகிவிட்டதை இன்று வரை என்னால் நம்ப முடியவில்லை. சுதந்திரம் இந்த நட்சத்திரங்களைப் போல உண்மையானதுதானா? அல்லது இன்னும் ஐம்பது வருடங்கள் கழித்துப் பின்னோக்கிப் பார்த்தால்தான் அது கண்ணில் படுமா?

யாருக்குத் தெரியும்? தனியொரு மனிதனைத் தனியே தவிக்க விடாத இரக்கமற்ற மனிதாபிமான சமூகம் இது. இதில் சுதந்திரத்தை எங்கே எதிர்பார்க்க முடியும்? நிச்சயமாக நான் வாழும் தெருவில் முடியாது. மனிதத்தன்மையால் இதயம் மரத்துப்போன மாக்கள் இவர்கள். பேசாதீர்கள்! உங்கள் குரலுக்கு இடமில்லை என் செவியில்!

அக சிந்தனையில் சிக்கி வானை ஒரு கணம் மறந்த என் வெட்கத்தைக் கண்டு வியக்கிறது நிலா! மேகத் துயில் விலகிக் கண் விழித்துவிட்டாள் நிலாப் பெண். அவளைப் பொறுத்த வரை அலுப்பில்லாமல் அவளை ரசிக்கும் நானும் ஒன்றுதான், இன்று செய்தித் தாள் ஒன்றில் ஒரு பத்தி பேட்டியளித்த அறநிலையத் துறை ஆணையாளரும் ஒன்றுதான்.

இரவு தினமும் வருகிறது மெனக்கெட்டு, சாப்பாட்டு நேரத்தில் பார்க்க வரும் நண்பனைப் போல.

*

அத்தியாயம் 6 - கண்ணாடி

குமாருக்குக் கிட்டப்பார்வை உண்டு. குமாரானவன் கண்ணாடி போட்டிருக்கிறான். கண்ணாடி போடாதபோது கடவுளே எதிரில் வந்தாலும் அவனுக்கு அடையாளம் தெரியாது. வேதனை பொங்கக் கூறுகிறான் குமார்...

"ஏறக்குறைய 12 வருடங்களுக்கு முன் சிறு விபத்து ஒன்றில் என் கண்ணாடியை இழந்தேன். கண்ணாடி இல்லாமல் உலகத்தைப் பார்க்கும் அனுபவம் எனக்குக் கிடைத்தது.

தார்ச் சாலையில் கீழே கிடக்கும் சியாமள வர்ணத்து அரூப வஸ்துவானது எருமைச் சாணமா, அழுக்குத் துணியா - யாரறிவார்? எதிர்ப்படும் ஒவ்வொரு பெண்ணையும் உற்றுப் பார்க்கிறேன் - அவள் அழகாய் இருக்கிறாளா? நானறியேன். என் கண்ணாடியைக் கேட்டால் அது சொல்லக்கூடும்.

தட்டுத் தடுமாறி நடக்கையில் சிறு புதைகல்லில் என்னைத் தடுக்கிவிடும் என் காலுக்குக் கண்ணாடி இல்லை. அந்தக் கல்லுக்கு நான் எத்தனையாவது காலோ..."

குமாரின் காலுக்கு அது எத்தனையாவது கல்லோ...

*

அத்தியாயம் 7 - குமாருக்கு ஹலோ சொல்லுங்க!

பெட்டிக்கடையுந்தேனீர்க்கடையுமாயிருக்கின்ற அவ்வர்த்தக மையத்தை நோக்கிப் பொன்னிற டையும் சற்று முன்வந்த தொப்பையுமாகச் சென்று கோல்டுபிளேக்கு கிங்க்சும் புகைத்தபின் சுவைக்க ஆல்சும் வாங்கிய குமாரின் இடுப்பில் இருந்த

செல்வி

அழகா யிருக்கின்றாள்
மினுக்கும் தோற்றத்தினைக்
கொண்டவளா யிருக்கின்றாள்
கிண்கிணிக் குரலால் அவனை
அழைத்தின் புறுகின்றாள்
அவாவுடன் தொட்டிடின்
ஒளிபெறுபவளா யிருக்கின்றாள்
பன்முறை தீண்டி அழைத்திட
பல குரல் வித்தகங்காட்டுகின்றாள்
காலாவதிக் காலங்கேட்டால்
மிச்சத்தொகை சொல்லி மயக்குகின்றாள்
ஈன்றோரால் பேணப்படாததால்
இடுப்பினைவிட் டிறங்க மறுக்கின்றாள்.
அண்டைச் செல்லாள் துயிலெழும்ப
மேனி சிலிர்க்கின்றான் குமார்
தன்னவளின் நினைப்பினிலே.

*

அத்தியாயம் 8 - நிழல்

இந்த நாவலைப் படித்துவிட்டுப் பல வாசகர்கள் மின்னஞ்சலிலும் தொ.பேசியிலும் கடிதங்களிலும் என்னிடம் இரண்டு கேள்வி கேட்டார்கள். 1) குமாருக்கு நிழல் உண்டா? 2) குமாருக்கு நிழல் உண்டா? முதல் கேள்வி இரண்டாவது கேள்வியின் நிழல்தான். (கேட்டவர்கள் பார்வை ரீதியாக சவால்விடப்பட்டவர்கள் என்பது எனது யூகம். ஏனெனில் பிரெய்லியில்தான் நிழல் வரும், அச்சில் வராது.)

குமார் ஒரு கருத்தாக்கம் (concept). எனவே குமாருக்கு நிழல் உண்டா என்ற கேள்விக்கு இந்த அமர்வின் இறுதியிலோ அல்லது வேறொரு குமார்சாரா நாவலிலோ பதில் சொல்கிறேன். இப்போதைக்கு ஒரு மறைமுக பதிலை மட்டும் தருகிறேன்.

குமார்-இன் நிழல் குமார்-இன் நிழலை விடப் பெரியது.

> **நிழலோடு**
>
> (ஒரு உப அத்தியாயம்)
>
> நாம் நம் நிழலாகப் பிறந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் குமாரை அவ்வப்போது வாட்டும். தன் நிழலானது எச்சில், கழிவுகள், சாக்கடை திரவப் போக்குகள், அசுத்தக் குட்டைகள், குப்பை, சேறு, தூசு, மண் மீதெல்லாம் தேய்ந்து, புரண்டு, இடித்து, உரசியும் சுத்தமாக இருப்பதைக் குமார் பொறாமையோடு பார்ப்பதுண்டு. உண்மையில் அந்த ஏக்கம், பொறாமைப் பார்வை அனைத்துமே மேற்கண்ட கிடைமட்டப் பட்டியலில் தினந்தினம் பாதிக்கப்படும் குமாரின் காலுக்கு உரியவைதான். ஆனால் குமாரின் கால் குமாரில் ஒரு பகுதிதானே. அதற்கென்று தனி நிழலா இருக்கிறது?

குமாருக்கு ஏட்டளவிலாவது நிழல் உண்டு என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

ஏட்டு நிழலை ஏற்காதவர்களுக்கு ஒரு கேள்வி - நான் ஏட்டில் இல்லை, அதற்கு வெளியில்தான்

இருக்கிறேன்; எனக்கு நிழல் உண்டா? எனக்கு நிழல் உண்டா என்று கேட்பதற்கு முன் நான் யார் என்று யோசிப்பது அவசியம். நான் யார்? "யார்" என்பது "நான்"-இன் நிழலேயாம்.

*

அத்தியாயம் 9 - காலமும் கதாபாத்திரமும்

எல்லா நல்லவர்களிடமும் கட்டாயமாக ஒரு கெட்ட குணம் இருந்தே தீரும். குமாரிடம் பிடிவாதம் ஒரு பெருந்தொல்லையாக இருந்தது.

கதை ஆரம்பிக்கும்போது அவனுக்கு 33 வயது. இடையில் பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் இப்போதும் அவன் வயது அதிகரிக்காமல் 33ஆகவே இருக்கிறது. நானும் அவனிடம் பல தடவை சொல்லிப் பார்த்துவிட்டேன். சமூக விரோதி ஆகிவிடாதே என்று தார்மீகமாக பயமுறுத்தியும் பார்த்திருக்கிறேன். காலம் கூட பதில் சொல்ல முடியாது போலிருக்கிறது. காரணம், அவன் காலத்திற்கு ஒத்துழைக்க மறுக்கிறான்.

ஒரு கற்பனைப் பாத்திரத்திற்கு ஏன் வயது ஏறிக்கொண்டே போக வேண்டும் என்பது அவன் வாதம். ஆனால் அவன் நிஜ வாழ்க்கையில் மட்டும் என்ன கிழித்துவிட்டான்? அப்போதும் 33தான், இப்போதும் 33தான். நிஜ வாழ்க்கைக் குமார் மூலமாக அவனைத் திருத்தலாம் என்று எண்ணி அவனைத் தொடர்பு கொண்டேன். அவன் வீடும் இவன் வீடும் பக்கத்துப் பக்கத்தில் இருக்கிறது. அவன் வீட்டு எண் 46 என்றால் இவன் வீட்டு எண் 46, அவ்வளவு பக்கம்.

ஒரு எட்டு போய் குமாருக்கு அறிவுரை சொல்லிவிட்டு வாயேன் என்று அவனிடம் சொன்னேன். அவனும் இந்தா போகிறேன் என்றுவிட்டு கையில் ஒரு பிள்ளையார் கோவிலை வைத்துக்கொண்டு விழுந்து விழுந்து படித்துக்கொண்டிருக்கிறான்.

அவனுக்கு வயது ஏறினால்தானே மற்ற கதாபாத்திரங்களுக்கும் வயது ஏறும்? இப்படிச் சற்றும் பொறுப்பில்லாமல் திரிகிறான் குமார். நிஜ வாழ்க்கையில் அவன் தானுண்டு தன் வயதுண்டு என இருந்தாலும் கதையில் வரும் குமாருக்கு அறிவுரை சொல்லும் தகுதி அவனுக்கு இல்லாமல் போய்விட்டது.

*


அத்தியாயம் 10 - ஓவியமும் பேசுதடி

மாபெரும் கலா ரசிகன் குமார். இங்கே மட்டும் என்ன வாழ்கிறதாம்? நானும் கலா ரசிகன்தான். அவனும் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே, யார் வேண்டாம் என்றார்கள்.

குமாரைக் கலா ரசிகனாக ஆக்குவதில் எனக்கு எந்த நஷ்டமும் இல்லை. கலையை உருவாக்குவதில் போட்டி இருக்கலாம், ஆனால் ரசிப்பதில் இருக்க முடியாது. குறைந்தது இந்த அத்தியாயத்தில் அது முடியாது. தவிரவும், நாங்கள் இருவேறு உலகங்களில் சஞ்சரிக்கிறோம். இவ்விரு உலகங்களை இணைக்கும் புள்ளியை நான் சதா அழித்துக்கொண்டிருக்கிறேன்.

இச்சிந்தனையோட்டத்தின் விளைவாக, குமார் கலையை ரசிப்பதோடு நிற்கவில்லை. அதைத் தனக்கேயுரிய பாணியில் தோற்றுவிக்கவும் செய்தான்.

ஓவியர் குமாரின் மேலான கோட்டோவியம் ஒன்று இங்கு('த்') தரப்படுகிறது.



மூக்கு என்பதை மனித முகத்தில் அது பொதுவாகத் தளம் கொண்டு இயங்கும் இடத்திலேயே பார்த்துப் பழக்கப்பட்ட நமக்கு அதை இடமாற்றி (tக்ஷீணீஸீsயீமீக்ஷீ) வேறு பார்வைக்கோணத்தால் அணுகத் தூண்டுகிறார் ஓவியர் குமார். இப்படைப்பில் மூக்கு இருக்குமிடம் இரு தொடைகளுக்கு இடையே. எனவே இங்கு மூக்கானது ஆண் குறியாகவும் தொழிற்படுகிறது. ஓவியத்தின் மையப் பகுதியில் இருப்பதால் இம்மூக்கை இந்த ஓவியத்தின் மூக்காகவும் கொள்ளலாம். கலை வரலாற்றில் மூக்குள்ள ஒரே ஓவியம் இதுதான் எனவும் துணிந்து சொல்லலாம்.

*

அத்தியாயம் 11 - பாலிய காலத்துப் படிமங்கள்

இன்று காலை பால் வாங்கப் போனபோது என் பாலிய கால ஆசிரியர் ஒருவரைப் பார்த்தேன். ஓவிய ஆசிரியர்தான். காரட், பாகற்காய், தக்காளி, கத்தரிக்காய் எல்லாம் அழகழகாக வரைவார் -

காரட் பார்த்திருக்கிறீர்களா? பாலியத்தில் நான் படித்த படக்கதைகளில் முயல்கள் காரட்டை லூசு மாதிரி தின்றுகொண்டிருக்கும். கண்ணுக்கு நல்லதுதான், இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக இப்படியா?! ஒரு படக்கதையைக் குறைந்தது அரை லட்சம் பிரதிகள் அச்சடித்திருப்பார்கள். அத்தனைப் பிரதிகளிலும் காரட் சாப்பிட்டால் வயிறு என்னத்துக்கு ஆகும்? அதனால்தான் கடைசியில் ஆமை ஜெயித்துவிட்டது.

பாகற்காயோ அபரிமிதக் கசப்பு. டினோசாரின் முதுகு போன்ற அதன் மேனியினுடைய முரட்டுத்தனமே அதனுடைய ருசிக்குக் கட்டியம் கூறுகிறது. என் தாயார் அதில் கறி செய்யும்போதெல்லாம் சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவார். இப்போது வேறு மாதிரி செய்திருக்கிறேன், கசக்காது என்பார். தின்று பார்த்தால் கசப்பு மாறாமல் முகஞ்சுளிக்க வைக்கும். சீ கசப்பு என்றால், அதன் சுவையே கசப்புதான், கசப்பும் ஒரு சுவைதானே என்பார். இது எப்படி இருக்கு?

அடுத்து என்ன? காரட். இல்லை, அதை முதலிலேயே சொல்லிவிட்டேன். இப்போது தக்காளி. இப்பழமானது புற்றுநோயைத் தடுக்கும் என்று கேள்வி. உண்மையில் தடுக்குமா என்பதுதான் கேள்வி. தடுக்கும் என்பது பதில்.

கத்தரிக்காயைப் பற்றிப் பேச நான் பணிபுரியும் நிறுவனம் அனுமதிக்காது. ஆகவே வாசகர்களே, பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்.

*

அத்தியாயம் 12 - இது எழுதும் கை ஸ்வாமி!

இந்தப் பத்தியின் ஆறாம் சொல்லில் தோன்றும் குமார், தானேதான் இந்த நாவலை எழுதிக்கொண்டிருப்பதான மயக்கத்தில் அடிக்கடி ஆழ்கிறான். ஹ! இந்தச் சப்பட்டைத் தாளில் பேனா உமிழ்ந்த மைக்கோட்டுப் புழுக்களாக ஊர்ந்துகொண்டிருப்பவனுக்கே இவ்வளவு என்றால் வருங்கால நோபல் பரிசுக்காரனான எனக்கு எவ்வளவு இருக்கும்.

ஆசிரியருடன் கதாபாத்திரங்கள் ஊடாடுவதெல்லாம் கதைப் புத்தகங்களுக்கு நன்றாயிருக்கும் ஸ்வாமி, ஆனால் யதார்த்த நிலை அதுவா? இந்தப் புத்தகத்தின் முதன்மைக் கதாபாத்திரத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். அவன் வாழ்க்கையில் எது நடந்தாலும் அது வெள்ளைத் தாள்களின் மேல் மைக்கோடுகளின் நெளிசல்களாகத்தான் இருக்கின்றன. தாள் முழுக்கக் கிடைமட்டமாக சுளித்து சுளித்துப் பல மைக்கோடுகள். என்னவென்றால் குமார் காதலிக்கிறானாம். வேறொரு பக்கத்திலும் இதே மாதிரி ஜிலேபிக் கோடுகள். அப்போது என்னவாம்? அவன் ரஷ்ய சீமானாக வருகிறானாம். அரை மீட்டர் தூரத்திலிருந்து பார்த்தால் எல்லா கருமமும் ஒரே மாதிரித்தான் தெரிகிறது.

நான் தப்பாக ஒன்றும் சொல்லவில்லை ஸ்வாமி; என்ன இருந்தாலும் குமார் என் கதாபாத்திரம்தானே, அவனை நான் விட்டுக்கொடுத்துப் பேசுவதாவது? எழுத்தாளர்கள் கதாபாத்திரங்களுடன் அதிகம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று விமர்சகர்கள் குதிக்கிறார்கள் (பாட்டுக்கொரு புலவன் போன பிறகு இவர்கள் வைத்ததுதான் சட்டம்). அதை அனுசரித்து அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் இப்படி. கிறுக்குகிற கைதானே ஐயா எழுதும்?

*

அத்தியாயம் 13 - அன்னியன் பிரவேசம்

இந்த நாவலை எழுதுவது குமார் அல்ல என்று சொன்னது யாருக்கோ பிடிக்கவில்லை போலிருக்கிறது. யாரோ என் அலுவலகத்திற்கு ஃபோன் செய்து என் மேலதிகாரியிடம் பேச வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

நல்ல வேளையாக ரிசப்ஷனிஸ்ட் என் வாசகி. அவள் சட்டென்று சுதாரித்துக்கொண்டு நீங்கள் யார் என்று கேட்டிருக்கிறாள். ஃபோன் செய்தவன் குமார் என்று சொல்லியிருக்கிறான். மேலதிகாரி வெளியூர் போயிருப்பதான பொய்யைச் சொல்லிவிட்டு என்னைக் காப்பாற்றிவிட்டாள் ரிசப்ஷனிஸ்ட். வாழ்க அவள்.

அவள் கொடுத்த தகவலின்படி அது எனது குமார் அல்ல. 10 பாயிண்ட் சைஸ் எழுத்துருக் குரலில் அவன் பேசியிருக்கிறான். நான் எழுதுகிற பத்திரிகையில் பயன்படுத்தப்படுவதோ 8.5. இவன் வேறு ஏதோ கதையைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும். அவன் பெயரும் குமாராக இருந்ததால் போன அத்தியாயத்தைப் படித்துவிட்டுத் தப்பெண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

வீட்டிற்குப் போய் முதல் வேலையாக மேஜை மேல் இருந்த பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தேன். ஒரு பத்திரிகைக் கதையில் குமார் என்றொரு கதாபாத்திரம் தென்பட்டான். கையில் மங்கையர் மலரை வைத்துக்கொண்டிருந்தவாறு புத்தகத்தில் இருந்த அவனிடம் இவ்வாறு கூறினேன்:

"தம்பி, நீ என்னைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். நான் எழுதியது வேறொரு குமார் பற்றி. நடந்தது போகட்டும். இனியாவது என் வழியில் குறுக்கிடாமல் இரு."

நான் சற்றும் எதிர்பாராத வகையில் குமார் தடாலென்று என் காலடியில் விழுந்தான். "ஐயா, என்னை மன்னித்துவிடுங்கள்!" என நா தழுதழுத்தான். "என் ஆசிரியர் என்னை புழுவைவிட கேவலமாக நடத்துகிறார். நான் உங்கள் குமார் போல நடித்தால் நீங்கள் ஏமார்ந்து போய் எனக்கு சுவராசியமான சம்பவங்களும் இடங்களும் தருவீர்கள் என ஆசைப்பட்டேன். நான் பணிபுரியும் கதையில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்து இருந்து அலுத்துவிட்டது" என்றான் வேற்றுக் குமார்.

அவன் பேச்சைக் கேட்கக் கேட்க எனது கழிவிரக்கமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவனும் என் கதாபாத்திரமாக இருந்தால் இருவரையும் இணைத்து ஒரு கதாபாத்திரமாக்கிவிடலாம். ஆனால் இவன் இன்னொருவனுடைய ஆள். எழுத்துலக தார்மீக நெறிகளை மதியாமல் இருவரையும் இணைத்துவிட்டால் நாளைக்குப் பிரச்சினை ஏற்படும். இன்றைக்கே ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. நான் இதைப் பற்றி யாரிடமும் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை.

*

அத்தியாயம் 14 - இந்துஸ்தான் லீவர்

இந்தாம்மா ரிசப்ஷனிஸ்ட் - ஆமாம், உன்னைத்தான். உன்னைத் தொலைபேசியில் அழைத்தால் பிடிக்க முடியாது. நீ எப்படியும் இந்த நாவலைப் படிப்பாய் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் இந்தக் குறுக்குவழி.

அந்த இந்துஸ்தான் லீவர் பையனிடம் என்ன இல்லை? அவனை ஏன் வேண்டாம் என்று சொல்கிறாய்? உன் அப்பா எனக்கு ஃபோன் செய்து அழாத குறையாகப் புலம்பித் தீர்த்துவிட்டார். இந்துஸ்தான் லீவரில் வேலை பார்க்கிறான், கை நிறைய சம்பளம், நல்ல உயரம், ஒரு கெட்ட பழக்கம் இல்லை. வரதட்சிணையே வேண்டாம், அதற்கு பதிலாக ஒண்ணேகால் லட்சம் ரொக்கமாய்த் தந்துவிடுங்கள் என்கிறான். இவனை விட்டால் வேறு நல்ல வரன் அவ்வளவு சுலபமாய்க் கிடைப்பானா?

யோசித்துப் பார். நான் அடுத்த அத்தியாயத்தை எழுத வேண்டும்.

*

அத்தியாயம் 15 - ரிசப்ஷனிஸ்ட் எழுதிய கடிதம்

என் அன்புள்ள தங்களுக்கு,

தங்கள் 'ரிசப்ஷனிஸ்ட்' எழுதிக்கொள்வது.....

இப்பவும் நான் இல்லாதபோது நீங்கள் என் handbag -கை குடைவது எனக்கு தெரியும். அதனால்தான் இந்தக் கடிதத்தை இங்கே வைக்கின்றேன். நிற்க.....

உங்களை போல் ஒரு ஆனானப்பட்ட எழுத்தாளரிடம் ஏன் இவ்வளவு ஒளிவுமறைவுகள்?? என்னைப் பற்றி உங்கள் மனதில் இருப்பதை என்னிடம் open -னாக சொல்லிவிடலாமே?? உங்களை என் தந்தைக்கு நிகராக மதிக்கின்றேன். நீங்களே என் வாழ்க்கைதுனையாக அமைய வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். ஆனால்..... கைநிறைய சம்பாதிக்கும் வரன் என்ற பெயரில் சம்மந்தமில்லாத மூணாவது மனுஷனை என்னிடமே சிபாரிசு செய்து என் மனசை

காயப்படுத்திவிட்டீர்கள்.

கதாபாத்திரங்களின் மனசுக்குள் ஆழமாக பார்த்து எழுதும் இலக்கியகாரராகிய நீங்கள்.... என்னை மட்டும் புரிந்துகொள்ளாதது ஏன்???

நீங்கள் கேட்ட கேள்வியைத்தான் நானும் கேட்கின்றேன்...... உங்களுக்கு என்னை பிடிக்கவில்லையா??? என்னிடம் என்ன இல்லை??? என்னை பிடிக்காத நபர் என்றால் என் handbag -கை ஏன் திருட்டுத்தனமாக குடைய வேண்டும்? என்னுடைய handbag -கில் நீங்கள் எதை தேடினீர்கள்? Hairpin -னா? கைக்குட்டையா? "compact" டப்பாவா? sticker பொட்டா? ஒன்றுமே காணாமல் போகவில்லையே??

At any cost இனி நீங்கள் அடுத்த அத்தியாயத்தை எழுதலாம்....

இவள் என்றென்றைக்குமாய் உங்களுடைய....

♥ கோதை ♥

*

அத்தியாயம் 16 - கலியாண காலம்

ஜுரத்தின் அறிகுறிகளான தேக உஷ்ணாதிக்கம், தலைவலி, வெப்பமும் குளிரும் மாறி மாறி வருதல்-யாவும் ஜுரவிஷங்கள் நரம்புகளையும் தசை நார்களையும் தாக்குவதால்தான். நீங்கள் சோர்வடைவதோடு, உங்கள் ஜீர்ண சக்தியும் பலஹீனமடைகிறது. ஆனால் தேகத்தை சீர்படுத்த போஷணம் வேண்டுமே! ஹார்லிக்ஸே அதற்குத் தகுந்ததென டாக்டர்கள் அறிந்திருக்கிறார்கள். அது லகுவான ஆகாரம். எளிதில் ஜீர்ணமாகும். உடம்பிற்கு வலுவூட்டி சீக்கிரம் தேற்றுகிறது. முக்கிய ஆஸ்பத்திரிகளிலும் அதை ஜுரநோய்களுக்கு பத்திய உணவாக ஆதரித்து வருகின்றனர்.

* * *

பாகீரதி அத்தை ஊரிலிருந்து வந்தால் வீடு கல்யாண சத்திரம் மாதிரி களைகட்டிவிடும். அதுவும் முகுந்தன் மாமா 'பாகீ, பாகீ' என்று காலையில் கத்த ஆரம்பித்தால் இருட்டும் வரை அங்கே வேறு சப்தம் கேட்காது.

குமாரின் அம்மா அதைக் காண்பித்து அகமுடையானிடம் புலம்புவாள். "உங்கள் அத்திம்பேரைப் பாருங்கள், பெண்டாட்டியை எவ்வளவு பிரியமாகக் கூப்பிடுகிறார். நீங்களும் இருக்கிறீர்களே, ஏய், ஏய் என்று வேலைக்காரி மாதிரி" என்பாள்.

உடனே குமாரின் அப்பா மூர்த்தி, "உன்னை ராதை என்று கூப்பிடாமல் ரா, ரா என்றா கூப்பிடுவார்கள், தெலுங்குக்காராள் போல" என்று க்வதர்க்கம் பேசி அவள் வாயை அடக்கிவிடுவார்.

குமார் காலேஜ் முடிந்து பிரம்மராக்ஷஸ் துரத்துவது மாதிரி ஓடி வந்தான். எல்லாம் கோதையைப் பார்க்கிற ஆவல்தான்! கோதை மேல் அவனுக்கு ஒரு தனி பிரேமை. குமார் அவளைப் பார்த்து ஏறத்தாழ ஒரு வருஷம் ஆகியிருக்கும். தன்னை அவள் மறந்திருப்பாளோ என்ற ஸந்தேகம் அவன் மனதில் கிலேசத்தை உண்டுபண்ணியது வாஸ்தவந்தான். அதனாலென்ன, அவள் இன்னும் இருபது நாள் இருக்கப்போகிறாள், அவளுக்கு நம்மை ஞாபகப்படுத்தி விட அந்த அவகாஸம் யதேஷ்டம் என்று எண்ணிக்கொண்டான் குமார்.

வீட்டிற்குள் நுழைகிறபோதே ஜன்னலண்டை கோதையின் நீலோத்பல வதனம் தெரிகிறதா என்று ஓரக்கண்ணால் பார்த்தான் குமார். பாட்டிதான் ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு இவனைப் பார்த்து "வாடாப்பா" என்றாள். கோதை அடுக்களையில் இருப்பாள் போலும் என்று குமார் தன்னை ஸமாதானப்படுத்திக்கொண்டான்.

முகுந்தன் மாமா குமாரைப் பார்த்ததுதான் தாமதம், "பாகீ, உன் மருமான் வந்திருக்கிறான் பார்" என்று பின்னால் திரும்பிச் சத்தமிட்டார். பாகீரதி அத்தை வாயெல்லாம் பல்லாக "வாடா, பள்ளிக்கூடம் முடிந்துவிட்டதா?" என்றாள்.

குமாருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. "அத்தே, நான் காலேஜ் ரெண்டாம் வருஷம் படிக்கிறேன்" என்றான் அவன்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகள் விசுக்கென்று வளர்ந்துவிடுகிறதுகள்" என்றாள் பாகீரதி அத்தை.

"பாகீ, கோதைக்குட்டிக்கு என்ன வயஸாகிறது இப்போது?" என்றார் மூர்த்தி.

"மாசி வந்தால் பதினாறாகிறது. சின்னப் பெண்தானே" என்றாள் அத்தை.

"நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். கலியாணம் பண்ணி வைத்திருந்தால் அவளுக்கு என் வயஸில் ஒரு வாரிஸு இருக்கும்! ஹஹஹ!" என்று வீடே கிடுகிடுக்கும்படி சிரித்தார் முகுந்தன் மாமா.

கோதை இவனைப் பார்த்துப் பழிப்பு காட்டிவிட்டுத் தோட்டத்திற்கு ஓடிப்போனாள். குமாரின் மனஸும் கூடவே போனது.

"கொஞ்சம் கேலி பேஸாமல் இருங்களேன்" என்று கோபித்த அத்தை, "குமாருக்குப் பதிநேழு இருக்குமா?" எனக் கேட்டாள்.

"பாகீ, உன் மனதிலிருப்பது எனக்குப் புரிகிறது. பயல் முதலில் கல்லூரியை முடிக்கட்டும். பிறகு என் ஆபீஸிலேயே அவனுக்கு ஒரு வேலை போட்டுத் தரலாமென்றிருக்கிறேன்" என்றார் மூர்த்தி.


"எதற்கும் கோதையை ஒரு வார்த்தை கேட்டுவிடலாமே?" என்றாள் குமாரின் அம்மா.

"அதற்கு அவசியமே இல்லை. நாம் செய்யாவிட்டால் அவர்களே செய்துகொண்டுவிடுவார்கள். அதுவும் இந்துஸ்தான் லீவரில் உத்தியோகப் பார்க்கிற அகமுடையான் என்றால் எந்தப் பெண்ணுக்குக் கசக்கும்?" என்றார் மூர்த்தி.

அதை ஆமோதிப்பது போல முகுந்தன் மாமாவும் "ஏவ்!!!" என்று பெரிதாக ஏப்பம் விட்டார்.

*

அத்தியாயம் 17 - முனைவீடு



முனைவீட்டில் திருட்டுப்போனதைக் கேட்டுக் கொதிப்படைந்தான் குமார். பொதுவாக அவனுக்கு இம்மாதிரி நிகழ்வுகளில் ஈடுபாடில்லை. சொந்தத் தெருக் குற்ற வெறுப்பில் தெருவிலிறங்கி நடக்கத் தொடங்கினான். எரிச்சல் மீதூறி வேகுவேகென்று நடக்க, காபி கடை அருகில் ஊர்ந்து வந்துகொண்டிருந்த ஜீப்பில் இன்ஸ்பெக்டர் எதிர்ப்பட்டார். அவரை செமத்தியாகக் கட்டி ஏறிவிட்டான் குமார். தெரு முடியும் தறுவாயில்தான்

குமாரின் வீடு இருந்தது. இருந்தாலும் முனையிலிருந்தது முனைவீடுதான். ஒரு வீட்டில் தப்பித்தது முனைவீடு பட்டம். மூன்று அறைகள், ஒரு கழிப்பறை,

ஒரு குளியலறை, ஒரு சமையலறை, ஒரு பெரிய ஆண், ஒரு சிறிய ஆண், ஒரு பெரிய பெண், இருசிறு பெண்கள், கொல்லையில் ஒருசிறு தோட்டம், அதில் ஒரு கிணறு,

அவ்வப்போது ஒரு பூனைக்குட்டி முதலானவை முனைவீட்டில் உண்டு. எல்லோரும் கடற்கரைக்குச் சென்று பட்டம் விட்டு பலூன் சுட்டு சுண்டல் தின்று நீர்முனையில் நின்றுகொண்டிருக்கையில் வீட்டில் திருடுபோனது. மூத்த பெண் கலியாணத்தில் டபேதார் தம்பிப் பையன்

அன்பளிப்பாய்த் தந்த குண்டான், அடுத்த மாத போனஸில் குடும்பத் தலைவர் நாகராஜன் வாங்க உத்தேசித்திருந்த ரேடியோ, ஒரு செட் ஜிமிக்கி மட்டும் இருந்த நகைப்பெட்டி, புதிய ஸ்னோ டப்பாக்கள் இரண்டு, தொலைக்காட்சிப் பெட்டிக்கு மேல் வைக்கப்பட்டிருந்த பஞ்சலோக ஸரஸ்வதி சிலை, பெட்டியோடு புதிய மைப்பேனா, ஆறு பட்டுப்புடைவைகள், இரண்டு பட்டுவேட்டிகள், மூன்று பட்டு அங்கவஸ்திரங்கள் முதலியவை முனைவீட்டில் திருட்டுப்

போனதைக் கேட்டுக் கொதிப்படைந்தான் குமார். பொதுவாக அவனுக்கு இம்மாதிரி நிகழ்வுகளில் ஈடுபாடில்லை.

*

அத்தியாயம் 18 - கணேசு என்னும் கருதுகோள்

குமாருக்கு கணேசு கணேசு என்று ஒரு நண்பன் இல்லை. இருந்திருந்தால் குமார் அவனை கணேசு கணேசு என்றே அழைத்திருப்பான். கணேசு என்று ஒரு நண்பன் இல்லாததை குமார் ஒரு சுமையாகக் கருதவில்லை. என்றாலும் சில நடைமுறைப் பிரச்சினைகள் எழவே செய்தன.

கணேசுவின் தங்கை வசந்தலட்சுமியை ஒரு வருடமாகவே காதலித்தான் குமார். வசந்தலட்சுமியிடம் காதல் கடிதம் கொடுக்க நண்பன் என்ற முறையில் கணேசுதான்

பொருத்தமான தூதுவன். ஆனால் கணேசு இல்லை. காதலிக்கத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே வசந்தலட்சுமிக்குப் பல காதல் கடிதங்கள் எழுதிப் பார்த்துவிட்டான் குமார். ஆனால் கொடுக்க ஆளில்லாததால் குமார் எழுதுவதும் கிழித்துப் போடுவதுமாக இருந்தான்.

பிறகுதான் வசந்தலட்சுமிக்கு சாந்தலட்சுமி என்று ஒரு தங்கை இருப்பது தெரியவந்தது. அதாவது கணேசுவின் இளைய தங்கை. இரண்டு தங்கைகளுமே பெயருக்கேற்ப அமைந்திருந்தார்கள். ஒன்று வசந்தம் என்றால் இன்னொன்று சாந்தம். வசந்தலட்சுமி முகத்தின் எடுப்பான அம்சங்களையெல்லாம் மழுப்பிவிட்டால் சாந்தலட்சுமி கிடைத்துவிடுவாள். மற்றபடி பெரிய வித்தியாசம் இல்லை.

ஒரு மகளை ஊரிலேயும் இன்னொன்றை வெளியூர் ஹாஸ்டலிலும் படிக்கவைத்தது ஏன் என்று குமாருக்குப் புரியவில்லை. இருந்தாலும் கணேசு இல்லாத பிரச்சினை தீர்ந்தது.

சாந்தலட்சுமி பூங்கதிருடன் நெருங்கிப் பழக ஆரம்பித்திருந்ததை கவனித்தான் குமார். அவளைப் பூங்கதிர் மூலமாக நட்பாக்கிக்கொள்ள அவன் திட்டமிட்டான். அசெம்பிளியில் அவனுக்குப் பக்கத்து வரிசையில் சாந்தலட்சுமி நின்றபோது அவளைப் பார்த்து முறுவலித்தான். அவளுடைய அக்காளுக்குத் தானே பொருத்தமான கணவன் என்று எப்படியெல்லாம் அவளை நம்பவைப்பது?

வழக்கம் போல் பாடபுத்தகங்கள் கைகொடுத்தன. தனது பழைய பாடபுத்தகங்களைத் தேடி எடுத்துப் பூங்கதிர் மூலம் கொடுத்து அனுப்பினான். பூங்கதிருக்கு அறிவுதான் போதாதா, இல்லை வேண்டுமென்றே செய்தாளா தெரியவில்லை, புத்தகங்களைக் கொடுத்தது குமார்தான் என்று சாந்தாவிடம் அவள் சொல்லவேயில்லை. புத்தகங்களைக் கொடுத்த பின் மறுநாள் எதேச்சையாக சாந்தாவின் பக்கம் போவது போல் போனான் குமார். அவள் நகர்ந்து வழி விட்டதோடு சரி. ஒரு வார்த்தை பேசவில்லை. பூங்கதிரிடம் ஒரு முறை கெஞ்சி நினைவுபடுத்திய பிறகுதான் தகவல் போய்ச் சேர்ந்தது.

அதற்குப் பின் சாந்தலட்சுமியுடன் பழகுவதில் குமாருக்குப் பிரச்சினை இருக்கவில்லை. சாந்தலட்சுமி கலகலப்பாகப் பழகினாள். ரத்தக் காயம் ஏற்படுமளவு அடித்துப் பேசி சிரிக்கும் தூரத்திற்குப் பழக்கம் வந்த பின் குமாருக்கு இரண்டு மனமாயிற்று. வசந்தம் கிடைக்கவில்லை என்றால் சாந்தத்தை முயற்சிக்கலாமா என்று யோசிக்கத் தொடங்கினான். மனதிற்குள் இருவரையும் தீவிரமாக ஒப்பிட்டுப் பார்த்த பின், இருவரில் யார் கிடைத்தாலும் நன்மையே என்ற முடிவுக்கு வந்தான். சாந்தலட்சுமிதான் தன்னை விட ஒரு வயது சிறியவள் என்பதால் அவளை அடையலாம் என்று தீர்மானித்தான் குமார்.

குமாரிடம் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது. சாந்தலட்சுமி பேசும்போது மேலும் உன்னிப்பாகக் கேட்டுத் தீவிரமாகத் தலையசைக்கத் தொடங்கினான். சாப்பிட்டாயா தூங்கினாயா என்று வாஞ்சையுடன் கேட்கத் தொடங்கினான். கணேசுவுக்கு பதிலாக சாந்தலட்சுமியை அமர்த்தப் போய் இப்போது சாந்தலட்சுமிக்காகவே கணேசு தேவைப்படும் நிலை வந்துவிட்டது குமாருக்கு.

கணேசு இருந்தால் இவ்வளவு சிக்கல் இருந்திருக்காது. கணேசுவின், கணேசுவே, கணேசுவுடன், கணேசுவிடம், கணேசுவை, கணேசுவினை, கணேசுவினுடைய, கணேசுவால், கணேசுவுக்கு…

*

அத்தியாயம் 19 - முன்கதை

சேல்ஸ் பிரிவில் வேலைபார்த்த 31 வயது குமார் தங்கமானவன். சொந்தப் பிரச்சினைகளால் இரண்டு ஆண்டுகள் என்னால் எழுத முடியாமல் போய்த் திரும்ப எழுதத் தொடங்கியதும்

குமாருக்கு 33 வயதாகிப் பணப் பிரச்சினை. அதைத் தீர்க்கும் வகையாக அப்போது குமாருக்கு அறிமுகமானவர்தான் பணக்கார பாகிஸ்தானியரான அவனது அப்பா.

அப்பா குமாருக்கு இருப்பது போல் எனக்கும் உண்டு. எனவே இதற்கிடையில் என் அப்பாவைப் பார்க்க அப்பாவின் நண்பர் வந்தார். இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது என்னிடமிருந்து நானே பேனா இரவல் வாங்குகிற இழிநிலை. கிடக்கட்டும். பேனாவை வாங்கப்பட்டபின் என்ன எழுதப்பட்டது?

குமாரின் இரண்டாவது தங்கைக்கு அப்பா பாகிஸ்தானியராகிவிட்ட காரணத்தால் திருமணம் அசாத்தியமாகிக்கொண்டிருந்த நிலையில் அப்பாவை சீனராக மாற்றிக் குமாருக்கு மீளறிமுகம் செய்துவைத்தேன். பிறகு குமார் ரஷ்யாவில் ஒரு புகையிலைக் கடைக்காரரின் மகளைக் கெடுக்கப் பார்த்து முடியாமல் திருந்தி அக்டோபர் புரட்சியை விளைவித்தார். இந்நிலையில் நானோ குமாரோ மொட்டை மாடியில் சிந்தனையில் ஆழ்கிறோம். குமாருக்குக் கண்ணாடி உடைந்தால் பிரச்சினை. செல்போன் வைத்திருக்கிறான்.

குமாருக்கு நிழலுண்டா என்று இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுந்தாலும் முன்கதைச் சுருக்கத்தில் தத்துவங்களுக்கு இடமில்லை. இதற்கிடையில் குமார் தனது வயதான 33இலிருந்து பிரிய மறுக்கிறான். எனக்கு மற்றும் குமாருக்கு உள்ள கலா ரசனையின் பலனாகப் பின்னவன் ஒரு மேலான ஓவியம் தீட்டுகிறான்.

இடையில் ஒரு நாள் என் பாலிய கால ஓவிய ஆசிரியர் சாலையில் எதிர்ப்பட, காரட் நிறைய தின்றால் உடலுக்கு ஆகாது, பாகற்காய் உடலுக்கு ஆனாலும் அபரிமிதக் கசப்பு. இந்த நாவலைத் தானே எழுதுவதாகக் குமார் குடிக்கும் மனப்பாலில் ஒரு சொட்டு புளித்த மோரை ஊற்றி உறைகுத்திவிடுகிறேன்.

குமார் என்ற வேறொருவன் எனது குமாரை ஆள்மாறாட்டம் செய்யப் பார்க்கிறான். ரிசப்ஷனிஸ்ட்டின் உதவியால் அவனை அடையாளம் கண்டுபிடிக்கிறேன். நல்ல வரனைத் தட்டிக்கழிக்க வேண்டாம் என்று ரிசப்ஷனிஸ்ட்டிற்கு அறிவுரை அளிக்கப்போனால் அவள் என்னைத்தான் காதலிப்பதாக ஒரு கடிதம் எழுதித் தன் கைப்பையிலேயே வைத்துக்கொள்கிறாள்.

இதென்ன வில்லங்கம் என்று அடுத்த அத்தியாயத்தில் அவளது தாய் தந்தை மூலம் அவள் அந்த வரனையே திருமணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறேன். குமார் இருக்கும் தெருவின் முனைவீட்டில் திருடுபோகிறது. குமாருக்கு கணேசு என்றொரு நண்பன் இல்லை. இந்த இன்மை நிலை அவனது காதலில் குறுக்கிடுகிறது.

தங்கமான 31 வயது குமாரின் அப்பா பாகிஸ்தானியர். எனக்கு வீட்டில் பிரச்சினை. அப்பாவைப் பார்க்க நண்பர் வர, பேனா கடன் வாங்கிக்கொள்கிறேன் என்னிடமே. குமாரின் அப்பா சீனர். குமார் ரஷ்ய சீமானாக ரஷ்யப் பெண்ணைக் கவர முயன்று தோற்றுத் திருந்தி அக்டோபர் புரட்சி செய்கிறான். மொட்டை மாடியில் சிந்தனை. கண்ணாடி உடைந்தால் குமாருக்குப் பிரச்சினை. குமார் செல்போன் வைத்திருக்கிறான். குமாருக்கு இப்போதும் 33 வயது. படம் வரைகிறான். எனது ஓவிய ஆசிரியரால் மனத் தோட்டத்தில் காய்கறிகள். இந்த நாவலை எழுதுவது குமார் அல்ல. குமாராக வேடமிடும் ஒருவனை ரிசப்ஷனிஸ்ட் கண்டுபிடிக்க, நான் அவனை நிராகரிக்கிறேன். திருமணம் செய்துகொள்ள மறுக்கும் ரிசப்ஷனிஸ்ட் என்னைக் காதலிப்பதால் அவள் வேறொரு ஆளை மணம் புரிய ஏற்பாடு செய்கிறேன். குமாரின் தெருவில் திருடுபோகிறது. குமாருக்கு நண்பன் இல்லாததால் அந்த நண்பனின் தங்கையை அடைய வழியில்லை.

குமாரின் அப்பா பாகிஸ்தானியர், பின்னர் சீனர். குமார் ரஷ்யாக்காரன், புரட்சிப் பித்தன், சிந்தனையாளன், கிட்டப்பார்வையாளன், செல்போன்தாரி, மார்க்கண்டேயன், ஓவியன், கனவு

காணி, குற்றத் துவேஷி, காதலன். நான் எழுத்தாளன்.

முற்றும்

நம்மை வாசிக்கும் புத்தகங்கள்

நாம் புத்தகங்களை வாசிப்பது போல் புத்தகங்களும் நம்மை வாசிப்பது உங்களுக்குத் தெரியுமா? அனுபவப் பக்கங்களைத் தங்கள் அறிவிற்குள் கோர்த்துக்கொண்டு நடமாடும் புத்தகங்களாக விளங்கும் மனிதர்களை நான் பார்க்கிறேன். மனிதர்களான நாம் புத்தகங்களை வாசிப்பது போல இந்த மனிதர்கள் நம்மைப் புத்தகங்களாக வாசிக்கிறார்கள். நாம் விளிம்பிற்குத் தள்ளப்படும்போதெல்லாம் வாழ்க்கைப் புத்தகத்தில் தாங்கள் கடந்து வந்த பக்கங்களை நமக்குப் படித்துக் காட்டி நம்மை மீட்கிறார்கள்.

எனது பள்ளிப் பருவத்தில் மறக்க முடியாத அனுபவங்களை எனது பள்ளி நூலகம் எனக்குத் தந்தது. தொலைக்காட்சித் தொடர் வசதி எங்கள் கிராமத்திற்கு இன்னும் வந்தபாடில்லாத காலகட்டம் அது. பள்ளி முடிந்தபின் ஓணான் அடிக்க சக பிள்ளைகள் ஓடுகையில் என் போன்ற வெகு சிலர் பள்ளி நூலகத்தில் தஞ்சம் புகுவோம்.

நான் படிக்கும் புத்தகங்களில் தென்படும் சுவாரசியமான வாக்கியங்களை கருப்பு ஸ்கெட்ச் பேனாவால் வட்டமிட்டு அதனருகே மார்ஜினில் சிவப்பு ஸ்கெட்ச்சால் எனது கருத்துகளைப் பதிவுசெய்யும் பழக்கம் எனக்கிருந்தது. எனது முதல் நூல் மதிப்புரை இப்படித்தான் உருப்பெற்றது. சில கதைப் புத்தகங்களில் கதைகளின் முடிவில் எனக்கு உடன்பாடு இல்லாதுபோனால் கத்தரித்த வெள்ளைத் தாளை அதன் மேல் ஒட்டி மாற்று முடிவை எழுதும் பழக்கமும் அப்போதே எனக்கிருந்தது.

இப்படி எங்களூரில் ஒரு தலைமுறைக்குப் பள்ளி நூலகமே ஒரு புத்தகமாக இருந்தது. மயிலிறகை இனப்பெருக்கம் செய்யவைக்க எந்த ஆசிரியரும் எங்களுக்குப் பயிற்சியளிக்கவில்லை. எந்த இறகுக்கு நட்ராஜ் பென்சில் சீவல் பிடிக்கும், எந்த இறகுக்கு அப்சரா ஒவ்வாமை இருந்தது என புத்தகங்களின் வாயிலாகவே நாங்கள் கற்றுக்கொண்டோம். தனது பக்கங்களை எங்களுக்குப் படிக்கக் கொடுத்த புத்தகமாகத்தான் எங்கள் பள்ளி நூலகத்தை நான் பார்க்கிறேன். நம் ஒவ்வொருவர் விஷயத்திலும் புத்தகங்கள் பல வடிவங்களில் வந்து நம் வாழ்க்கையின் ஓரங்களில் சாலைகளை அமைக்கின்றன. மரங்களை நட்டு மலர்களைப் பொழியவிடுகின்றன.

சமீபத்தில் நான் பார்த்த டாஸ்மேனிய இயக்குநர் ஜிம்மி வேல்ஸின் The Paid Piper of Libria என்ற சினிமாவின் முழுக் கதையை வேலை மெனக்கெட்டுச் சொல்கிறேன். லிப்ரியா என்ற ஒரு கற்பனை நாட்டில் எல்லா நூலகங்களிலும் புத்தகங்கள் நிரம்பி வழிகின்றன. அந்த தேசத்தில் மனித எண்ணிக்கையைவிட எழுத்தாளர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. வீட்டுக்கொருவரின் படைப்பு பிரசுரம் கண்டுவந்ததால் மரங்கள் நிறைய அழிக்கப்படுகின்றன. மர அழிவால் மழை பொழிவு நின்றுபோய் ஒரு கட்டத்தில் லிப்ரியா நாட்டினர் மழைக்காக அண்டை நாட்டிற்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இதற்கு ஒரு முடிவினைக் கட்ட லிப்ரியா அமைச்சரவை ஜேம்ஸ் என்கிற ஒரு அறிமுகவாதியை ஏற்பாடு செய்கிறது.

எங்கெல்லாம் புத்தகக் குப்பை சேருகிறதோ அங்கெல்லாம் ஒரு நல்ல தொகைக்குப் புத்தக அறிமுகம் எழுதி அவற்றை ஒழிப்பது ஜேம்ஸின் தொழில். லிப்ரியாவிற்கு வரும் ஜேம்ஸ் தனது ஹீரோ பேனாவினால் லிப்ரிய நூலக உள்ளடக்க அறிமுக அழிவைத் தொடங்குகிறான். லிப்ரியாவின் தார் மின்னும் தெருக்களில் நடந்தபடி ஆயிரக்கணக்கான புத்தகங்களுக்கு அறிமுகம் எழுத, நூலகங்களிலிருந்தும் புத்தகக் கடைகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் லட்சோபலட்சம் புத்தகங்கள் கிளம்பித் தெருவில் இறங்குகின்றன. அறிமுகவாதியின் சொற்களில் கட்டுண்டு பின்தொடர்கின்றன. நடந்துகொண்டே செல்பவனுக்கு ஒரு மலையுச்சி கால்வருகிறது. ஹீரோ பேனாவை மலை விளிம்பிலிருந்து தூக்கி ஜேம்ஸ் எறிகிறான். அறிமுகித்த புத்தகங்கள் மலையிலிருந்து வீழ்ந்து அழிகின்றன. மலையுச்சியில் ஒரு பாறைக்கு அடியில் முளைத்த ஒரு

நெருஞ்சிப் பூவை சட்டையில் குத்திக்கொண்டு வீடு திரும்புகிறான் ஜேம்ஸ்.


நாமும் இப்படித்தான் வீட்டுக்குப் போகிறோம். காரணம், ஒரு வேலை முடிந்தபின் அந்த வேலை நடந்த இடத்தில் நாம் இருப்பதற்கான காரணங்கள் வலுவிழந்துவிடுகின்றன. நமது மனித வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வீட்டிற்குச் செல்லும் வழியில் கடைக்குப் போகும் சூழ்நிலைகளும் நம்மில் பலருக்கு ஏற்படுவதுண்டு. நுகர்வுக் கலாச்சாரத்தின் தேவைகளை உந்துமையமாகக் கொண்ட ஒரு பண்பாட்டுச் சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதில் தள்ளுபடிகள் வகிக்கும் இடம் புறக்கணிக்க முடியாதது.

சில்வியா ஸ்பேட் கெய்ஷா எழுதிய Discounts and Good Deals for Seniors in Texas-ல் 380க்கு மேற்பட்ட டெக்சாசிய நகரங்களில் மனதையள்ளும் 1,200 தனித்துவ தள்ளுபடிகள் கிடைக்கின்றன. ஒரு நல்ல பேரத்தை கண்டதுமே இனங்காணும்படியாக இந்நூலை வடிவமைத்திருக்கிறார்கள். தங்குமிடங்கள், கடைத்தெரு, உணவகங்கள், கால்ஃப் மற்றும் பிற கேளிக்கை வாய்ப்புகள், மருத்துவ மற்றும் பல் மருத்துவ சேவைகள் ஆகியவை உட்பட 16 வகையான ரம்மியம் கொஞ்சும் தள்ளுபடிகள் இருக்கின்றன.

நமக்கு அறிவை அளிக்கும் ஆகச்சிறந்த கருவிகளுள் அதிக பக்கங்களைக் கொண்டிருப்பவை புத்தகங்களே. நாம் புத்தகம் படிக்கும்போது ஒரு பக்கத்திற்கு இத்தனை நியூரான்கள் வளர்சிதைமாற்றத்திற்கு உள்ளாவதாக சமீபத்திய பாங்காங் பல்கலைக்கழக ஆய்வு ஒரு கணக்கு காட்டுகிறது. பெரிய விஷயம்தான்.

முதலையும் சியாமள விகாச பட்சியும்

(குழந்தைகளுக்கான மீபுனைவு)



காலமும் வெளியும் இணையுமொரு புள்ளியில் முகிழ்த்த கண்காணா பூமியொன்றில் ஒரு வனம் இருந்தது. பல்வகை விலங்குகள் பூட்டப்பட்ட, பறவைகள் அடைக்கப்பட்ட ஒரு விசித்திரப் பிராந்தியம் அந்த வனம். வாசகர்கள் காலடித் தடம் பதியாத இந்தத் தன்னந்தனித்துவப் பிரதேசத்தை பல்வேறுபட்ட உயிர்வாழ் மிருகங்கள் பகிர்ந்துவந்தன.

அந்த வனத்தினூடே மனிதர் அறியா மர்ம மொழியில் தன்னோடு தானே பேசிக்கொண்டு இலக்கில்லாத் திசையில் ஒரு அவர்ண திரவ நாகமாய் சதா பயணித்தபடி இருந்தது அந்த ஜல நதி. விருட்சங்கள் மண்டிய பச்சிருளில் பரவியிருந்த அதன் கரையோரத்தில் பூமிக்கும் ஆகாயத்திற்குமான ஒரு செங்குத்துப் பாலத்தின் எஞ்சிய துண்டு போல் ஒரு நெடுங்கத்தரி மரம் முளைத்திருந்தது. எண்ணிக்கை துறந்த ஆலகால விழுதுகள் ஆயிரங்கால் மண்டபமாய் அம்மரத்தைத் தோற்றங்கொள்ள வைத்தன.

இப்படியான அந்தக் கத்தரி மரத்தில் ஏறி அதன் கனிகளை உண்டு செரிக்கும் பழக்கத்தைத் தனதாக்கிக்கொண்டிருந்தது ஒரு நதி முதலை. அனுதினமும் சூரியன் ஆகாயத்தின் உச்சிக்கு மெல்லத் தாவிக்கொண்டிருக்கும் காலப்பொழுதில் நமது முதலையும் கத்தரிப்பழம் தேடி மரத்தில் ஆரோகணிக்கும்.

ஒருநாள் முதலையின் கண்களில் பட்டவை ஆற்றுநீரின் மேல் கிளைத்தோங்கிய ஒரு கிளையில் தொங்கிய கத்தரிப் பழங்கள். நான்கு கால்களால் மரத்தைப் பிடித்து ஏறி நீள்முகத்தை நீட்டிக் கத்தரிப் பழங்களை அண்மிக்கையில் சறுக்கி விழுந்தது நதி நீரில் தலைகீழாக நமது கதாநாயக உயர்முதலை. வாயிலும் மூக்கிலும் நீரும் சேறும் உட்புகுந்து மூச்சுத் திணறி முதலை தத்தளித்தது. அதன் குட்டைக் கால்களை ஆற்றின் அல்லிப் பாம்புகள் சுற்றிக்கொண்டன.

திடீரென சிறகடிக்கும் சத்தம் கேட்டு அண்ணாந்தது முதலை. அது சறுக்கிய கிளையில் வந்து அமர்ந்தது ஒரு புராதன சியாமள விகாச பட்சி. முதலை திமிறத் திமிற பாம்புப் பிடிகள் இறுகியதைப் பட்சி பார்த்தது. முதலையின் உயிரூசல் நீடித்தால் அதன் பௌதிக இருப்பு கேள்விக்குள்ளாகிவிடும் என உணர்ந்தது பட்சி.

இன்னொரு இணை உலகில் ஒரு மூதாட்டியிடம் களவாடியிருந்த வடையைக் காலடி பொந்திற்குள் பதுக்கிவைத்த அந்தச் சிறகுதாரி, விருட்டென எழுந்து கருஞ்சிறகுகளை அடித்தபடி நீரினுள் பாய்ந்தது. கணப்பொழுதில் பாம்புகளைக் கொய்து முதலையை விடுவித்து முதலையின் நன்றிக்குக் காத்திராமல் வானுக்குள் தாவியது. கத்தரி மரத்தின் நீர் தீண்டாக் கிளையில் ஏறிக் கத்தரிப் பழங்களை உண்டு நதிக்கரைக்குத் திரும்பியது முதலை, புராதன சியாமள விகாச பட்சியின் மேலதிக பிரக்ஞையுடன்.


பிறிதொரு நாள், பிறிதொரு சமயம், பட்சியினுடைய முறையின்பேரில் ஒரு வேட்டுவன் அந்த

வனத்தில் பிரவேசித்தான். ஆகாயத்தை இடைவிட்டு மறைத்த இலைகளின் பொய்க் கூரையினுடைய நீலப் பொத்தலில் நின்றிருந்த பட்சியை வேட்டுவப் பார்வை அவதானித்தது. அன்றிரவு சியாமள விகாச பட்சியை நளபாகம் செய்துவிடத் தீர்மானித்தது வேட்டுவ மனம்.

அந்நேரம் வேட்டுவத் துப்பாக்கி தோளேறியதைக் கண்ணுற்றது நதியில் நீந்திய உயர்கதாநாயக முதலை. சின்னஞ்சிறு கால்களால் நீரை அளைந்தபடி மெல்லக் கரை நோக்கி முன்னேறிய முதலை, வேட்டுவனின் விழிகளூடே மரணம் தன் இரக்கமற்ற பார்வையைப் பட்சியின் மீது செலுத்தியதைக் கண்டு பதைத்தது. பட்சிக்கு நன்றி சொல்ல இது நல்ல தருணம் என உணர்ந்து வேட்டுவனை நோக்கி விரைந்தது.

மிகைப்படுத்திய மனிதத் தலை போன்றதொரு பாறையின் மேல் நின்றிருந்தான் வேட்டுவன். துப்பாக்கியின் எய்விசையில் விரலை அமர்த்திப் பட்சியின் தரிசனத்தில் அவன் ஆழ்ந்தான். முதலை நீரிலிருந்து வெளிப்பட்டு வேட்டுவனுக்கும் பட்சியின் மரணத்திற்கும் இடையிலிருந்த அரை நொடியில் அடியெடுத்து வைத்தது. வணக்கம் சொல்லிப் பிரியும் கைகள் போன்ற வாயைத் திறந்தது. கடித்தது வேட்டுவனுடைய காலை. வலி பொறுக்காமல் வேட்டுவன் அலறி துப்பாக்கியைத் தலை சுற்றி வீசியெறிந்தான். சப்தம் எழும்பிய இடத்தைப் பட்சியின் காதுகள் தேட, அவற்றைப் பின்தொடர்ந்த அதன் கண்கள் இலை இடைவெளிகளூடே ஓடிய வேட்டுவன் மீது பதிந்து புரிதலில் விரிந்தன.

ஒவ்வொரு பிரதிக்கும் ஒரு நீதி உண்டு. குழந்தைகளே, இந்தப் பிரதிக்கும் அது உண்டு. அது என்ன தெரியுமா? மற்றவர்கள் நமக்கு உதவி செய்தால் நாமும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்கள் இன்னொரு முறை நமக்கு உதவி செய்வார்கள்.



டைரிக் குறிப்பாக ஒரு நூல் மதிப்புரை



தமிழில் வரிவடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுச் சில நூற்றாண்டுகளாவது ஆகியும் தமிழில் இருமொழிப் படைப்புகள் ஏறத்தாழ இல்லை என்றே கூறிவிடலாம். ஒரு வகையில் 19ஆம் நூற்றாண்டு கிரந்தச் சுவடிகளை இருமொழிப் படைப்புகளாகக் கருதலாம். ஆனால் அவை நேரடியாகத் தமிழில் எழுதப்படாததான காரணத்தைக் கூறி இக்கருதுகோளை ஏற்க மறுப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த வெற்றிடத்தை நிரப்ப வந்திருக்கிறது க்ரியாவின் சமகாலத் தமிழ் அகராதி (க்ரியாவின் மொழியில் "தற்காலத் தமிழ் அகராதி").

பெருமளவு மேலை இலக்கியக் கூறான அகராதி வகை இலக்கியம் அந்தாதி வகையைவிட அமைப்புரீதியான சிக்கலைக் கொண்டது. நான்லீனியராக க்ரியாவின் இந்நூல் இருக்கிறது. இவ்வகை வடிவ ஒழுங்கீனம் படைப்பாளிக்குச் சுதந்திரத்தை அளிக்கும் அதே சமயத்தில் அடிப்படையான சில மரபார்ந்த உத்திகளை அவன் கையாள விடாமல் அந்தச் சுதந்திரமே அவனை முடக்கும் அபாயமும் ஏற்படுவதுண்டு. இந்தப் பிரச்சனையிலிருந்து சமகாலத் தமிழ் அகராதியும் தப்பிக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

அமைப்பிலா அமைப்பை உத்தியாகப் பயன்படுத்தி எழுதுவதன் பிரதான நோக்கங்களில் ஒன்று கோர்வையான வர்ணனையைத் தவிர்த்து ஊகிப்புத் தன்மையை இல்லாமல் ஆக்குவது. ஆனால் தற்காலத் தமிழ் அகராதியில் பல சமயங்களில் அடுத்து வருவதை ஊகிக்க முடிகிறது. *அல்பாயுசுக்குப்* பிறகு *அல்போன்ஸோ* (பக். 65) வருவது ஒருபுறமிருக்க, *சீக்காய்*1-ஐ (பக். 591) அடுத்து *சீக்காய்*2 வருவதை ஒரு சறுக்கலாகவே பார்க்கிறேன்.

இந்நூலில் கிட்டத்தட்ட முழுப்பகுதியுமே வார்த்தைகளால் அமைந்திருப்பதால் வார்த்தைகள் ஆற்றும் பங்கையும் குறிப்பிட வேண்டும். கடந்த இருமாத காலத்தில் தமிழ் எழுத்து வெளிக்குள் ஸ்கலிதமாகத் துவங்கியுள்ள பின்கலாச்சார கதையாடலின் துவந்த மொழி இந்நூலில் ஒரு ஊர்த்துவ வேகம் கொண்டு பரவலான கிடைநிலைப்பாடு எடுத்துவருவதைக் காண்கிறேன்.

எடுத்துக்காட்டாக, பொதுப்புத்திக்கு உகந்த பழந்தமிழ் வார்த்தையான *அல்குல்* என்கிற வார்த்தை (பக். 65). தமிழ் இலக்கண விதிப்படி "அற்குல்" என எழுதப்பட வேண்டிய இவ்வார்த்தை "அல்குல்" என்றே எழுதப்பட்டிருப்பது - அதுவும் ஒரு அகராதி வகை நூலில் - ஆசிரியரின்

நோக்கத்தை சந்தேகிக்கவைக்கிறது. இந்த வார்த்தையின் சுற்றுப்புறத்தில் உள்ள வார்த்தைகள் எவை? *அல்* (ஒரு கூற்றை அல்லது நிலையை மறுத்தல், பக். 64), *அல்பம்* (பக். 65), *அல்லல்* (பக். 65), *அல்லல்படு* (பக். 65). எழுத்துப்பட அமைப்பு (டைப்போகிரபி) உத்தியில் எழுதப்பட்டுள்ள இப்பகுதி சற்றே பிற்போக்கான ஒரு செய்தியைத் தன்னுள் கொண்டிருப்பதாக எண்ணச் செய்தாலும் அது ஆசிரியரின் கூற்றா கதாபாத்திரத்தின் கூற்றா என்று தெளிவாகத் தெரியாதிருப்பது ஆசிரியரின் உத்திக்கு அல்லது உள்நோக்கத்திற்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

இந்நூலில் ஆபாச வார்த்தைகள் அதிர்ச்சி மதிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. எ.கா., *இலந்தை*(ப்பழம்) (பக். 156), *ஒளி* (பக். 297), *ஒன்றுபடு* (பக். 300), *சிட்டுக்குருவி* (பக். 573), *லேகியம்* (பக். 1188) போன்றவை. அதிர்ச்சி மதிப்பு பின்நவீனத்துவத்தின் கூறுகளிலேயே மிகவும் உபயோகமானது மற்றும் போணி சார்ந்தது என்கிறபோதிலும் இவ்வார்த்தைகள் நூலின் எஞ்சிய பகுதிகளுடன் ஒட்டாமல் மணல் திட்டுக்களாகத் துருத்திக்கொண்டு நிற்கின்றன.

பாலியல் சொல்லாடல் ஒரு முனையில் உள்ளதென்றால் இன்னொரு முனையில் இருப்பது வன்மொழிபு. இதில் க்ரியாவின் சாமர்த்தியம் வன்முறை தெறிக்கும் வார்த்தைகளில் ஒருவித பொருள் தெளிவின்மையை (ambiguity) ஏற்றி அவற்றின் தாக்கத்தை நீர்த்துப்போகச் செய்வது. எடுத்துக்காட்டாக, *இழுத்துக்கொண்டு போ* (பக். 160) மற்றும் *இழுத்துப் பறி* (அதே பக்.) என்கிற வார்த்தைகள்:- முறையே எதை மற்றும் யாரை? *குல்லாப்போடு* (பக். 467) போன்ற நேரடி போதனைகள் அல்லது அறைகூவல்களும் இல்லாதில்லை. இருப்பினும் முந்தைய 466 பக்கங்களில் இந்த வன்முறையை நாம் பல முறை எதிர்கொண்டுவிடுவதால் 466ம் பக்கத்திற்குப் பிந்தைய இத்தகைய வார்த்தைகள் அதிர்ச்சி மதிப்பு கூட்டத் தவறுகின்றன.

கதையின் முதல் வரியில் அறிமுகமாகும் அ-வைச் சுற்றியே அனைத்தும் பின்னப்பட்டுள்ளது. ஒரு தனிப்பேச்சாக (monologue) துவங்கி மெல்ல மெல்லப் பரிணமித்து மேலும் பரவலான ஒரு கதைப்பரப்பாக விரியும் இந்த நாவலை bildungsroman வகை புனைவாகப் பார்க்கிறேன். பிரெஞ்சைச் சேர்ந்த ஸ்டெந்தாலின் "சிவப்பும் கருப்பும்" (The Red and the Black), அதே இதுவைச் சேர்ந்த குஸ்தாவ் பிளாபெர்ட்டின் "மேடம் பவாரி" (Madame Bovary), ஆங்கிலத்தைச் சேர்ந்த மார்க் டுவைனின் "டாம் சாயர்" (Tom Sawyer) ஆகியவை பில்டங்ஸ்ரோமன் வகை புனைவுக்கு எடுத்துக்காட்டுகள். முதல் சில பக்கங்களைப் பெருமளவு ஆக்கிரமிக்கும் அ-வின் ஆக்கிரமிப்பு நம் இடது கையில் பக்கங்கள் சேரச் சேரக் குறைவடைந்து பிற கதைமாந்தர்களும் உறவுகளும் ஊடாட்டங்களும் இடங்களும் எனப் பெரிதாகிப் புனைவின் வெளி விசாலிக்கிறது.

க்ரியாவின் படைப்பு பல சமகால பின்நவீனப் படைப்புகளை நினைவுகூற வைக்கும் அதே வேளையில் அவ்வாறு நினைவுகூறிய பின்னும் தனது தனித்துவ மொழிதலின் பலத்தால் வாசக வெளியின் முற்றத்தில் இருகால் பதித்துக் குந்துகிறது. இங்கு க்ரியாவின் வட்டார மொழிப் புலமையைப் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். தமிழக வட்டார மொழிகள் மட்டுமல்லாது இலங்கை வட்டார மொழியிலும் நம்முடன் பேசுகிறார்கள் கதை மாந்தர்கள். 1328 பக்கங்கள் புரளும் இந்நூலில் இதன் விலையான 495 ரூபாய் அளவிற்குக் கதை இருப்பதாக கூறிவிட முடியாது. இருந்தாலும் முடிக்கும்போது ஒரு காத்திரமான படைப்பைப் படித்த திருப்தி ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. அடுத்த பதிப்பிற்குத் "தற்கால" தமிழ் அகராதியை க்ரியா மேலும் மெருகேற்றி எழுதுவார் என வாழ்த்துக்களுடன் எதிர்பார்க்கிறேன்.

ஒரு ஊரில் ஒரு கதை

கட்டுரை எழுதுவது என்பதே ஒரு சுவாரசியமான செய்கை. குறிப்பாக, கட்டுரை எழுதுவது பற்றிக் கட்டுரை எழுதுவது என்றால் கேட்கவே வேண்டாம். இன்னும் குறிப்பாக, இந்தக் கட்டுரை பற்றிக் கட்டுரை எழுதுவது என்றால் இந்தப் பக்கமே வர வேண்டாம்.

ஆங்கிலத்தில் self-reference எனப்படும் இந்தத் தற்குறிப்பீடு என்ற தனித்துவத்தை இத்தாலோ கால்வினோ போன்ற சமகால உலக எழுத்தாளுமைகள்கூடத் தமது படைப்புகளில் தொழிற்படுத்தியிருக்கிறார்கள். "ஒருவேளை பனிக்கால இரவில் ஒரு பயணி" (If on a winter's night a traveller) என்கிற ஒரு முழுநீள நாவலையே அவர் தற்குறிப்பீடு உத்தியில் எழுதியதோடு அதற்கு வாசகனை (குறியீட்டுப் பன்மை) உடந்தையாக்க அவனையும் ஒரு கதாபாத்திரமாக்கினார். வாசகனின் ஆர்வத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள ஒரு கதாநாயகியைப் புனைவில் நுழைத்தார் (வாசகியை நுழைத்திருந்தால் வேடிக்கையாக இருந்திருக்கும்; ஆனால் புனைவு மரபில் ஆசிரியன் ஒரு தனிநபரையோ தெள்ளிய அடையாளம் அற்ற மொத்த வாசக சமூகத்தையோ மட்டும்தான் விளித்து எழுதியிருக்கிறான், குறிப்பிட்ட இருவரை அல்ல. புனைகடிதங்கள் அப்படி எழுதப்படுவதுண்டு, முழுப் படைப்புகளும் அல்ல). எலும்புத் துண்டாகத் தன்னையும் நுழைத்து வாசகருடன் ஊடாடவைத்தார். இது ஒரு வகை இலஞ்சமாகத் தெரிந்தாலும் இலாபம் இலக்கியத்திற்கே என்பது வேறு விஷயம்.

கால்வினோவைத் தவிர்த்து, வேறு எந்த எழுத்தாளர்கள் இந்த உத்தியைக் கையாண்டிருக்கிறார்கள்? பலரும். உம்பர்ட்டோ ஈக்கோ, மிலன் குந்தேரா, தாமஸ் பிஞ்சன் போன்றவர்கள் இம்மாதிரியாக எழுதாமல் இருந்தால்தான் ஆச்சரியம். இவர்களைத் தவிர்த்து, பொதுவாகத் தற்குறிப்பீட்டு உத்தியின் மைய இலக்கு நகைச்சுவை என்பதாகவே இருக்கிறது. மையத்தை விலக்கிப் பார்த்தால் ஒரு அறிவுஜீவி உரையாடல் நிகழ்த்துவதான பாவனைக்குத் தற்குறிப்பீடு உத்தி உதவுகிறது.

தமிழில் பேயோன் இவ்வகையான படைப்புகளைத் தொழிலாகச் செய்துவருகிறார். 'இடைநிலை' ஏப்ரல் 2010 இதழில் வெளியான 'ஒரு ஊரில் ஒரு கதை' என்கிற அவரது சிறுகதை தமிழில் தற்குறிப்பீட்டு எழுத்திற்கு ஓர் உதாரணம்:-

> ஒரு ஊரில் ஒரு கதை இருந்தது. அந்த இக்கதை எந்த இலக்குமின்றி ஒவ்வொரு சொல்லாக வளர்ந்து நீண்டு பெருத்துப் பயணித்து அதே தடங்கலற்ற போக்கில் அடுத்த வரிக்கு வந்தது. இன்னும் சில சொற்களை அநாயாசமாகப் பிறப்பித்து முதல் பத்திக்கு சதை சேர்த்துக்கொண்டது. யாரையுமோ எதையுமோ பற்றியற்றுத் தன்னிறைவாகத் தனக்குள் எல்லாத் திசைகளிலும் விரிவடைந்து அடுத்தப் பத்திக்குத் தொடர்ந்தது அதன் பயணம்.

சரி, விஷயத்திற்கு வருவோம். இந்தக் கட்டுரையின் இரண்டாவது பத்தியின் நீளம் எனது சமீபகாலக் கட்டுரை இலக்கியம் கண்டிராத ஒன்று. பத்திகள் சுருக்கசுருக்கமாக இருந்தால்தான் வாசிக்க எளிதாக இருக்கும். இது என் சக எழுத்தாளர்களால் ஒருபக்கம் தூற்றப்பட்டு இன்னொரு பக்கம் அவர்களுக்குக் காசோலை அனுப்பும் வெகுஜன இதழ்களிடமிருந்து நான் கற்றுக்கொண்டது.

இந்தக் கட்டுரையை மொட்டையாக முடிக்க வேண்டாமே என்று பார்த்தால் - தற்குறிப்பீட்டுக் கட்டுரை எழுதுவது எளிதல்ல - கடைசிப் பத்தியை எப்படியாவது தர்க்கபூர்வமாக முடிக்க வேண்டியிருக்கிறது. வேறு எதைப் பற்றியும் எழுத முடியாமல் தற்குறிப்பீடு என்று என் வார்த்தைகளாலேயே வேலி போட்டுக்கொண்டாயிற்று. இனி கட்டுரையை முடித்த மாதிரிதான்.

ரஷ்ய இலக்கியம் பேசுகிறேன்

பியோதர் தாஸ்தாயெவ்ஸ்கியின் 'சூதாடி' நாவலைப் படித்துக்கொண்டிருக்கிறேன். வெறும் 98 பக்கங்கள்தான். புத்தகம் முடிந்த பிறகுகூடக் கதாபாத்திரங்கள் அறிமுகமாகிக்கொண்டிருப்பார்கள் போலும். அத்தனை கதாபாத்திரங்கள். இந்தச் சிறிய புத்தகத்திற்கு எதற்காக இவ்வளவு கூட்டம் சேர்க்கிறார்? அந்தப் பாட்டியை முதலிலேயே கொன்றுவிட்டிருந்தால் இவ்வளவு கதாபாத்திரங்கள் தேவைப்பட்டிருக்காது. நாயகனுக்கும் நாயகிக்கும் பிரிட்டிஷ்காரனுக்கும் கூடுதல் பக்கங்கள் கிடைத்திருக்கும். வர்ணனைகளையும் வேறு விதமாகக் கொண்டுபோயிருக்கலாம். கிடக்கட்டும்.

லியோ டால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு' ஒருவன் கடந்தகாலத்தில் செய்த ஆகப்பெரிய தவறுக்கு வருந்தி மன்னிப்பு தேடுவதைக் கதையாக வர்ணித்துக் கூறுகிறது. இது டால்ஸ்டாய்க்கும் தெரியும் - இயற்கையாகவே. சுமார் 500 பக்கங்கள். புத்தகத்தைக் கையில் எடுத்தால் கீழே வைக்க மாட்டீர்கள். அதுவே தானாகக் கையிலிருந்து நழுவி விழுந்துவிடும். பிறகு யாராவது பார்த்து எடுத்து வைத்துவிட்டு உங்கள் தலைக்குக் கீழே ஒரு தலையணையை வைப்பார்கள். சீதோஷ்ண நிலையைப் பொறுத்து போர்வையும் கிடைக்கலாம். நித்திராதேவிக்கு மாமா வேலை பார்ப்பவனெல்லாம் அமர எழுத்தாளன்!

பொதுவாகவே வேறு எந்த எழுத்தாளரையும்விட டால்ஸ்டாயின் கதாபாத்திரங்கள் எனக்கு வெள்ளந்தியாகத் தெரிகிறார்கள். காரணம், டால்ஸ்டாய் தங்களை மனித தூக்க மாத்திரைகளாகப் பயன்படுத்துவது இந்த அன்னாக்களுக்கும் கோல்யாக்களுக்கும் தெரியாது. மாஸ்லோவாவை ரயில் நிலையத்தில் வைத்து கோமகன் விரான்ஸ்கி சந்திக்கும் தருணம் சமகால தமிழ் தொலைக்காட்சித் தொடர்களுக்குப் பொறாமை தரக்கூடியது.


(மூன்றாம் அத்தியாயத்தில் நெஹலூதவை அறிமுகப்படுத்தும்போது "தனது வழவழப்பான, வெள்ளைக் கால்களைக் கீழே வைத்து சப்பாத்துகளுக்குள் அடியெடுத்துவைத்தான்" என்று எழுதுவதற்கான அவசியம் என்ன? எட்டாம் அத்தியாயத்தில் மாஸ்லோவாவைப் பற்றிச் சொல்லும்போது, "சிறையின் மேற்கோட்டிற்கு அடியிலிருந்து விம்மிய மார்பகங்கள்" என வர்ணிக்கிறார். யார் இந்த டால்ஸ்டாய்?)

டால்ஸ்டாயின் சிறுகதைகள் மீள்வாசிப்பில் புதுப்புது அர்த்த சாத்தியங்களை ஏற்படுத்தித் தருபவை. எளிதில் செரிமானம் ஆகிவிடுபவை. உதாரணமாக 'இவான் இலியீச்சின் மரணம்'. ஆனால் நாவல்களின் கதையே வேறு. டால்ஸ்டாய் நல்லவரா கெட்டவரா என்று ஒரு கேள்வி எழுந்தால் பதிலை ஊகிப்பது கடினமல்ல.

மருத்துவர் ஆன்டன் செக்காவின் 'என் வாழ்க்கை' ரஷ்ய செவ்வியல் அச்சில் வார்க்கப்பட்ட, 80க்கும் குறைவான பக்கங்களைக் கொண்ட புனைவு. ஒரு தேனீர்க் கோப்பையில் துன்பப் புயல் என வர்ணிப்பார் ஒரு மொழிபெயர்ப்பாள நண்பர். மனித வாழ்வு குறித்த அவருடைய துன்பியல் பார்வையை நம்மீது கொட்டுகிறார் செக்காவ். ஒவ்வொரு கதையையும் விரக்தியில் தோய்த்தெடுத்து நமக்குப் புகட்டுகிறார். வாழ்க்கையின் மற்றும் அவ்வாழ்க்கையில் நேரும் உறவுகளின் அர்த்தமின்மையை இயன்ற வரை துயரம் சிந்த எடுத்துரைத்த திருப்தியுடன் புனைவை முடிக்கிறார். ஒவ்வொரு புனைவையும் முடிக்கையில் நாயகன் அல்லது நாயகி மனநோயாளி ஆகும்போதோ, விரக்தி கலந்த கேள்விக்குறியில் வறட்டுப் புன்னகை கலக்கும்போதோ, அல்லது லட்சியங்கள் தகர்ந்து தனிமை கவியும்போதோ நமக்கு ஆச்சரியம் ஏற்படுவதில்லை. அவர் தொடக்கத்திலிருந்தே அதற்குத்தான் அடிபோட்டுவந்திருக்கிறார் என கூர்மையான வாசகர்கள் அவதானிக்க முடியும். ஒருவாறாகக் கதை முடியும்போது, "இதற்குத்தானே எல்லாம்?" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

உலக செவ்விலக்கியத்தில் ரஷ்ய இலக்கியத்திற்குத் தனி இடம் உண்டு. இவர்கள் தவிர புஷ்கின், துர்கெனிவ், ஷோலோக்கோவ் என்று இன்னும் சில கதை மாந்தர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசாக எழுதக்கூடியவர்கள். துர்கேனிவ் அப்படியே செக்காவ் போல் எழுதக்கூடியவர். அவர் 'மூன்று ஆண்டுகள்' என்று எழுதினால் இவர் அதே அளவில் 'மூன்று காதல் கதைகள்' என ஒன்று எழுதியிருக்கிறார். மனித வாழ்க்கை அர்த்தமற்றது, துயரமானது, எதுவும் நிலைக்காது என்று எழுத இத்தனை பேர்.

துண்டிலக்கியம்



நமது இசையில் இனிமை உண்டு, ஓசை கிடையாது (சங்கர்-கணேஷுக்கு முன்புவரை). வள்ளுவர்கூட 'மரபிசை நீடு வாழ்வார்' என்பது போல ஏதோ எழுதியிருக்கிறார்.

*

வெள்ளி ஸ்பூன்! எனது வெள்ளி ஸ்பூனை காணவில்லை!!!

*

என்னதான் ஜென், ஜான் என இருந்தாலும் ஒரு வெள்ளி ஸ்பூன் தொலைந்து போனால் மனம் அடித்துக்கொள்கிறது.

*

மாலை நேரங்களில் சற்று குளிராக இருக்கிறது. இருந்தாலும் உலகம் வெப்பமாதலை அலட்சியப்படுத்துவதற்கில்லை.

*

சனி ஞாயிறுகளில் நகரமயமாக்கத்திற்கு முட்டுக்கட்டை போட்டாலே பாதி சுற்றுச்சூழல் பிரச்சனை குறையும்.

*

எனது முதல் நூலை 11 வயதில் தக்ளி என்ற கருவியை பயன்படுத்தி உருவாக்கினேன்.

*

கொல், கற்பழி, நாசமாக்கு, கிள்ளு…. வினைச்சொற்கள் என்கிற பெயரில் அகராதிகள் பரப்பும் வன்முறை அதிர வைக்கிறது.

*

முட்டையிலிருந்து கோழியை படைப்பதா, கோழியிலிருந்து முட்டையை படைப்பதா? கடவுளின் முதல் சிக்கல்.

*

நந்தியம்மன் கோவில் தெருவீதியூர்புர நகர் என்கிற ஊருக்கு சென்றிருந்தேன். இங்கே கண்ணுக்கெட்டிய தூரம் வரை இந்த ஊர்தான் தெரிகிறது. வித்யாசம்!

*

திவாரி விவகாரம் ரோமானிய டெகடன்சை நினைவூட்டுகிறது. மத்திய எண்பதுகளில் உள்ள ஒருவர் உடலார்ந்த ஊடாட்டங்களில் ஈடுபடுவது டெகடன்ஸ் அன்றி வேறென்ன.

*

மொட்டை தலையை முழங்காலுக்கு உருவகமாக்கி குழப்பமாக ஒரு கதை எழுதிக்கொண்டிருக்கிறேன். யாராவது விளக்கம் எழுதி புரிய வைக்கிறார்களா பார்ப்போம்.

*

சாருவின் வாசகர்களுடைய சராசரி வயது குறைந்துகொண்டே வருகிறது. விரைவில் அவர் குழந்தைகள் எழுத்தாளர் ஆகிவிடப் போகிறார்.

*

என் சமகால மனைவி எனக்களிக்கும் வேதனைகளை புரிந்துகொள்ள மட்டுமாவது இன்னொரு மனைவி இல்லாமல் வேலைக்கு ஆகாது போலிருக்கிறது.

*

என் எழுத்தை படிக்கும் பெரும்பாலானோர் எனக்கு ரசிகர்களாகிவிடுகிறார்கள். எல்லோரும் அல்ல. பெரும்பாலானோர் மட்டும்.

*

இப்போது மணி 1:10 ஆகிறது. இன்னும் சில நாட்களில் ஆண்டே 2010 ஆகிவிடும். ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா! என் நகைச்சுவை அடிக்கடி என் வயிற்றையே பதம் பார்க்கிறது!

*

பெண்கள் பேசும்போது மார்பை பார்க்கும் ஆண்களை தூற்றாதீர்கள். உலக சினிமா ஓடும்போது கீழே சப்டைட்டிலை பார்க்கிறோமல்லவா, அதுபோலத்தான் இதுவும்.

*

நானறிந்த ஒரு எழுத்தாளருக்கு துவக்கத்திலிருந்தே ரைட்டர்ஸ் பிளாக் உள்ளது. நான் 23 சி பிளாக்கில் இருப்பதுபோல அவர் இந்த பிளாக்கில் இருக்கிறார்.

*

மீசையை ட்ரிம் செய்தபோது வலது பக்கம் அப்படியே வந்துவிட்டது. இடது பக்கம் மட்டும் எஞ்சியுள்ளது. ஒரு மாறுதலுக்காக மீசையை எடுத்திருக்கிறேன்.

*

வணக்கம் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள். புது ஆண்டில் பூஜ்ய எண்ணிக்கை குறையாதது குறித்து மகிழ்ச்சி. 2011-லிருந்து நிலைமை வேறு.

*

புத்தாண்டின் முதல் சிந்தனை:- எனது ஒட்டுமொத்த வாழ்க்கையும் கடவுளுக்கு எழுதிய மொட்டைக் கடிதமாகிவிடுமோ என அச்சமாக இருக்கிறது.

*

ஐபாடை வாங்கி இத்தனை நாள் ஆனபின்னும் சிம் கார்டை அதில் எங்கே செருகி பாட்டு கேட்பது என கண்டுபிடிக்க முடியவில்லை. எளிமையே உன் விலை என்ன?

*

@ajinomotto ஐபாட் என்றால் சிம் கார்டு போட்டு ஒயர் மூலம் கிரைண்டருடன் இணைத்து பாட்டு கேட்க மாட்டார்களா?

*

இந்த ஆண்டிலும் தேதிகள் தவிர எதுவும் மாறப் போவதில்லை.

*

எனக்கு தெரிந்த ஒரு நண்பர் வங்கியில் பணிபுரிகிறார். எனக்கு தெரியாத நண்பர்கள் வேறு இடங்களில் பணிபுரிகிறார்கள்.

*

மாமனார் வீட்டிற்கு போனபோது கண்ணில் பட்டது எனது வெள்ளி ஸ்பூன். உரிமை கோரவா முடியும்? தனித்துவமாக இருக்கிறது என்று பாராட்டிவிட்டு வந்தேன்.

*

ஒருவழியாக புத்தாண்டு தின கொண்டாட்டங்கள் முடிந்து நிதர்சனம் உறைக்க துவங்கிவிட்டது.

*

ஜேம்ஸ்ஜாய்சின் யுலிசிஸ் நாவல் நீண்டகாலமாக வீட்டில் கிடந்தது. இன்று எழுந்ததும் எடுத்து புரட்டினேன். என்னமாக உளறிக்கொட்டியிருக்கிறார் மனிதர்!

*

சுரோணித வலைதளங்களில் எப்போதுமே ஒரு பிரச்சனை. தளத்தில் நுழையும்போது வருகிற ஆயிரத்தெட்டு பாப்அப் விண்டோக்களில் எதை முதலில் கிளிக் செய்வது?

Spoilt for choice என்று இதைத்தான் சொல்வார்களோ?

*

சிவப்புநாடாத்தனம் இருக்கும்வரை எழுத்தாளனால் சொந்த ஜெட் விமானம் வாங்க முடியாது. இந்த ஆண்டில் ஒரு சிறு தீவையாவது வாங்க முடிகிறதா பார்ப்போம்.

*

பொதுமைப்படுத்தல் எழுத்துநடைக்கு ஒருவித உறுதியை அளிக்கிறது. வாசகனுக்கு எழுத்தாளன் மீது நம்பிக்கை ஏற்படுத்தி படிக்க வைக்க அது முக்கியம்.

*

புஜ தசைகளை பெரிதாக காட்ட பமீலா ஆண்டர்சன் பாணி சிலிக்கோன் இம்பிளாண்ட் ஏதேனும் உள்ளதா? மனைவியின் உறவுக்கார பெண்கள் வீட்டிற்கு வருகிறார்கள்.

*

இருண்ட வானில் முக்கால் நிலா. பொதுமக்களுக்கு இலவச கண் பரிசோதனை.

இலவச கண் விருந்து என இருக்க வேண்டும்.

*

ஆதி ஜீவ பரிணாமக் குரங்கின் அவரோகண திரேக கந்த நீக்கி அடக்கம் துறந்து கிடைகொள்கிறது என்றால் பாடிஸ்ப்ரே தீர்ந்துவிட்டது என்று பொருள்.

*

இலக்கிய குப்தர் என ஒரு மௌரிய மன்னர் நிஜமாகவே இருந்தாரா, அல்லது இந்த லபக்குதாஸ் கதை விடுகிறாரா?

*

இந்த முறையும் புத்தக காட்சியில் எனது புத்தகங்கள் நன்றாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றனவாம். நிஜமாகவே நன்றாகத்தான் எழுதுகிறேனோ என்னவோ.

*

காஷ்மீர் கச்சத்தீவு அருணாசலபிரதேச பிரச்சனைகள் ஒருபுறமிருக்க, என் மேஜையின் இறையாண்மை தொடர்ந்து மீறப்படுகிறது. இந்த டம்ளரை யாரிங்கே வைத்தது?

*

இன்று புத்தக காட்சியில் சிலர் என்னிடம் கெஞ்சி புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். இனி பிரிண்ட் எடுத்தபின் எனக்கு தரச் சொல்லி நான் கெஞ்ச வேண்டும்.

*

என்னை பார்த்ததும் பல வாசகர்கள் தொகுப்பு, புனைவு, தொன்மம் என அறுக்க துவங்கிவிட்டார்கள். இவர்களிடமிருந்து என்னை காப்பாற்றடா மார்க்குவேஸ்வரா!

*

டிவி விளம்பரங்கள் அனைத்தையும் ஒரு டிவிடியில் அடைக்கவேண்டும். அடுத்து அந்த டிவிடியை எரிக்கவேண்டும். பிறகு விளம்பரங்களின்றி டிவி பார்க்கலாம்.

*

இலக்கியத்தை எல்லோரும் உருவாக்க வேண்டும் என்கிறார் பிரெஞ்சு கவிஞர் Lautreamont. அட, படைப்பூக்கம் எல்லா உயிர்க்கும் என வள்ளுவர்கூட கூறுகிறார்.

*

திவாரியின் வாழ்க்கை மச்சத்தில் தளம்கொண்டு இயங்கியுள்ளது. என்னையோ இவ்வயதில் நித்திராதேவி தவிர யாரும் தழுவுவதில்லை. இருக்கட்டும். நல்லிரவு.



இத்தனை ஆண்டுகாலம் டிவி விளம்பரங்களை அவதானித்தபின் ஒன்று புரிகிறது. சிவப்பானவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கறைதான் மாபெரும் சமூக தீமை.

*

காலையில் ஒரு எழுத்தாளருடன் விவாதித்தபடி ஆட்டோவில் சென்றேன். விவாதமும் ஆட்டோவும் முறையே பரஸ்பர விரோதத்திற்கும் வடபழனிக்கும் இட்டுச்சென்றன.

*

வானிலிருந்து பல்வேறு தண்ணீர் துளிகள் மிக அதிக எண்ணிக்கையில் கொட்டுகின்றன. கொட்டியதோடு விடாமல் தரையில் சங்கமித்து கூட்டமாக செல்கின்றன.

*

தனரேகையை ஆராயும்போது ஆயுள்ரேகை மேல் ஒரு கொசு வந்து அமர்ந்தது. உள்ளங்கையால் நெற்றியில் ஓங்கி ஒரே அடி. நெற்றியில் கொசு பொட்டு கவித்துவம்.

*

ஒரு மணிநேரம் கண்ணசரலாம் என்று பார்த்தால் கதை யோசனைகள் ஏதாவது வந்து குறுக்கிட்டுக்கொண்டே இருக்கின்றன.

*

கதை யோசனை:- சாக முடிவெடுக்கும் ஒருவன் வழியில் கிரணிப்பழம் சாப்பிட விரும்புகிறான். முதலில் கிரணித்து பின்னர் மரணித்தால் என்ன? உளவியல் கதை.

*

பல புனைவுகள் தீவிர வாசிப்பை கோருகின்றன. புனைவுகள் கோரிக்கை எழுப்பும்போது அலட்சியப்படுத்த முடியுமா? படித்துவிடுகிறேன்.

*

யுமிக்கோ கயுகவா என்பது போல் ஒரு பெயர் இருக்கவே கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

*

காலையில் லலித் கலா அகதமி கலை கண்காட்சிக்கு சென்றேன். அதில் ஒரு ஓவியம் பார்க்க பார்க்க என்னை என்னவோ செய்தது. நெகட்டிவ் கேட்டிருக்கிறேன்.

*

மீசை பெருமளவு வளர்ந்துவிட்டது. இனி வாட்டர்கலர் தேவைப்படாது.

*

நான் வாங்கி தந்த வாட்டர்கலரை என்னிடமே ரூ. 25க்கு திரும்ப விற்க முயன்றான் வாரிசு! போடா, வெளியே சீப்பாகக் கிடைக்கிறது என மறுத்துவிட்டேன்.

*

சிறுகதையில் யாராவது சாவதைவிட சிறுகதையே சாவது மேல் என்று கூறும் மனிதாபிமான எழுத்தாளர் ஒருவரை இன்று பார்த்தேன், விடைபெற்றேன்.

*

ஏதோ அழைப்பிதழில் மூத்த ஓவியர் என்பதை முத்த ஓவியர் என படித்துவிட்டேன் . ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா! யப்பா மார்க்குவேஸ்வரா! காலையிலேயேவா?

*

எனது முதல் நாவலை 17 வயதில் எழுத முயன்றேன். எப்படி எழுதியும் அது நாவலாக வரவில்லை. பொறுமையிழந்து கடைக்கு போய் ஒன்று வாங்கிவிட்டேன்.

எனவே எனது முதல் நாவல் ஹெமிங்வேயின் 'கிழவனும் கடலும்'.

*

திரை விமரிசனத்தில் முழு கதையையும் எழுதாமல் இருக்க முடியுமா? படத்தில் இருப்பதைத்தானே ஐயா எழுதுகிறோம். இவர்களென்ன அரூப படமா எடுக்கிறார்கள்?

*

மிகமிக நுட்பமான நகைச்சுவை கதை ஒன்றை எழுதிக்கொண்டிருக்கிறேன். சீரியஸ் கதை என்று தவறாக எடுத்துக்கொள்வார்கள். அவ்வளவு நுட்பமான நகைச்சுவை.

*

Preponderance-ம் Preposterous-ம் ஒரே ஆளா?

*

தமிழ் எழுத்தாளர்கள் எல்லோருடைய வீட்டு குழாயிலும் தண்ணீரை நிறுத்திவிட்டால் தமிழ் இலக்கியம் செத்துவிடும் என்கிறார் நண்பர். குலை நடுங்குகிறது.

*

பாடிக்கொண்டிருந்த எதிர்வீட்டுக்காரர் "சாமஜ வர கமனா?" என்று கேட்டார். புரியவில்லை. "சமஸ்தானங்கள் இணைவதற்கு முன்" என்று சமாளித்து நழுவினேன்.

*

மனித சோகங்களுக்கு முடிவேயில்லையா?

*

இன்று ஒரு கிழவிக்கு உதவும் சாக்கில் அவள் கைபிடித்து நான் சாலையை கடந்தேன். பெரிய சாலைகளை கடப்பது எழுத்தாளனுக்கு இந்த வயதிலும் சவாலாக உள்ளது.

*

பழைய பேப்பர் கடைகள் இன்னமும் 18-ம் நூற்றாண்டிலேயே இருக்கின்றன. நாளேடுகள், பத்திரிகைகள்தான் கிடக்கின்றன. டிவிடி அட்டைகள் கேட்டால் இல்லையாம்.

*


ஜேம்ஸ் காமரானின் 'அவதார்' பார்க்க நேர்ந்தது. நீண்ட படம் எனலாம். காரணம், நீல நீலமாக பல பாத்திரங்கள் வருகிறார்கள். 3டி மட்டும் தனித்துவம்.

*

சப்டைட்டில் மொழியில் படிப்பதைவிட எழுதுவது மூளைச் சோர்வை ஏற்படுத்துகிறது. நல்லிரவு.

*

அனைத்தையும் மீறி மனைவியும் மகனும் என்னை நேசிப்பதை பார்த்தால் ஒரு சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை:- இதற்கு நான் ஏதாவது பணம் தர வேண்டுமா?



நாம் பார்க்கும் பல நட்சத்திரங்கள் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே அழிந்துபோனவையாம். பட்டாம்பூச்சிகளும் வானவில்லும்கூட அப்படித்தான் இருக்கும்.

*

பிரபஞ்சத்தின் அளவு பற்றி படிக்க படிக்க நான் சிறிதாகிக்கொண்டே வருவதாக உணர்கிறேன். எனக்கே இப்படி என்றால் மற்றவர்களுக்கு எப்படி இருக்கும்.

*

இந்த எரிக் சீகல் எல்லாம் சாக வேண்டும் என்று எவன் அழுதான்? உயிரோடு இருந்து தொலைப்பதுதானே.

*

'எக்சன்ட்ரிக்' ஆவதென முடிவு செய்திருக்கிறேன். படைப்பூக்க மேதமைக்கும் எக்சன்ட்ரிக் தன்மைக்கும் தொடர்புள்ளதாக இணையத்தில் படித்திருக்கிறேன்.

*

மாலை ஒரு நிருபர் நேர்காணல் (பேட்டி) எடுக்க வருகிறார். தயாராக உரித்து வைத்த ஆரஞ்சு சுளைகளை பாலிதீன் உறையில் தந்து நாளைக்கு வா என்றுவிடுவேன்.

*

நிருபர் ஆரஞ்சுப்பழத்தை வாங்க மறுத்துவிட்டார். பிடிக்காதாம். பேட்டி நடந்துகொண்டிருக்கிறது.

*

அரிசி, பருப்பு, சர்க்கரை விலை ஏறினாலும் ராயல்டி தொகைகள் மட்டும் அப்படியே கிடக்கின்றன.

*

புத்தக காட்சியில் ஒரு வாசகரின் குழந்தைக்கு பெயர் வைத்தது நினைவுக்கு வருகிறது. குழந்தை என்று வைத்தேன்.

*

"நிறைய எழுதுங்கள்" என்று யாரோ சொன்னதை யமுனா ராஜேந்திரன் தவறாக புரிந்துகொண்டுள்ளார். அவ்வளவையும் ஒரே கட்டுரையில் எழுதிவிடுகிறார்.

*

ஆர். சண்முகசுந்தரத்தின் 'நாகம்மாள்' நாவலின் மூன்றாம் அத்தியாயத்தில் "இவ்வாறு" என்கிற வார்த்தையை படித்துக்கொண்டிருக்கிறேன்.

*

இம்ப்ரஷனிச புத்தகத்தை பார்த்து முடித்துவிட்டேன். கண்டதும் காரித் துப்ப வைக்கும் தனித்துவ ஓவியங்கள். சமூக சரித்திர கலைத்துவ சுதந்திர....

*

இந்த வான்கோ படங்களை பார்த்தாலே 2 நாட்களுக்கு சாப்பிட பிடிப்பதில்லை. இவர் பெரிய ஓவியரா? வலைதள பத்தி தலைப்பு: உணர்ச்சிகளை மொழிபெயர்ப்பவன்.

*

ஹெச்பிஓ அலைவரிசையில் டயம் மெஷின் பார்த்தேன். 80,000 ஆண்டுகளுக்கு பின் ஆங்கிலத்தை எப்படி பேசுவார்கள் என்பதை சிறப்பாக ஆவணப்படுத்தியுள்ளனர்.

*

தமிழ் எழுத்தாளர்கள் பூஸ்ட், காட்பரீஸ், லூயி பிலிப் விளம்பரங்களில் தோன்றும் பொற்காலத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறேன்.

*

தீவிர வாசகர்கள் சிலர் இணைந்து 'விருது' என்கிற விருதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். விருது விருதை பெறும் முதல் எழுத்தாளர் நான்தான்.

*

என்னையெல்லாம் சகித்துக்கொள்ள என் மனைவி கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

*

என்னைவிட வயதில் பெரிய குடியரசு தினத்தை வணங்குகிறேன்.

*

ஆயிரத்தில் ஒருவனை சிலரும் தேவதையை சிலரும் தமிழின் முதல் மீபுனைவு படம் என்கிறார்கள். எல்லோரும் ஆடி வெள்ளியை வசதியாக மறந்துவிட்டார்கள்.

*

தஸ்தாயேவ்ஸ்கியின் அல்லக்கை என்று பெயர் வாங்க ஆசை.

*

அப்பல்லோ நர்ஸ்கள் சிறப்பான அழகு. புடவை, சுடிதாரில் அசிங்கமாக இருப்பார்களாக இருக்கும். அவர்களிடம் 'அபிமான நோயாளி' பட்டம் வாங்க முடியவில்லை.

*

அடுத்த முறை காய்ச்சல் வரும்போது வழக்கமாக அணியும் கோடு போட்ட அரைக்கை சட்டையை கடாசிவிட்டு "டி-ஷர்ட்" அணிந்து செல்வதாக இருக்கிறேன்.

*

"என்கிறார் கண்களை அகல விரித்து" என்ற வரிகளை பத்திரிகையில் படித்தேன். வெகுஜன அழகியலில் கண்களை அகல விரிப்பதற்கு உள்ள இடம் மறுக்கமுடியாதது.

*

சில பேர் என்னவோ தண்டனை போல் நாலாயிரம் வார்த்தைகளுக்கு கட்டுரை எழுதுகிறார்கள். "வளவள" என நான்கே எழுத்துகளில் முடிக்கத் தெரியவில்லை.

*

வெறும் நல்ல சிறுகதை எழுதினால் சுவாரசியம் வருவதில்லை. உறவுகள், சிறுகதை வடிவத்திற்கே

உரிய உளவியல் அவதானிப்புகள், 'ஆழம்' எல்லாம் வேண்டியுள்ளது.

*

"I think this is the beginning of a beautiful friendship" என்ற வார்த்தைகளில் அமெரிக்க வரலாற்றை அடக்கிவிடலாம். உயர்சினித்துவ Casablance....

*

23 பத்திகள் வர வேண்டிய கட்டுரை 22 பத்திகளோடு முடிந்துவிட்டது. அழித்துவிட்டு துவக்கத்திலிருந்து எழுதுகிறேன். தொழில் தர்மம்.

*

எழுத துவங்கும்போதே எனக்குள் ஒரு சந்தேகம். ஏதோ ஒன்று குறையப் போவது போலுள்ளதே என்று.

*

அமெரிக்காவில் பனி உயர்கவித்துவம் படைத்துக்கொண்டிருக்கையில் நான் இங்கு எழுத்தாணி பிடுங்க வேண்டியிருக்கிறது.

*

ஒரு எழுத்தாளுமை - அதாவது நடுத்தர வயது எழுத்தாளர் - சாத்துக்குடியுடன் வந்தார். நலமில்லை என பழத்தை வாங்கிக்கொண்டு திருப்பி அனுப்பியாயிற்று.

*

சாத்துக்குடி ஜூசை எவர்சில்வர் டம்ளரில் குடிப்பதைவிட கண்ணாடி கிளாசில் குடித்தால் சுவையாக உள்ளது. வாசகர்களின் நலன் கருதி இதை பதிவுசெய்கிறேன்.

*

5 ரூ. நாணயம் காணாமல் போனது. அதுதான் வாழ்க்கை. RoboCop IIஇல் நாணயம் தொலையும். Jane Eyreல் காசை காணோம். சரியான சில்லறை தரவும். #குறும்பத்தி

*

ஹருகி முரகாமி காத்திரமான எழுத்துக்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல. அவரது ஏராளமான உறவினர்களுக்கும்கூட சொந்தக்காரர்.

*

மாடிக்கு போகிறேன்.


*

டானி டென்சோங்பா சாயலில் ஒருவரை தெருவில் பார்த்தேன். ஆட்டோகிராப் கேட்டு

வாங்கிக்கொண்டேன். கையெழுத்துகூடவா அவருடையது போலவே இருக்கவேண்டும்?!

*

The Hurt Locker:- வெடிகுண்டுகளை செயலிழக்க செய்யும் உத்தியோகத்திலுள்ள நாயகன் பல வெடிகுண்டுகளை செயலிழக்க செய்கிறான். போரை கண்டிக்கும் படம்.



ஒரு வசதிக்காக அன்றன்றைக்கான டயரி குறிப்புகளை முந்தைய நாளே எழுதி வைத்துவிடுகிறேன்.

*

சாதி இரண்டொழிய வேறில்லை என்றார் பாரதி. பெண்கள் ஆதிக்க சாதியாக இருப்பது அவர் கண்ணுக்கு உறுத்தவில்லை போலும்.

*

ஜன்னல்வழியே கிரிக்கெட் பந்து விழுகிறது. அங்கிள் என்று கூச்சல். மகனை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் பந்தை தருகிறேன். லௌகீகம்!

*

அந்த காலத்தில் நடுத்தர வயதுக்காரர்கள் நடிகர்களாக இருந்தார்கள். இப்போது எழுத்தாளர்களாக இருக்கிறார்கள். வருமானம் மட்டும் ஏறவேயில்லை.

*

ஜாய்சுக்கும் கோணங்கிக்கும் என்ன வித்யாசம்? ஜாய்ஸ் புரியாதபடி எழுதுகிறார், கோணங்கி புரியக்கூடாதபடி எழுதுகிறார்.

*

எவ்வளவோ யத்தனித்து ஒன்றை புரியாத வகையில் எழுதினால், அதை ஒரு வாசகர் புரிந்ததாக கூறினால், அந்த எழுத்தாளனின் மனம் எவ்வளவு வேதனை அடையும்!

*

முழ நீள அளவு கொண்ட வாழைப்பழத்தை தெருவிலேயே தின்று முடித்துவிட்டு வருகிறேன். உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களித்த திருப்தி.

*

தெருமுனை கோவிலில் யாரோ இறந்துவிட்டார்கள் போலிருக்கிறது. ஒரே கூட்டம்.

*

@nilaraseegan உங்கள் வலைதளத்தில் சுயமழித்தல் என ஒரு பகுதி உள்ளது. ஆனால் அதில் செல்ஃபி ஷேவிங் பற்றி எதுவும் இல்லையே?

*

ஒரே வேலைவேலையாக இருக்கிறது. ட்விட்டரில் துண்டிலக்கியம் படைக்க நேரம் கிடைப்பதில்லை.

*

சே குவேராவின் வாழ்க்கை வரலாறை விகடனுக்காக தொடராக எழுதப்போகிறார் லார்டு லபக்குதாஸ். தலைப்பு "அடச் சே!"

*

வில்பர் சற்குணராஜின் வீடியோக்களை பார்த்தேன். நட(ன)மாடும் கவிதையாக இருக்கிறார்.

*

சாலையில் ஒரு விபத்து. 20 பேர் திபுதிபுவென ஓடி வருகிறார்கள் வேடிக்கை பார்க்க. ஒருவனாவது என்னை கண்டுகொள்ள வேண்டுமே, ஊஹூம்.

*

இந்த யு.எஸ். என்பது வலது அமெரிக்காவில் இருக்கிறதா, இடது அமெரிக்காவில் இருக்கிறதா? தெரிந்தால் பேச்சுவாக்கில் சொல்லி நாலு பேரை அசத்தலாம்.

*

Group dinner என்பதை 'குழுப் பணியாரம்' என மொழிபெயர்க்கிறார் லார்டு லபக்குதாஸ். கேட்டால் படைப்பூக்கம், கவித்துவ உரிமம் என உளறுகிறார்.

*

என் மதிப்புரைக்கு பின் க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி 3000 பிரதி விற்றதாம். இத்தனைக்கும்

அவர்கள் அச்சிட்டதே 1200 பிரதிகள்தானாம்.

*

மொழியின் பயனுள்ள அபத்தங்களை வியக்கிறேன். காபி கொடு என்பதற்கு டீ தராதே, ஜூஸ் தராதே, மோதிரம் தராதே, விசிறி தராதே என எத்தனை அர்த்தங்கள்!

*

எழுத்தாளர்களை மதிக்காத சமூகம் இப்படித்தான் அரசியல்வாதிகளிடமும் நடிகர்களிடமும் சாமியார்களிடமும் ஏமாந்து போகும்.

*

மூட்டுவலிக்கு "மூட்டுவல்லி" என்று பெண் பெயரே வைத்துவிடலாம். அவ்வளவு இம்சை.


உயர்மூட்டுவலி என்றாலே நரகம்தான். நெருங்கிய நண்பர்களுக்குக்கூட வரக்கூடாது.

*

பேட்டைப்பாக்கம் அருகே ஒரு குடிசைப்பகுதிக்கு சென்றிருந்தேன். அங்குள்ளவர்கள் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையை தத்ரூபமாக சித்தரிக்கிறார்கள்.

*

நானெல்லாம் எழுதும்போதே இலக்கியமாக எழுதிவிடுகிறேன். சிலபலர் எழுதியபின் இலக்கியம் ஆக்கிக்கொள்கிறார்கள். விருது கிடைப்பது அவர்களுக்குத்தான்.



நண்பர் அறிமுகப்படுத்திய வெங்கா பாய்ஸ் இசையை கேட்டேன். அற்புதம். லத்தீன் அமெரிக்காவில் இந்த செறிவு கிறிவு எல்லாம் இசையிலும் இருக்கும் போல.

*

Whatever Works:- ஒருவர் நிறைய பேசுகிறார். பேச்சுக்கிடையில் திருமணம், தற்கொலை, விவாகரத்து, மீள்திருமண்ம் செய்துகொள்கிறார். ஆழ்மை உள்ள படம்.

*

தற்கால சமஸ்கிருத அகராதி எங்கே கிடைக்கும்? மோதிலால் பனாரசிதாசில் இருக்குமா?

*

"எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டால் "நன்றாயிருக்கிறேன்" என்கிறார்கள். "ஏன்?" என்று கேட்டால் விழிக்கிறார்கள் அறிவிலிகள்.

*

மனித நாகரிகம் முழுமையாக பரிணாம வளர்ச்சி அடைவதற்குள் பிறந்துவிட்டோமே என்று சமயத்தில் வருத்தமாக இருக்கிறது.

*

ஐபிஎல் வருமானத்தை பார்த்தால் ஏக்கமாக இருக்கிறது. சினிமாக்களில் நடிப்பதைவிட கிரிக்கெட்களில் விளையாடுவது லாபகரமானது போலும்.

*

எனது முந்தைய ட்வீட்டை பிரிண்ட் அவுட் எடுத்து படித்துக்கொண்டிருக்கிறேன்.

*

ஒரு படைப்பு பலருக்கு புரியவில்லை என்றால் அப்படைப்பு குறித்த விளக்கத்தை படைப்பின் கடைசி பகுதியாக சேர்ப்பது புது உத்தியாக இருக்கும்.

*

என் 12 வயது மகனுக்கும்தான் புதுமைப்பித்தன் கதைகள் புரியவில்லை. அதற்காக அவரை நிறுத்த சொல்ல முடியுமா - குறிப்பாக அவர் உயிரோடு இல்லாதபோது?

*

"ஒரு பெண்ணின் மனம் இன்னொரு பெண்ணுக்குத்தான் புரியும்." - குளோரியா ஸ்டீனம்

*

முசோலினி பற்றிய எனது கட்டுரையை படித்த நண்பர் என்னை 'முசோலினி விரோதி' என தூஷிக்கிறார். அவருக்கும் முசோலினி பிடிக்காதது விநோதம்.

*

ஒரு லட்சம் பக்கங்களை எழுதுவது பெரிய விஷயமல்ல. எழுதி முடித்தபின் அவ்வளவையும் மனப்பாடம் செய்ய வேண்டுமே, அதை நினைத்தால்தான் மலைப்பூட்டுகிறது.

*


சிலேட்டும படலத்தில் எரிச்சல் ஏற்பட்டால் அபசகுனம் என்கிறார் என் குடும்ப மருத்துவர்.

*

"நானெழுதிய" என ஒரு எழுத்தாளர் எழுதுகிறார். "நானெழுதுதல்" என ஒன்று இருக்கிறதா?

*

நேற்று மாலை திடீர் பணத் தேவை. கையில் காசில்லை. ஒரு வாசகரின் அடகுக் கடையில் எனது நாவலின் பிரதிகள் இரண்டை அடகு வைத்து சமாளித்தேன்.



காலண்டரை படித்துக்கொண்டிருக்கிறேன். படைப்பூக்க அமைதி இல்லை. இருந்தாலும் அதன் நேர்மை எனக்கு பிடித்திருக்கிறது.

*

வின்மெட்டு ஏற்பட்டுள்ளது. மடிக்கணினியை மூடி வைக்கிறேன்.

*

@borehay இதற்கு உங்களிடம் ஆதாரம் இருக்கிறதா?

*

'நீங்க ரைட்டர்தானே?' என்று ஒருவர் என்னை கேட்டுவிட்டார். எனது நெடுங்கால வாசகராம்.

*

நண்பருக்கு 3வது மாரடைப்பு. சரி, மகிழ்ச்சியாக சாகட்டுமே என மகிழூந்தில் மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். மகிழூந்து என்பதால் பிழைத்துவிட்டார்.

*

எவர்சில்வர் பாத்திரத்திற்கு காய்ச்சலாம். கொதிக்கும் ரசத்தில் குரோசினைப் போடுகிறான் மகன். 13 வயதிலும் எவ்வளவு சுட்டி!

*

அதீதம் உதவுவது போல் அண்ணன் தம்பிக் கூட உதவ மாட்டான்.

*

இன்றைய தலைமுறையினர் வைரமுத்துவின் வைர வரிகளை விட நா. முத்துக்குமாரின் நா. முத்து வரிகளையே அதிகம் விரும்புகிறார்கள்.

*

இந்த ஆள் தானும் பேசுவதில்லை, பேச்சு கொடுத்தால் பதிலளிப்பதும் இல்லை. எப்பேர்ப்பட்ட

எழுத்தாளர்! @borehay

*

சிறு துரும்பும் பல் குத்த உதவியபின் கீழே விழுந்து சத்தம் எழுப்பும் நிச்சலன இரவு. #வர்ணனை

*

எனது எழுத்துகளை நகைச்சுவை எழுத்தாக பார்ப்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. பாராட்டுவதைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை.

*

ஒரு இளம்பெண் எனது நாவல் ஒன்றின்மேலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளாள். நான் கேட்கிறேன், ஏனம்மா, உனக்கு என் புத்தகம்தான் கிடைத்ததா?

*

சோகங்களையெல்லாம் விட்டுவிட எனக்கும் ஆசைதான். ஆனால் முதலில் அவற்றை பதிப்பகங்களுக்கு அனுப்ப வேண்டுமே.

*

எனக்கு கவிதை புரிவதில்லை. எழுதுவதோடு சரி.

*

@elavasam எப்போதுமே கவிதைகளை படிப்பதற்கு முன் ஒரு முறை படித்துவிட வேண்டும். அப்போதுதான் அவற்றை படிப்பதா வேண்டாமா என தீர்மானிக்க இயலும்.

*

மார்க்கெட்டில் ஒருவர் நிறைய கீரை வாங்குகிறார். என்ன சார், வீட்டுக்கா மாட்டுக்கா? ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா!

*

உடி ஆலனின் Wiki Christiana Barthelomia பார்த்தேன். மூன்று விசித்திர கதை மாந்தர்களை சுற்றி கதை இயங்குகிறது. இந்த மூன்று மாந்தர்கள்....

*

சாஷ்டாங்கமாக நிற்கிறார் என்று சொல்லக்கூடிய அளவு குண்டானவர். #வர்ணனை

*


டியூப் லைட்டானது பெயின்ட் அடித்த புடலங்காய் போலுள்ளது என்கிறான் மகன். கற்பனை நன்றாயிருக்கிறது. மகனிடமிருந்தும் எடுத்தால் தவறில்லை.

*

நேற்று பத்திக்கு மேட்டர் தேடி பராக்கு பார்த்துவிட்டு வரும் வழியில் பார்வை புலத்தில் நுழைந்த ஒரு ஓட்டல் மெனு கருத்தை கவர்ந்தது.

முள்ளங்கி பொரியல். அப்படியே நடையை உள்ளே கட்டி அளவிலி சாப்பாடு சாப்பிட்டேன். வீட்டிலும் சாப்பிட்டாக வேண்டும் என பிறகே உறைத்தது.

வீட்டிற்கு போனதும் ஜுரம் என சொல்லிவிட்டு இழுத்து போர்த்திக்கொண்டு படுத்துவிட்டேன். இரண்டு அளவிலி சாப்பாடு வயிற்றுக்கு அடுக்காது.



போதி மரம் என்பது முகட்டுவளையின் குறியீடாக இருக்குமோ?

*

தமிழில் 'காத்திர கௌமுதி' என்ற பெயரில் ஒரு இலக்கிய மசாலா இதழ் துவங்க ஆசை. எந்த நாட்டு தமிழர்கள் தலையை கொடுக்கிறார்கள் பார்ப்போம்.

உயர்கவித்துவ கவிதைகள், உயர்கட்டுரைத்துவ அலசல்கள், இரானிய சினிமா, பிரெஞ்சு இலக்கியம், இந்திய அரசியல், சென்ற இதழ் பிழைகளுக்கு வருத்தம்

என்று எனக்கு பிடித்ததை போட்டுக்கொள்ளலாம். காலப்போக்கில் ஒரு சிற்றிதழும் திறந்துவிடலாம்.

*

அந்த காலத்தில் கடைக்கு போக நாமே பை எடுத்துசெல்ல வேண்டும். இப்போது வண்ணவண்ணமாக பாலிதீன் கவர் தருகிறார்கள். இதைத்தான் முன்னேற்றம் என்கிறேன்.

*

என் அறைச் சுவரில் பிஸ்கட் நிற மினியேச்சர் முதலை ஒன்று பல்லி போல ஒட்டிக்கொண்டு ஊர்ந்து செல்கிறது.

*

பெர்ட்ராண்ட் ரஸ்ஸலின் அருமையான கட்டுரை ஒன்று இருக்கிறது. அதைப் பற்றிய கட்டுரையை விக்கிபீடியாவில் படித்துக்கொண்டிருக்கிறேன்.

*

மனைவி தாய் வீட்டிலிருந்து திரும்பி வருவதுதான் வாழ்க்கை.

*

இன்றைக்கு மழை வருமா அல்லது வர வேண்டுமா என்று தெரியவில்லையே.

*

@borehay வீட்டு அடையாளமா? சொல்கிறேனே. பரணில் டிரங்குப் பெட்டி இருக்கும்.

*

ஒரு நண்பர் நிறைய புத்தகங்களை வைத்திருக்கிறார். புத்தக அலமாரி மீது Lending Not Possible என போர்டு மாட்டியிருக்கிறார்.

அதையும் மீறி ஒரு புத்தகம் கேட்டேன். நூறு ரூபாய் கடன்கூட கேளுங்கள், புத்தகம் தரமுடியாது என்றுவிட்டார். இருநூறாக வாங்கிக்கொண்டேன்.

*

எனது எழுத்தை ரசிக்காதவர்களும் என் கருத்துகளுடன் உடன்படாதவர்களும் மனநோயாளிகளாக இருக்கிறார்கள். இது தற்செயலாகவும் இருக்கலாம்.

*

ஒரு புதிய எழுத்தாளர் தலைக்கு மேல் வைத்து கொண்டாடப்பட்டால் பேராதீத எரிச்சல் ஏற்படுகிறது. அவரது படைப்புகளை முற்றிலுமாக தவிர்க்கிறேன்.

எனது முதல் படைப்பு கொண்டாடப்பட்டபோதும் அதையேதான் செய்தேன். சில நிமிடங்களுக்கு எழுதவேயில்லை.

*

கம்பராமாயணம் புரியவில்லை. எழுத்துரு பிரச்சனையா? தட்டி, குலுக்கியும் பார்த்துவிட்டேன். எழுதியபோதே அந்த கோலத்தில்தான் இருந்திருக்கும் போல.

*

காலையில் தருமம். ஒருவர் காசு கேட்க, தந்தேன். எதிர்கடையில் எலுமிச்சை, வெற்றிலை,

குங்குமம் வாங்கி என் வாசலிலேயே புதைத்துவிட்டு போய்விட்டார்.

*

நடுத்தரவயது பேப்பர்போடுநர் சார் என அழைத்தார். "உங்களைவிட நான் எவ்விதத்தில் உயர்ந்தவன்? சார் வேண்டாமே" என்றேன் விலாவை தடவியபடி. வியர்க்குரு.

*

மீனுக்கு தூண்டில் போட்டால் பழைய பூட்ஸும் கிடைக்கிறது சினிமாவில். #கவித்துவம்

*

சிலபல கவிதை முயற்சிகள் முன்வழுக்கையை மறைத்துக்கொள்வதற்கான யத்தனிப்புகளாகவே இருக்கின்றன.

*

இங்கே காத்திரமான படைப்புகளுக்கு பஞ்சமில்லை. ஆனால் திடகாத்திரமான படைப்புகளுக்கு உண்டு. இந்த வெற்றிடத்தைதான் இட்டுநிரப்பிக்கொண்டிருக்கிறேன்.

*

மனதை பிழியும் ஒரு துன்பியல் சிறுகதையை எழுதிக்கொண்டிருக்கிறேன். எழுதும்போதே சிரிப்பை அடக்க முடியவில்லை.

*

ஒரு நாளுக்கு 50 பக்க 'அவுட்புட்' கேட்டார்கள் DLF நிறுவனத்தினர். 100க்கு ஒரு பக்கம்கூட குறைத்துக்கொள்ள முடியாது என கறாராக சொல்லிவிட்டேன்.

*

பணம் எண்ணும் இயந்திரம் வாங்கியிருக்கிறேன். சோதனை ஓட்டமாக எனது நாவல் ஒன்றை கொடுத்தேன். சரியாக 1216 பக்கங்கள் இருக்கின்றன.

*

"தெரியாமல் சொல்லிவிட்டேன்" என்று எத்தனை முறை சொல்லியும் பயனில்லை. டிராவல் ஏஜன்சி அலுவலகங்கள் திறக்கவோ 10 மணி ஆகும்.

*

இந்த "உயர்" என்கிற முன்னொட்டை எதனோடும் பொருத்தி பயன்படுத்தலாம் போலிருக்கிறது. உயர்சுவாசம் என்றால் பெருமூச்சு.

*

சிறுகதை கேட்டார்கள். குறுநாவல்தான் இருந்தது, கொடுத்தேன். எழுத்துரு அளவை குறைத்து

சிறுகதையாக போட்டிருக்கிறார்கள்.

*

நான் சாப்பிட்டுக்கொள்ள அரைக்கிலோ மிக்சர் வாங்கி வைத்துக்கொண்டால் வருபவன் போபவனுக்கெல்லாம் அதை படியளக்க வேண்டியிருக்கிறது.

*

ஒரு சிற்றிதழ் தொடங்கி நட்டத்தில் நடத்த ஆசை. அதில் நல்ல வருமானம் வருகிறதாமே.

*

எனக்கு புலி என்றாலே பயம். எனக்கே இப்படியென்றால் புலிக்கு எப்படி இருக்கும்.

*

சம்பளபாக்கி கொடுத்தால்தான் வேலைசெய்வாராம் என் மேனேஜர். அவரது தனிகுணமே கறார்தான். மேனேஜர் வேலைக்கு ஆள் சொல்லுமாறு அவரிடம் கேட்டிருக்கிறேன்.

*

நல்லவன், கெட்டவன் என்பவை தவிர வேறு அடையாளங்கள் மனிதனுக்கு தேவையா?

*

நேற்று நான் புக்பாயிண்ட் சென்றபோது அங்கொரு மேதாவி என் பத்தி தொகுப்பு ஒன்றை வாங்கிக்கொண்டிருந்தார். ஒரு முடிவோடுதான் இருக்கிறார்கள்போல!

*

எங்கோ குழந்தை அழுகிறது. மனம் கனக்கிறது.

"எங்கோ இருந்தபடி குழந்தை அழுகிற கையோடு கனக்கிறதிந்த மனம்" என எழுதினால் இன்னும் சிறப்பாக இருக்குமோ?

*

இரண்டு கையிலும் கைக்குட்டை சுற்றிக்கொண்டு, "அப்பா. பாக்சிங் வர்றியா?" என மகன் கேட்டான். வருகிறேனே என்று புரட்டியெடுத்துவிட்டேன்.

*

காலை வாக்கிங் போனபோது லார்டு லபக்குதாஸ் எதிர்ப்பட்டார். முகமன் கூற நான் வாயை திறப்பதற்குள், "Let me put it this way.... Hello!" என்றார்.

*

நேற்று ஷாப்பிங். ரங்கநாதன் தெரு கூட்டத்தை சமாளிக்க கண்டுபிடித்த ஒரு உத்தி: "ஆயிரம் நபர்களே நகருங்கள்" என்ற சினிமா பாட்டை பாடிக்கொள்ளுதல்.

*

நேற்று ஒரு இளங்கவிஞர் வருகை. 100க்கு மேற்பட்ட பெயர்களில் கவிதை எழுதுகிறாராம். பெரும்பாலான தமிழ் கவிதைகளின் போன்மை சார்ந்த மர்மம் தெளிந்தது.

வந்தவர் கிளம்பவேயில்லை. "நீங்கள் இன்னும் பல இடங்களுக்கு போவீர்கள்" என சூசகமாக பாராட்டியும் பயனில்லை.

"இப்போதே கிளம்பினால் சரியாக இருக்கும்" என்றேன் நைச்சியமாக.

*

இன்டர்வியூவை சிறிது மாற்றி இந்திரவியூகம் என எழுதுகிறார் கோணங்கி. இது எனக்குத் தோன்றாமல் போய்விட்டதே.

*

ஏவிஎம் ஸ்டுடியோவில் தமன்னா மேடத்தை பார்த்தேன். "ஹலோ மேடம்" என்றேன். ஆளை மறந்துவிட்டார் போலும். "என்ன?" என்றார் அதட்டலாக. என்ன ஒரு 'என்ன'!

*

சூர்யா சாருக்கும் ஜோதிகா மேடத்திற்கும் ஆண்குழந்தை சார் பிறந்திருப்பது குறித்து மகிழ்ச்சி.

*

என் மகனின் ரோல் மாடல் Humpty Dumpty. இதை எங்கே போய்ச் சொல்வது? (முழு முகவரி தேவை)

*

எனக்குக் கிடைக்காததால் / நீ வீணாகிவிட்டாய். #கவிதை

*

தமிழ்ச்சூழலின் சார்பாக மழையை வரவேற்கிறேன்.

*

'நல்லவனாக இருந்து பார்' படித்துக்கொண்டிருக்கிறேன். பொதுவாக சுயமுன்னேற்ற நூல்கள் என்னை கவர்வதில்லை. ஆனால் இதிலுள்ள புது கருத்துகள் சிறப்பு.

*

Ben Hur பார்த்துக்கொண்டிருக்கிறேன். முன்பே வெவ்வேறு காட்சிகளை வெவ்வேறு காரணங்களுக்காக தனித்தனியாக பார்த்திருக்கிறேன்.

*

வடிவமைப்பு அளவிலாவது இலக்கிய புத்தகங்களையும் சிற்றிதழ்களையும் பாக்யா போல வேறெதுவும் பாதிக்கவில்லை.

*

ஒன்றுமேயில்லாத வாக்கியத்தில்கூட ஒரு 'நான்'-ஐ சேர்த்துக்கொண்டால் சுவாரசியமாகிவிடுகிறது.

*

மனைவியின் பிறந்தநாளை மறந்து தொலைத்ததால் சண்டை. "மறப்பது நானாகவே இருந்தாலும் நினைவூட்டுவது நீயாக இரேன்" என ரொமாண்டிக்காக பேசியும் பயனில்லை.

அதற்குள் பக்கத்து, எதிர் வீட்டு ஜன்னல்களில் தலைகள். "இன்று மனிதன்...." என்று பேச துவங்கிய பின்புதான் விலகிச் சென்றார்கள்.

*

ஏதோ கையெழுத்து பத்திரிகையிலிருந்து "அப்துல் கலாம் பிள்ளைத் தமிழ்" என்ற புத்தகம் மதிப்புரைக்கு வந்திருக்கிறது.

*

ஒரு சிற்றிதழுக்காக எண்ணெய் கசிவு பற்றி கட்டுரை மொழிபெயர்க்கிறார் லார்டு லபக்குதாஸ். Giant leak-ஐ ஹிரண்ய கசிவு என எழுதலாமா என கேட்கிறார்.

கிரியேட்டிவாக மொழியாக்கம் செய்யாதீர்கள் என்றால் கேட்டால்தானே.

*

"நீயே எழுதிக்கொண்டிருந்தால் எப்படி? நாங்களெல்லாம் எழுதவேண்டாமா?" இப்படியொரு மொட்டைகடிதம் வந்தது. மறந்து கையெழுத்துவேறு போட்டிருக்கிறேன்.

*

ரூசோ சுயசரிதை நல்ல நூல். தினமும் இரு வார்த்தைகளாக பின்னட்டையை முழுவதும் படித்துவிட்டேன். இப்போது அத்தகவல்களை எதிலாவது நுழைக்க வேண்டும்.

*

ஒருவர் கமல்சார்தான் என் பெயரில் எழுதுவதாக ஊகித்து எழுதுகிறார். இது என்னை நானே சார் என அழைத்துக்கொள்ள வைக்கும் சதியாகத்தான் தோன்றுகிறது.

அப்படி அழைத்துக்கொண்டால் நான் ஒன்றும் குறைந்துபோய்விட மாட்டேன் என்பது வேறு விஷயம்.

*

இரண்டு வாசகர்கள் என் பெயரை 'பேயான்' என எழுதியிருக்கிறார்கள். காட்டான், மாக்கான்

என்பது போல. பெயர்கூட தெரியாமலா படிக்கிறார்கள்?

'பொன்னியின் செல்வன்' எழுதியது யாரென்று கேட்டால் 'கல்கிவாலா' என்பார்களோ?

*

எழுத முடியாத எண்ணங்களை தவிர்த்துவிடுகிறேன்.

*

இதை யாராவது கவனித்தார்களா என்று தெரியவில்லை:- "தமிழில்" என்று சொல்வதைவிட அழகு தமிழில் "அழகு தமிழில்" என்று சொன்னால் அழகாக இருக்கிறது.

*

பத்திக்காக டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு படிக்க துவங்கியிருக்கிறேன். சரியான இழுவை. எழுதுவதற்கு இந்த ஆளுக்கு வேறு புத்தகமே கிடைக்கவில்லையா?

*


கலிலியோ கலிலெய், மஜித் மஜிதி, ராஜராஜன் - பலே!

*

ரஜினிசார் படங்களை பற்றி பிஎச்டி செய்யும் இளைஞர் ஒருவர் பார்க்க வந்தார். ரஜினிசார் படங்களில் உள்ள ரஜினிசார்சார் குறியீடுகளை புரியவைத்தேன்.

*

ஹேர் டை தீர்ந்துபோனதால் அவசரத்திற்கு மகனின் ஷூ பாலிஷை போட்டுக்கொண்டதில் தலை வெல்வெட் போல் பளபளப்பாகிவிட்டது.



ஆங்கில சிறுகதையையும் அதற்கு லபக்குதாசின் மொழியாக்கத்தையும் ஒப்பிட்டு பார்க்கிறேன். ஒன்று மூலம், இன்னொன்று பவுத்திரம்.

*

போலான்ஸ்கியை விடுதலித்துவிட்டார்கள். இரும்புப் பெட்டிக்குள் பூட்டிவைத்த எனது போலான்ஸ்கி டிவிடிகளை இனி வெளியில் எடுத்து வைக்கலாம்.

*

யார் எவ்வளவு புகழ்ந்தாலும் "சரி, அதற்கு என்ன இப்போது?" என்று கேட்கிற மனப்பக்குவம் இல்லாததன் சுவாரசியமே தனி!

*

@sureshkannan70 படைப்பூக்கம் ஒளிந்துதான் இருக்கும். பேச வாயை திறந்தாலே "அவனால் அதை மறக்க முடியவில்லை" என்றா துவங்குகிறோம்? எழுத வேண்டும்.

*

பொதுவாக எழுத்தாளர்களை 'இவர்களெல்லாம் யார்?' என்றும் 'இவர்களெல்லாம் எதற்கு?' என்றும் இருவகையாக பிரிக்கலாம். நான் முதல் வகை.

*

என் படைப்புகளை உள்ளூரில் சில லட்சம் பேர் படித்தாலும் உலகளவில் குன்றின்மேலிட்ட குந்துமணியாகத்தான் காலந்தள்ள வேண்டியுள்ளது.

*

ரூபாயை இனிமேல் ருப்யா என்றுதான் எழுத வேண்டுமாமே?

*

லபக்குதாசை சந்தித்தேன். உற்சாகமாக இருந்தார். பிறந்தநாளாம். விடாமல் தன்னை பற்றியே பேசினார். வாழ்த்த வயதில்லை, கிளம்புகிறேன் என வந்துவிட்டேன்.

*

Diarrhoea = கொல்லை நோய் #லபக்குதாஸ்

*

நான் நானாக இல்லாத பொழுதுகளில் என்னுடன் இருக்க ஆசை. இந்த வாரமாவது முடிகிறதா பார்ப்போம்.

*

அடுத்த பட வில்லனுக்காக எழுதிய வசனம்:- சவுக்கால அடிச்சா சவுகரியப்படுமா?

*

வாஷிங் மிஷ்கின் பிரச்சனை. மதியம் அதை ரிப்பேர் செய்ய பணம் கட்டிவிட்டு ஒரு இயக்குனரை

சந்திக்கச் செல்ல வேண்டும். அவர் பெயரைச் சொல்வதற்கில்லை.

*

@borehay சார், நீங்கள் கூறுவதுதான் இலக்கியம் என்றால் நான் அகராதியை இன்னும் கவனமாக படிக்க வேண்டும்.

*

கனவில் மனைவி அழைத்தார். அதற்குள் நனவில் மனைவி அழைத்து கனவு கலைந்தது. கனவில் ஏனென்று கேட்காததற்கு அடுத்த கனவில் வசை உறுதி.

*

நானும் தெரியாமல்தான் கேட்கிறேன், கால் கிலோ சீரகம் என்ன விலை?

*

டெக்ஸாசிலிருந்து எனது நாவல்களை வாங்க என் பதிப்பாளர்களுக்கு ஆர்டர் குவிந்துள்ளதன் பின்னணி.... http://bit.ly/9aNcKF

*

ஜன்னலெதிர் பஸ் ஸ்டாப்பில் தினமும் காலை ஒரு தம்பதி பஸ்ஸுக்காக காத்திருப்பார்கள். இன்று கணவர்தான் வந்திருக்கிறார். மனைவி இறந்துவிட்டார் போல.

*

நேற்று மாலை திரையரங்கு போனவனுக்கு டிக்கெட் கிடைக்கவில்லை. ஏமாற்றமாவது மிஞ்சியதே என்ற ஆறுதல்தான் மிச்சம்.

*

நேற்று என் வீட்டில் நான் ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பிற்கு யாரும் வரவில்லை. கூரியர்காரர்தான் வந்தார். அவரும் உடனே கிளம்பிவிட்டார்.

*

Leafy vegetables = இலைப்பாங்கான காய்கறிக்கள் #லபக்குதாஸ் #மொழியாக்கம்

*

திடீர் சத்தம். நெருங்கிய உறவினர் பாடுகிறாரா அல்லது யாராவது கதவை தட்டுகிறார்களா என்று தெரியவில்லை.

*

அட! த்ரிஷாவும் நானும் ஒரே வாக்கியத்தில்! மேடம் உங்களுக்கொன்றும் பிரச்சனை இல்லையே? @trishtrashers

*

இது நேற்றாக இருந்திருக்கக் கூடாதா? ஆயுளில் ஒரு நாள் கூடுதலாக கிடைத்திருக்கும்.

*

சினிமாவிற்கே 'சார்' போடலாமா? நான் மிகவும் மதிக்கும் துறை அது.

*

"அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை" என எழுதுபவர்களுக்கு:- உங்கள் உள்ளுணர்வுப்படி முடிவெடுங்களேன்.

*

சில சமயங்களில் எதையாவது இலக்கில்லாமல் விவரிக்க தொடங்கினால் அது சிறுகதையாக வளர்ந்துவிடுகிறது.

*

சிலர் எழுதுவதை பார்த்தால் ஒரு பெரிய ஈட்டியை எடுத்து குத்திக்கொள்ளலாம் போலிருக்கிறது. அவ்வளவு மோசமாக எழுதுகிறார்கள்.

இன்னும் சிலர் எழுதுவதை பார்த்தால் பொறாமையாக இருக்கிறது. அவ்வளவு சுமாராக எழுதுகிறார்கள்.

*

இன்றைக்கும் மழை பெய்தாலும் நனைவதாக இல்லை.

*

இன்றைய காலை வணக்கம் யசுஜிரோ ஒஜுவின் காலை வணக்கமாக இருக்கட்டும்.
http://www.imdb.com/title/tt0053134/

*

தனலட்சுமியிடமிருந்து பணம் வர வேண்டியுள்ளது.

*

இந்த கான்ஸ்டன்ஸ் கார்னெட் என்ன மாதிரி?

*

கேள்வி எழுப்பும் வரை பதில் தூங்கத்தான் செய்யும்.

*

சப்டைட்டிலும் அதற்கு அடிக்குறிப்பும் போடுமளவு ஆழமான படம் எடுங்களேன் என்றால் என்

சட்டையையும் பேன்டையும் மாற்றிமாற்றி பார்க்கிறார் இயக்குநர்.

*

கடைசியாக எழுதிய சினிமா பாடல் வரி:- அட உதடுகள் ஒட்டாமல் உறவுகள் பிரியாது, சகியவளே!

*

செவன்த் சீல் முழு திரைக்கதையை தரவிறக்கம் செய்திருக்கிறேன். விமர்சனமாக சுருக்கிவிடலாமா?

*

நல்ல இசை கேட்க பொறுமையே இல்லை. நோட்ஸ் படிக்க தெரிந்தால் பட்டாணியை ஒவ்வொன்றாக வாயில் போட்டுக்கொண்டே நாளுக்கு 100 பாட்டு படித்துவிடலாம்.

*

என் படைப்புகள் கையெழுத்து பயிற்சிக்கு எழுதியவை போலுள்ளதாக சிலர் கூறுவது மிகை. முதல் பத்து பதினைந்து நாவல்களை வேண்டுமானால் அப்படி கூறலாம்.

*

சில ரசனைகள் எனக்கு இருப்பதாக காட்டிக்கொள்வது வியூக ரீதியாக முக்கியமாகிறது.

*

"விடியும் வரை பெண் அழகு!" - வைரமுத்துவின் சொந்த வரி. "ஏழு மணிக்கு மேல நானும் இன்ப லச்சுமி" - இது யாருடைய எந்த வரி?

*

அப்பாஸ் கியரோஸ்தாமி சாயலில் ஒரு நண்பர் உண்டு. ஒரு உதவி கேட்டு வந்தார். மறுத்துவிட்டேன். அப்படியே அப்பாஸ் கியரோஸ்தாமி மாதிரியே இருப்பார்.

*

Transformers 2:- இயந்திரங்களுக்கும் மனிதர்களுக்குமான நாள்பட்ட உறவு சிக்கலை சித்தரித்து மனித துணிகரத்தில் நம்பிக்கைகொள்ளக் கோருகிறது.

*

மாடி வீடு ஓயாது உமிழும் டி.வி. சத்தத்தை தாங்க முடியவில்லை. இந்த இம்சைக்கு பதிலாக மாதம் ஒரு திரைப்பட வாய்ப்பு வந்தால் நன்றாக இருக்கும்.

*

துணிச்சலான எழுத்தாளன் சமரசங்களுக்கு அஞ்சக் கூடாது.

*

பராசக்தி பட வசனங்களை ரிங்டோன்களாக போட்டுக்கொண்டுள்ளேன். என்ன சில வசனங்கள்!

*

ஜன்னலெதிர் பேருந்து நிறுத்தத்தில் பேருந்திற்காக காத்திருக்கும் சுமார் 20 பேரை பார்த்தால் இக்கேள்விதான் மனதில் எழுகிறது:- இவர்களெல்லாம் யார்?

*

@Alex_Pandian தவறுகளில் நல்ல தவறு, கெட்ட தவறு என இரண்டு வகைகள் உள்ளன. எது தவறு, எது தவறு என நாம்தான் பகுத்தறிந்து புரிந்துகொள்ள வேண்டும்.

*

புனைவு (பரிசோதனைக் குறும்படம்) - http://wp.me/pQtmf-o0

*

மலையாள அப்பாவுக்கும் ரஷ்ய அம்மாவுக்கும் பிறந்த ஒருவன் மாஸ்டரை மோஸ்தர் என அழைப்பானா?

*

இந்த மழை மந்தம் வெள்ளிக்கிழமையை சனிக்கிழமையாக மாற்றியிருப்பது நாள்காட்டிக்குத் தெரியவில்லை. #உயர்கவித்துவம்

*

சென்ற ட்வீட்டில் "உயர்கவித்துவ அணி" என இருக்க வேண்டும்.

*

இலக்கியத்திற்கு காத்திரமான படைப்புகளும் தீவிர இலக்கியத்திற்கு திடகாத்திரமான படைப்புகளும் தேவைப்படுகின்றன.

*

பிரெஞ்சை சேர்ந்தவர்:- http://kobako.tumblr.com/post/1096414838/outoftimegirl-shykid-via-juliac393

*

குளோத் ஷாப்ரோலுக்கு அஞ்சலிகள். http://www.imdb.com/name/nm0001031. இவர் மட்டும் இல்லாவிட்டால் இன்று உதவி இயக்குநர்கள் கவிதை எழுத முடியாது.

*

தொலைக்காட்சி திரையில் ழாக் தாத்தியின் "மோன் ஓங்கிள்' ஓடிக்கொண்டுள்ளது. பிரெஞ்சின்

தெருக்களில் அலைகிறது என் மனம்.

*

என் சமூகக் கடமைக்கு 14வது பிறந்தநாள். சாக்லேட் வாங்க போயிருக்கிறான்.

*

கைதவறி ஒரு பத்தாயிரம் ரூபாய்க்கு புத்தகம் வாங்கிவிட முடிகிறதா?

*

"ஜூ-ன்னா ஹீப்ரூஸ்டா. லை-ன்னா பொய்யி. அதாண்டா மந்த் ஆஃப் ஜூலை." ஒரு சிறுவனுக்கு விளக்குகிறான் மகன். அவன் வயதில் அவன் விஷயஞானம் எனக்கில்லை.

*

ராமர் பிறந்த இடம் என தீர்ப்பளித்த கையோடு பாபருக்கும் கடும் தண்டனை அளித்திருக்கலாம். பாபரை தண்டனையிலிருந்து காப்பாற்றியது முஸ்லிம் நீதிபதியா?

*

குஜராத்தில் இந்து சகோதரர்கள் 3000 முஸ்லிம்களை கொன்றதற்கு நஷ்டஈடாக நீதிபதிகள் அந்த நிலத்தை வக்ஃப் வாரியத்திற்கு அளித்திருக்கலாம்.

*

போன் செய்தால் எடுக்க மறுக்கிறார் லபக்குதாஸ். அவனவனுக்கு வேலை இருப்பது தெளிவு.

*

ட்விட்டர் = பின்தொடரும் நிரலின் குறள் #லபக்குதாஸ் #மொழியாக்கம்

*

சாலிங்கரை படிக்க சொல்கிறார் லபக்குதாஸ். இவர் பரிந்துரைக்கிறார் என்பதற்காக படிக்காதிருக்க எனக்கென்ன தலையெழுத்தா? படிக்க வேண்டியதுதான்.

*

@borehay லத்தீன் அமெரிக்காவில் யார் யாரெல்லாம் இருப்பார்கள்?

*

இருபது ஆண்டுகளுக்குப் பின் யாரோ எழுதப்போகும் எனது வாழ்க்கை வரலாறுக்குள் இருந்தபடி வாழ்வது சிரமமாக இருக்கிறது.

*

கணினியை தவறுதலாக அணைத்துவிட்ட பின் Ctrl Z அழுத்தினால் அது ஆன் ஆக வேண்டும்

அல்லவா? ஆகவில்லை.

*

ஒரு எழுத்தாளனை முழுதும் நிராகரித்து என் நோக்கத்தை அம்பலப்படுத்திக்கொள்வதைவிட ஒப்புக்காக அவனது ஓரிரு படைப்புகளை பாராட்டுவதையே விரும்புவேன்.

*

பொருளை பெண்ணாக பார்ப்பதை விட பெண்ணை பொருளாக பார்ப்பது ஒன்றும் அபத்தமல்ல என்பதை பெண்ணியவாதிகளே ஒப்புக்கொள்வார்கள்.

*

மண்டபத்தில் எழுதிக் கொடுக்க ஆள் இல்லையென்றால் நாமே மண்டபத்தில் போய் உட்கார்ந்து எழுத வேண்டியதுதான்.

*

@borehay ஓன் ஹவுசா ரெண்ட்டடா சார்?

*

எந்திரன் பார்த்தேன். பல தனித்துவங்களின் கூட்டு அற்புதம்! படம் முடிந்ததுமே படத்திற்கான விமரிசனம் ஆங்கிலத்தில் திரையில் ஓட துவங்கிவிடுகிறது.

*

குக்கர் விசிலை எண்ணுவதற்கு எழுத்தாளன் எதற்கு?

*

எழுத்தாளனாய் லட்சணமாய் தீவிரமாக சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.

*

உண்மையைச் சொன்னால், 25-42 வயதுக்குட்பட்டவர்கள்தான் என்னுடைய மார்க்கெட்.

இவ்வயதுகளுக்கு கீழ்ப்பட்டவர்கள் விவரங்கெட்டவர்களாக இருக்கிறார்கள். மேற்பட்டவர்கள் விவரமானவர்களாக இருக்கிறார்கள்.

*

மாற்று அட்டை:- http://darkcircle.tumblr.com/post/1328467439/tentative-cover-of-my-book

*

இரண்டே பேர் கொண்ட ஒரு வரிசை, சாலையினூடே விரைகிறது பைக்கில் அமர்ந்து.

*

நமக்கும் வாழ்க்கைக்குமான நாள்பட்ட பேச்சுவார்த்தைதான் வாழ்க்கை.

*

சில ரசிக வாசக பிரகிருதிகள் என் படைப்புகளை ரசிப்பதை பார்த்தால் பொறாமையாக இருக்கிறது.


எப்படித்தான் இவர்களுக்கு மட்டும் படிக்க நல்ல நல்ல படைப்புகளாக கிடைக்கிறதோ!

*

மதியம் வாரிசு சிகரெட் நெடியோடு வந்தான். "இந்த 14 வயதில் எங்கேடா போய்விட்டு வருகிறாய்" என விசாரித்தால் "சிகரெட் பிடிச்சேம்பா"

என்கிறான். சிகரெட் பிடித்தமைக்காக தண்டிப்பதா உண்மையை சொன்ன முட்டாள்தனத்திற்காக தண்டிப்பதா என குழம்பி செயலற்றேன்.

கடிதங்கள்



பிற்கால நூலாக்கத்திற்காக, திட்டமிட்ட இலக்கியத் தரத்துடன் நான் எழுதிய கடிதங்களில் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.

*

அன்பின் ஜெயக்குமார்,

பாராட்டுதல்களுக்கு நன்றி. நீங்கள் நலமாக இருப்பீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

தாஸ்தாயெவ்ஸ்கியின் 'மரண வீட்டின் குறிப்புகள்' தற்போது கைவசமில்லை. எங்கோ அலமாரியில் ஏதோ மூட்டைக்குள் கிடக்கிறது. தேடி எடுக்க நேரமில்லை. அதை இரவல் பெற்றுக்கொண்ட ஒரு நண்பர் தில்லிக்கு மாற்றலாகிக் கையோடு எடுத்துச் சென்றுவிட்டார். பஸ்ஸில் தவற விட்டுவிட்டேன். இந்த விதி நீங்கள் கேட்ட பிற நான்கு நூல்களாலும் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

உங்கள் நிதிப் பிரச்சினை எனக்குக் கலக்கமளிக்கிறது. நீங்கள் தொடர்ந்து என்னிடம் ஓயாமல் பணம் கேட்டுக்கொண்டேயிருக்கும் நிலைமை மாறும், நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். கடிதப் போக்குவரத்துச் செலவாக இவ்வார இறுதியில் ஐம்பது ரூபாய்/- ஒரு வாசக நண்பரின் மூலம் கொடுத்தனுப்புகிறேன். தயங்காமல் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப்பவும் மணி 11.20 ஆகிறது. சென்ற வாரம் இதே நேரத்தில் உங்கள் முந்தைய கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது அதில் நீங்கள் கேட்டிருந்த ஆழமான கேள்விகளைப் பலர் கேட்கக் கேட்டிருக்கிறேன். இம்மாதிரியான கேள்விகள்தாம் நமக்கென ஒரு தனித்துவ அடையாளத்தைத் தருபவை. கேள்விகள் கேட்பதை மட்டும் நாம் நிறுத்திவிடக் கூடாது. உதாரணமாக, சமகால வாழ்வியலில் மனிதன் கால்களை எதற்காகப் பயன்படுத்துகிறான்? நிற்க. அடுத்த இருவாரங்களுக்கு நான் ஊராந்திரம் போவதால் கடிதம் பெற நிலையான முகவரி இருக்காது. குழந்தை இலக்கியனுக்கு அன்பு முத்தங்கள்.

வாழ்த்துக்களுடன்
பேயோன்

* * *

அன்பின் சுலைமான் அபெக்கே,

உங்கள் அளவிற்கு ஆங்கிலப் புலமை எனக்கில்லாமையால் தமிழிலேயே எழுதுகிறேன். நீங்கள் ராஜ குடும்பத்தவர் என்பதால் இதை யாரிடமாவது மொழியாக்கம் செய்து வாசித்துக்கொள்வதில் சிரமம் இருக்காது என நம்புகிறேன்.

உங்கள் உறவினர் மரணப் படுக்கையில் இருப்பது குறித்த உருக்கமான கடிதம் கண்டேன். மகிழ்ச்சி. தமிழ் எழுத்தாளர்கள் இத்தனைப் பேர் இருக்கையில் நீங்கள் என்னிடம் உதவி கேட்டிருப்பது நெகிழவைக்கிறது. நைஜீரியாவில் உள்ள எனது நண்பர் கிரி சொல்லித்தான் உங்களுக்கு என்னைப் பற்றித் தெரிந்திருக்கலாமா? கொஞ்சம் போல் வறுமையில் திண்டாடும் ஒரு முன்னணி தமிழ் எழுத்தாளன் என்ற அறிமுகமே எனக்குப் போதும்.

சகமனிதனுக்கு உதவாத ஒரு எழுத்தாளன் என்ன எழுதியும் பயனில்லாத காரணத்தால் நான் உங்களுக்கு உதவ விரும்புகிறேன். உங்கள் பணம் ரூபாய் 20 மில்லியன் டாலர் வங்கியில் முடங்கியிருப்பது உங்கள் மனதை எந்தளவிற்குப் பாதித்திருக்கும் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு டால்ஸ்டாய் நாவல் படித்துக்கொண்டிருக்கையில் பக்க அடையாளமாக வைத்த 100 ரூபாய் நோட்டு காணாமல் போனதால் 10 நிமிடம் தூக்கத்தை இழந்த அனுபவம் உண்டெனக்கு.

இந்தத் தொகை எனது வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டபின் நான் அதை ஏமாற்றி எடுத்துக்கொள்ள வேண்டாம் என நீங்கள் கெஞ்சியிருப்பது எனக்குக் கோபத்தை ஏற்படுத்தவில்லை. அவ்வளவு பெரிய தொகையாக இருக்கும்போது நீங்கள் கொஞ்சினால்தான் ஆச்சரியம். நான் ஒரு நடுத்தரவர்க்கத்தினன். 20 மில்லியன் என்ன, 19 மில்லியனைக்கூட வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று எனக்குத் தெரியாது. உண்மையான எழுத்தாளர்களால் பெரிய பண மோசடிகளைச் சாதித்துவிட முடியாது.

நீங்கள் கூறும் திரு. ஜோசப் மாரா தார்மீக ரீதியில் தனித்துவ மனிதராகத் தென்படுகிறார். இந்த நைஜீரிய பாதுகாப்புத் துணைச் செயலரே என்னைத் தொடர்பு கொள்வார் எனில் பணப் பரிமாற்றத்தில் சிக்கல் ஏற்பட வாய்ப்பில்லை. 25 சதவீதத்தை எனக்குத் தருவதாகக் கூறியுள்ளீர்கள். நான் பார்த்த வரை 30 சதவீதம்தான் நைஜீரிய சந்தை நிலவரம். இருந்தாலும் உங்களுக்குள்ள சூழ்நிலை காரணமாக நான் பேரம் பேச விரும்பவில்லை. அந்த நேரத்தில் நான் இன்னொரு கடிதம் எழுதிவிடுவேன். எனவே உங்கள் வாழ்வாதாரத்திற்குரிய பணத்தினை உங்களிடம் சேர்க்க வேண்டியது என்னுடைய மற்றும் திரு. ஜோசப் மாராவினுடைய பொறுப்பாகும்.

உலகம் சுருங்கச் சுருங்க மனிதர்களிடையிலான இடைவெளி அதிகரித்துக்கொண்டிருந்தால் கடைசியில் மனிதர்கள் உலகிற்கு வெளியே சென்றுவிடும் நிலைமை ஏற்பட்டுவிடும். உலகின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான பிரிட்டிஷ் ராயல் வங்கியால் நேரடியாக உங்களுக்கு உங்கள் நாட்டிலுள்ள வங்கிக் கணக்கிற்குப் பணம் அனுப்ப முடியாதது இந்தப் பரஸ்பர மனித அவநம்பிக்கையைத்தான் காட்டுகிறது.

இன்றைக்குச் சற்று வேலையாக இருக்கிறேன். திங்கட்கிழமை (15.03.2010) காலையன்று நீங்கள் கொடுத்த ஐசிஐசிஐ வங்கிக் கணக்கில் 20,000 ரூபாய்/- செலுத்திவிடுகிறேன். உங்கள் கைக்குப் பணம் வந்த அடுத்த நொடியே எனக்குச் சேர வேண்டிய பணத்தை அனுப்பிவிட்டால் போதும். இனியும் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. எச்சில் கையால் காக்காய் விரட்டும் ஒரு செயலாக இது எனக்கு இருந்துகொள்ளட்டும்.

உதவுதல் நாடி,

* * *

அன்பின் ரூபேஷ்,

பாராட்டுதல்களுக்கு நன்றி. 2004-ல் ஷாங்காயின் புகழ்பெற்ற ஷாங்காய் மக்லெவ் ரயில் ஓடத் தொடங்கியது. மக்லெவ் (Maglev) என்பது Magnetic Levitation என்பதன் சுருக்கமாகும். இந்த வகை ரயிலில் சக்கரங்கள் இருக்காது. காரணம், அவை மின் மற்றும் காந்த சக்திகளால் இயங்குகின்றன. உலகின் முதல் வணிக மக்லெவ் ரயில் 1984-ல் இங்கிலாந்திலுள்ள பர்மிங்ஹாமில் அறிமுகப்படுத்தப்பட்டது. மணிக்கு 42 கி.மீ. வேகத்தில் ஓடிய இந்த ரயில் 1995-ல் நம்பகத்தன்மை மற்றும் வடிவமைப்புப் பிரச்சனைகளால் நிறுத்தப்பட்டது. 2003-ல் ஜப்பானின் மக்லெவ் ரயில் மணிக்கு 361 கி.மீ. வேகத்தில் ஓடி உலக சாதனை படைத்தது. இருந்தாலும் அதற்குப் பின்பு வந்த ஷாங்காய் மக்லெவ் ரயில் மணிக்கு 431 கி.மீ. வேகத்தில் ஓடி அந்தச் சாதனையை முறியடித்தது. உலகிலேயே மிக வேகமான இந்த ரயில்கூட மின்சக்தி இன்றி ஓடாது. அது போலத்தான் என்னைப் போன்ற எழுத்தாளர்களும் உங்களைப் போன்ற வாசகர்களின் நேர்மறைக் கருத்துக்களைச் சார்ந்திருக்கிறோம்.

பொதுவாகப் பாராட்டுகள் குவிந்தாலும் அவ்வப்போது சில விமரிசன முட்கள் லேசாகவாவது குத்தத் தவறுவதில்லை. அத்தகைய சூழ்நிலைகளில் "தல, எப்புடி தல!!!!", "முடியல" போன்ற உங்களுடைய வார்த்தைகளே மனதிற்கு இதம் தந்து படைப்பூக்கம் தொடர்ந்தியங்க உதவுகின்றன. நீங்கள் கேட்டதற்கிணங்க எனது 'ஆட்டோகிராப்'பை இணைத்திருக்கிறேன். அதை இக்கடிதத்தின் இறுதியில் "வாழ்த்துக்களுடன்" என்கிற வார்த்தைக்குக் கீழ் பார்க்கலாம். வெள்ளி விசில் மட்டும் சாத்தியமில்லை.

தினமும் சுமார் 20 பக்கங்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதும் உங்களைப் போல் பலரும் எனக்கு தினமும் சுமார் 20 பக்கங்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுகிறார்கள். அத்தனையையும் படிப்பது சாத்தியமல்ல. அதனால்தான் உங்கள் தோழியுடனான பிரச்சனை என் கவனத்திற்கு வரவில்லை. கடிதங்களையே அன்றாடப் போக்கில் 200 பக்கங்களுக்கு மேல் படிக்க வேண்டியிருந்தால் படைப்புச் செயல்பாடுகளுக்கு நேரம் இருக்காது. நான் எழுதுவது குறைந்தால் அது உங்களையும்தானே பாதிக்கும். அதனால் எனக்குக் கடிதம் எழுதும்போது அதில் என்னைப் பற்றி எங்கெல்லாம் வார்த்தைகள் வருகிறதோ அந்த இடங்களை மஞ்சள் மார்க்கரால் ஹைலைட் செய்துவிட்டால் படித்து நேரத்தை மிச்சப்படுத்திக்கொள்ள வாகாக இருக்கும்.

தயவுசெய்து என் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிக்காதீர்கள். படித்தாலும் மறுவாசிப்புச் செய்ய புதிதாக வாங்கிப் படியுங்கள். இதை எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்யும் பண உதவியாகக் கருதிக்கொள்ளுங்கள்.

வாழ்த்துக்களுடன்
பேயோன்

ஒடிசியில் ஒரு ஈச்சமரம்

பிரபலமாக இருப்பதில் பல சங்கடங்கள் உண்டு. அன்றாட வாழ்க்கையை அன்றாடமும் வாழ முடியாது. கடித வடிவ காகிதக் குப்பை சேரும். ஒரு பொது இடத்திற்குப் போனால் நம் மீது கூட்டம் சேரும். மின்னஞ்சலிலோ, நைஜீரிய பேரங்களை விட பேஸ்புக் நட்பு அழைப்புகள் குவியும். பொது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் மாறுவேடம் கோரும்.

நானும் பிரபலமாகத் தொடங்கிய புதிதில் அடையாளம் தெரியாதிருக்க மத்தியப் பிரதேச பழங்குடியினர் முகமூடி அணிந்திருக்கிறேன், சென்னையின் தெருவீதிச் சாலைகளில் பிளாஸ்டிக் ஈச்சமரத்தை முதுகில் கட்டிக்கொண்டு அலைந்திருக்கிறேன். அப்படியும் கண்டுபிடித்துவிடுகிறார்கள், என்னவோ குறிப்பிட்ட நேரத்தில் ஒடிசி புத்தகக் கடையில் ஒரு ஈச்சமரம் நிற்கும் என யாரோ தகவல் சொல்லிவிட்டது போல.

நியூ புக்லாண்ட்ஸில் ஒரு ஹெமிங்வே நாவலுக்கு முன் நின்று புலிநக செயினைக் கண்ணில் ஒற்றிக்கொண்டிருக்கையில் ஒரு வாசகரிடம் பிடிபட்டபோதுதான் இது வேலைக்கு ஆகாது என முடிவுசெய்தேன். தமிழ்ச் சூழல் புலிநக செயினுக்கே ஏமாறத் தவறினால் வேறு எதற்கு ஏமாறும்? கதாபாத்திரங்களுக்குப் பெயர் வைப்பதில் செலவிடும் படைப்பூக்க ஆற்றலில் சிறிதளவையாவது உருப்படியானதும் எளிதானதுமான மாறுவேட உத்திகளுக்குப் பயன்படுத்த வேண்டாமா?

உரக்கச் சிரிக்கும் பழக்கத்தையும் திடீர் திடீரெனக் கோபம் வந்து எதிரில் யாருமில்லாத சமயங்களில்கூடக் கை ஓங்கும் சுபாவத்தையும் மாறுவேடத்திற்காகத்தான் உருவாக்கிக்கொண்டேன். ஆனால் இவை குழப்பத்தையும் காலப்போக்கில் கூடுதல் மரியாதையையும் விளைவித்தனவோடு சரி. இதற்கிடையில், தற்செயல் நிகழ்வுகள் எதற்காக இருக்கின்றன?

நான் கூறப்போகும் நிகழ்வு நடந்த அன்று... மெல்லத் தூக்கத்திலிருந்து மனமின்றி விடுபட்டுக்கொண்டிருந்தது சென்னை. குருவிகளின் கூச்சல் வானை நிறைத்தது. மதியம் 12.30 மணி வாக்கில் ஒரு கடையில் சோடா குடித்துக்கொண்டிருந்தேன். மாறுவேடமாகத்தான். ஏனென்றால் உலகம் என்னை காபி, டீ குடிப்பவனாகவே அறிந்திருந்தது. வழக்கம் போல் ஒரு வாசகர் என்னை அடையாளம் கண்டு சினிமா பாரடைசோ பற்றிப் பேசத் தொடங்கினார். உடனே அனிச்சையாக பட்டர்பிஸ்கட் ஜாடி மீதிருந்த ஒரு சிறு புத்தகத்தை எடுத்துத் திறந்து பார்த்தேன். 'அரை விநாடி அநியாயம்'. ராஜேஷ்குமார் நாவல்.


இந்நிலையில் தீவிர இலக்கிய ரீங்காரமாக மாறிவிட்டிருந்த வாசகரின் பேச்சை இரு காதுகளாலும் தடுத்தபடியே ராஜேஷ்குமார் நாவலின் வாசகர் கடிதப் பகுதியில் ஆழ்ந்தேன் (என் நண்பர் ஒருவர் அதற்குக் கடிதம் அனுப்பியிருந்தார்). திடீரென வாசகரின் ஒலிப்போக்கு நின்றிருந்தது. என் அருகில் நின்றாற்போல எதையோ அல்லது யாரையோ தவிப்புடன் தேடிக்கொண்டிருந்தார். "பேயோன் சார்! பேயோன் சார்!" என்று அவர் கூவிய பின்புதான் அவர் தேடத் துவங்கிவிட்டிருந்தது என்னை என்றுணர்ந்தேன். கடைக்காரர் உள்கடைக்குள் மூழ்கியிருக்க, அப்படியே ராஜேஷ்குமார் நாவலும் கையுமாய் கொசுறாக ஒரு தேன்மிட்டாயும் எடுத்த கையோடு நடையைக் கட்டினேன்.

தேன்மிட்டாயைக் கடைவாய்ப் பற்களால் மெல்லப் பிளந்து உயர்துழாவலால் அதன் உள்ளுலகை நாக்கிற்கு அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கையில் எனக்கு உண்மை உறைத்தது. பொதுவாக ராஜேஷ்குமார் நாவல்கள் என்னால் படிக்கப்படுவதில்லை. பதினைந்து ஆண்டுகளாகப் பெரும் புனைவுகள், கவிதைகள், கட்டுரைகள் மற்றும் பத்திகள் வாயிலாக ஒரு சமகால தனித்துவ தீவிர இலக்கியப் பாரம்பரியத்தை நிறுவிக்கொண்ட எழுத்தாளுமையின் கையில் ராஜேஷ்குமார் நாவல்

இருப்பது இயற்கையின் பேரசாத்தியங்களில் ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்பதாக வாசகப் பொதுப்புத்தியில் பதிந்திருக்கிறது. அதனால்தான் நான் நாவலைக் கையிலெடுத்ததும் அந்த வாசகர் என்னை அடையாளம் காண்பது நின்றுவிட்டிருக்கிறது.

அதிர்ஷ்டத்தை நம்பாமல் இதே விதமாக எதிர்ப்பட்ட இன்னொரு வாசகரிடம் இந்த உத்தியை முயன்றேன். அப்பழுக்கில்லாமல் வேலை செய்தது. அவரை உசுப்பி "தெரியுமா, நான்தான் பேயோனாம்" என்றுகூட சொல்லிக்கொண்டேன். அவர் என்னை ஏற இறங்கப் பார்த்ததோடு சரி. அதற்குப் பின்னர் தவறியும் ராஜேஷ்குமார் நாவலைக் கைவிடவில்லை. உங்கள் அபிமான நடிகரால் இதைச் செய்ய முடியுமா?

கவிதை அகராதி



உயிரெழுத்து, மெய்யெழுத்து கற்று முடித்து அடுத்த கட்டமாகக் கவிதை எழுத வரும் ஆர்வலர்களின் உதவியுடன் கவிதையை தேசிய பொழுதுபோக்காகக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் இந்த அகராதி உருவாக்கப்பட்டுள்ளது.

அறை:

வெளியுலகம் கவிதைசொல்லியிடமிருந்து பாதுகாக்கப்படும் இடம். சுவாரசியம் இல்லாத நிகழ்வுகள் நடைபெறுவதாகச் சொல்லப்படும் இடம்.

இசை:

குறிப்பிட்ட ஒழுங்கைக் கொண்ட சத்தம். பாடல். தெரியாத இடத்திலிருந்து வரும் ஓசை. வெறுமை. சிந்தனையின் குரலுக்கு மாற்று.

இரவு:

அந்திக்குப் பிறகு வரும் நேரம். பொதுவாக 21:00 மணி முதல் 02:00 மணி வரை நீடிக்கும். நிசப்தம், மழை, தனிமை, நிழல் ஆகியவற்றின் கலவை. கவியச் செய்வதற்காகக் கவிதைசொல்லியால் உருவாக்கப்பட்டது.

உதடு:

உதடுகளில் ஒன்று. கவிதைசொல்லி அல்லது அவரது காதலி/காதலனுக்கு சக உதட்டுடன்

சேர்த்து முத்தமிடுவதற்குப் பயன்படுத்தப்படுவது. இரு உதடுகளும் சேர்ந்து உதடுகள் அல்லது இதழ்கள் என்று அழைக்கப்படுகின்றன.

கவிதல்:

மேலிருந்து இறங்கி மூடுதல். இரவு, மௌனம், நிசப்தம், வெறுமை, தனிமை போன்றவை இதைத் தொழில்முறையாகச் செய்கின்றன.

கவிதை:

கருத்துப் பிழை.

கனவு:

தூக்கத்தில் தோன்றும் படிமம். கவிதைசொல்லியினுடைய அற்ப ஆசைகளின் கொள்கலன்.

காத்திருப்பு:

சும்மா இருத்தல். கவிதை தொடங்கும் நேரத்திலிருந்து முடியும் நேரம் வரை நிகழ்வது.

காற்று:

பிராணவாயு உள்ளிட்ட வாயுக்களின் கலவை. கவிதைசொல்லியின் தேவையைப் பொறுத்து வலுவாக அசைந்து பொருட்களை அசைக்கக்கூடியது அல்லது உடல் மீது படக்கூடியது. கவிதைசொல்லியின் எடுபிடியாகப் பயன்படுகிறது.

குழந்தை:

மனிதனின் வயது குறைந்த வடிவம். மனித அரசியலில் பாதகமான தாக்கம் எதையும் நேரடியாக ஏற்படுத்தாமையால் பார்வைக்குகந்த தோற்றம், இனிய ஒலி எழுப்பும் திறன், முதிர்ச்சியின்மை போன்ற காரணங்களுக்காகக் கொண்டாடப்படுவது. கவிதைக் கருவி.

குறிப்புகள்:

சும்மா. ஒன்றுமில்லை. கவிதை என அடையாளம் காட்டத் தலைப்பில் மட்டும் பயன்படுத்தப்படும் சொல்.

கொலை:

உயிரை நிறுத்துதல். உயிர் என்பது காதலனின், காதலியின் அல்லது வாசகனின் உயிரை, அல்லது பூனை, குருவி, புறா போன்ற மென்மையான ஜீவராசிகளின் உயிரை, அல்லது டினோசார், கப்பல், காண்டாமிருகம் என வாழ்க்கையுடன் தொடர்பில்லாதவையின் உயிரைக் குறிக்கிறது.

சிறுமி:

பார்க்க: குழந்தை. கவிதைசொல்லி ஆணாக இருக்கும் பட்சத்தில் குழந்தை சிறுமியால் மாற்றீடு செய்யப்படுகிறது. அப்பாவித்தன்மையின் குறியீடாக நீண்டகாலமாகப் பயன்படுவது.

சுயம்:

இனிப்பு வகை. 'நான்' என்பதன் மேம்படுத்திய வடிவம். தத்துவார்த்த சிந்தனைகளையும் உறவுச் சோகங்கள் குறித்தான எண்ண ஓட்டங்களையும் பதிவுசெய்யப் பயன்படுகிறது. இழத்தல், தொலைதல் என்பவற்றுடன் இணைத்து எழுதப்படுகிறது.

தனிமை:

பிறர் உடனில்லாமல் 'நான்' தனியாக உள்ள நிலை. 'நீ' போல, இல்லாதபோதும் இருப்பதாகக் கவிதையில் எழுதப்படுவது. பெரும்பாலும் சுயசுபாவ காரணங்களால் ஏற்படுவது. பல சமயங்களில் கவிதையில் "யாருமற்ற" என்கிற வார்த்தையைப் பயன்படுத்துவதற்காகக் கற்பனை செய்யப்படுவது.

தேடல்:

பார்க்க: தேடுதல்.

தேடுதல்:

தேடாமை.

தேவதை:

கவிதைசொல்லியின் காதலி. கவிதைசொல்லி ஒருதலையாய்க் காமுறும் பெண். சிறுமி. கற்பனை உயிரினம்.

தொலைதல்:

முன்னறிவிப்பின்றி தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ மறைந்துபோதல். உட்கார்ந்த இடத்திலிருந்து நகராதிருத்தல். சுயம், முகவரி, கனவு உள்ளிட்ட சொற்களுடன் இணைத்து எழுதப்படுவது.

தோழி:

'காதலி' என்பதன் இடக்கரடக்கல். நீ, நான், சுயம், மழை, தொலைதல், முகவரி, இசை, கனவு ஆகியவற்றுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது.

நதி:

பெரிய நிலப் பரப்பில் நிறைய ஓடும் நீர். சுவை குன்றிய விஷயங்களின் குறியீடாகப் பயன்படுகிறது.

நான்:

கவிதைசொல்லி. எல்லாம் அறிந்த நுண்ணுணர்வாளர். ஆகப்பெரிய மனிதநேயர். ஒரு கவிதையைச் சிந்திக்கத் தொடங்கினால் அன்னியமாதலுக்கு உட்படுபவர். சுயம் அறிந்ததைப் பகிர்ந்துகொள்பவர். அசப்பில் 'நீ' போன்றவர், ஆனால் இந்தப் பக்கமாக அமர்ந்திருப்பவர்.

நிசப்தம்:

ஒலியின்மை. ஊடுருவப்படுவதற்காக எழுதப்படுகிறது. இரவு, தனிமை போன்றவற்றுடன் இணைத்து எழுதப்படுகிறது. வெறுமை. பார்க்க: நிழல்.

நிழல்:

ஒளி ஒரு பொருளின் மீது படும்போது அப்பொருளின் ஒளிபடாத பகுதியின் மீது விழும் இருண்மையானது ஒளி கிளம்பும் இடத்திற்கு எதிர்த் திசையில் பிரதிபலித்தல். ஒளியைக் குறிக்கும் இருள். கவிதைசொல்லிக்குப் புரியாத ஒன்றைக் குறிப்பிடவும் கவிதையில் ஆழம் இருப்பதான எண்ணத்தை விளைவிக்கவும் பயன்படுகிறது.

நீ:

நாம் அல்லாதவர்களில் நம்முடன் உரையாடிக்கொண்டிருப்பவர் அல்லது நம்மால் உரையாடப்படுபவர். எழுதுவதற்காக உருவாக்கப்படும் இல்லாத நபர், எ.கா., காதலி அல்லது காதலன்.

பயணம்:

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்லும்போது நிகழ்வது. சும்மா இருத்தல். புட்டத்தை இருக்கையிலிருந்து பிரிக்கவியலாத நிலை.

புன்னகை:

கணநேர மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வாயசைவு. கவிதைசொல்லியின் காதலி அல்லது அறியாத இளம்பெண் அல்லது குழந்தையால்/சிறுமியால் செய்யப்படுகிறது.

பெயர்:

அழைப்பதற்கும் சான்றிதழ்களில் அடையாளம் குறிப்பதற்கும் பயன்படுவது. பெரும்பாலும் கவிதைசொல்லியினுடையது. கவிதையில் உரிமையாளர் மறந்துபோவதற்காகப் புகுத்தப்படுகிறது.

மரணம்:

மனிதர்கள் அல்லது பறவைகள் அல்லது பூனையின் உயிர் நின்றுபோதல். உயிர் நிறுத்தப்படுவதன் விளைவு. பார்க்க: கொலை.

மரணித்தல்:

மனிதனுக்கு அல்லது பிற உயிரினங்களுக்கு மரணம் சம்பவித்தல். ரம்மியமான வர்ணனைக்குட்படும் கெட்ட சாவு. கவிதைசொல்லி நிகழ்த்தும் காரியச் சாவு.

மழை:

வானில் நீர்தாரி மேகங்கள் மோதுவதால் நிலத்தின் மீது நீர்த்துளிகள் மிகப்பெரிய எண்ணிக்கையில் விழுதல். மந்தமான சூழலை விவரிக்க உதவுகிறது. தோழி, தேவதை, சிறுமி முதலான சொற்களுடன் இணைத்துப் பயன்படுத்தப்படுகிறது.

முகம்:

கண்கள், காதுகள், மூக்கு, வாய் முதலானவை அமைந்திருக்கும உடலுறுப்பு. தொலைதல் என்ற வார்த்தையுடன் இணைத்து எழுதப்படுகிறது. சுய அன்னியமாதல் மற்றும் சுய மேன்மை வெளிப்படும் கணங்களில் முகங்கள் எனப் பன்மையில் குறிப்பிடப்படுகிறது.

முகவரி:

கவிதைசொல்லி இருக்குமிடம் குறித்த முழு விவரம். பெரும்பாலும் அவர் இல்லாத இடம். உரைநடையில் மறப்பதற்காகவும் கவிதையில் தொலைப்பதற்காகவும் உருவாக்கப்படுகிறது.

முத்தம்:

ஒரு வாயால் இன்னொரு வாயை அல்லது உடலின் பிற பாகங்களை மூடிய நிலையில் அழுந்தத் தொடுதல். பெரும்பாலும் தன்மை, முன்னிலை பயன்படுத்தப்படும் கவிதைகளில் கவிதைசொல்லியால் ஏற்படுத்தப்படும் உடல் சாராத, உணர்ச்சி சார்ந்த ஓர் உளவியல் அரசியல் நிகழ்வு. கவிதைசொல்லிக்குக் கிடைக்காத காரணத்தால் எழுதப்படுகிறது.

மொழி:

கவிதைசொல்லியின் காதலியும் பேச்சு வராத உயிரினங்களும் பேசும் வார்த்தைகள். பெரும்பாலும் பொருள் அறிய முடியாத்தாகக் கூறப்படுகிறது.

வனம்:

மரத் தொகுப்பு. கவிதையில் அடர்த்தியானது. எதையுமோ யாரையுமோ காணாமல்போக வைக்கப் பயன்படுகிறது.

வெளி:

மளிகை சாமான்கள் கிடைக்காத இடம்.

வெறுமை:

ஒன்றுமின்மை. கவிதைசொல்லியின் படைப்பூக்க இழப்பு சார்ந்து கவியும் சோகத்தைக் குறிக்கிறது.

...!:

...!!!

லார்டு லபக்குதாசுடன் சில வரிகள்



முன்னணி மொழிபெயர்ப்பாளர் லார்டு லபக்குதாஸ் எனக்கு நெருக்கமான நண்பர். எவ்வளவு நெருக்கம் என்றால் அவ்வளவு நெருக்கம். உலகில் எந்த எழுத்தாளர் எந்த மொழியில் எழுதினாலும் அதை ஆங்கிலம் வழியாக மொழிபெயர்த்துவிடக்கூடியவர் லபக்குதாஸ். அவர் மொழிபெயர்த்த செக்காவ் சிறுகதைகள் அவர் மனைவியிடம் மிகுந்த பிரசித்தம்.

மூல எழுத்து என்றால் எனக்கு என்னுடைய நினைவே வருவது போல மொழிபெயர்ப்பு என்றாலே வரும் நினைவு லபக்குதாசுடையது. தமிழ்ச் சூழ்நிலையில் வேறு எந்த மொழிபெயர்ப்பாளரும் தன்னை நல்ல மொழிபெயர்ப்பாளர் என்று இந்தளவுக்கு நிறுவிக்கொண்டதில்லை. இதற்கு சில ஆயிரம் பக்கங்களும் ரூபாய்களும் செலவாகியிருக்கின்றன.

லபக்குதாஸ் முதலில் 'கவிதைச்சாமி' என்ற பெயரில் தனிமை, நிழல், குழந்தைகள் பற்றிக் கவிதை எழுதுபவராக இருந்தார். 2001இல் குற்றாலம் இலக்கியச் சந்திப்பில் அவருக்கு எனது அறிமுகம் கிடைத்தது. கவிதையின் சாத்தியங்களை உரைநடையிலேயே கொண்டுவரலாம் எனவும் உரைநடையில் பக்கங்களைத் தேற்றுவது எளிது எனவும் நான் அவருக்கு அறிவுரை கூறினேன். லபக்குதாஸ் கவிதையிலிருந்து முற்றிலுமாக உரைநடைக்கு மாற இது உந்துகோலாக இருந்தது.

உரைநடை என்று முடிவானதும் அதிலுள்ள தேர்வுகளை இருவருமாகப் பகுப்பாய்வு செய்யத் தொடங்கினோம். லபக்குதாஸ் முன்பே புனைவு எழுதிக் கைவிட்டிருந்ததோடு தான் அந்த மாதிரி ஆளல்ல என்றும் நம்பினார். கட்டுரைகளிலோ வெறும் தகவல்களும் கருத்துக்களும்தான் இருந்தன. அதிக உழைப்பின்றி எளிதாகச் செய்துவிடக்கூடிய காரியம் எது என்று சிந்தித்தபோது மொழியாக்கம் உற்ற தேர்வாகத் தோன்றியது.

லபக்குதாசும் அரைகுறையாகச் சிறிது ஆங்கிலம் தெரிந்துவைத்திருந்தார். வாக்கியங்களை அமைப்பது அவருக்கு அநாயாசமாகக் கைவந்தது. ஆனால் வாக்கியங்களின் நீளம் அதிகரிக்க அதிகரிக்க வார்த்தைகள் தொடர்பின்றி இடம் மாறின. வாக்கியங்கள் மெல்லப் படித்தால் ஒரு பொருளும் வேகமாகப் படித்தால் ஒரு பொருளும் தருபவையாக இருந்தன. இந்தத் திறமை இருந்தாலே மொழியாக்கத்தின் விழிகளில் விரலை விட்டு ஆட்டுவிக்க முடியும் என அவருக்கு விளக்கினேன். லபக்குதாஸ் கவிதையிலிருந்து முற்றிலுமாக உரைநடைக்கு மாற இது உந்துகோலாக இருந்தது.

எல்லோரையும் போல் காஃப்காவின் கதைகளை மொழியாக்கம் செய்யத் தொடங்கி லத்தீன்

அமெரிக்கச் சிறுகதைகள், ஸ்பானியக் கவிதைகள் என்று வளர்ந்தவர் லபக்குதாஸ். மொழிபெயர்ப்பதற்கு நிறைய படிக்க வேண்டும். அப்போதுதான் அவ்வாறு படித்ததை மொழிபெயர்க்க முடியும். படிப்பதற்கான புத்தகங்களை லபக்குதாஸ் என்னிடம் இரவல் பெற்றுக்கொண்டார். மற்ற மொழிபெயர்ப்பாளர்களைப் போல அவருக்கும் உலக சினிமா, உலக கலை ஆகியவற்றில் ஆர்வங்கள் இருந்தன. ஏதாவது சில பெயர்களைத் தெரிந்துகொண்டு சிலாகித்துக்கொண்டே இருப்பார்.

மொழிபெயர்ப்பில் செய்யும் தவறுகளை ஒப்புக்கொள்ளத் தேவையான நேர்மைக்கு பதிலாகத் தவறுகளை நியாயப்படுத்தும் சாமர்த்தியம் லபக்குதாசிடம் இருந்தது. ஒரு கட்டுரையில் "பனங்காட்டு நாரி" என எழுத்துப் பிழையுடன் எழுதியிருந்ததை நான் சுட்டிக்காட்ட, "பனங்காட்டு நாரி என்றால் ஜெயலலிதா மாதிரி ஒரு கில்லாடிப் பெண்மணி" என்று சமாளித்தார் லபக்குதாஸ். உதாரணங்களுக்குப் பஞ்சமும் இல்லை, இடமும் இல்லை.

* * *

உலகின் இந்தப் பகுதியில் என்னை ஓரளவிற்கு சரியாகப் புரிந்துகொண்ட மிகச் சிலரில் ஒருவர் என லபக்குதாஸை வகைப்படுத்தலாம். 'உங்களுடன் பேசும் எவரும் முதலிலேயே தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டால் அதற்குப் பிற்பாடு உங்களுடன் பேசுவது எளிதாக இருக்கும்' என்பார் லபக்குதாஸ். இப்படி நிறைய.

என் மீதான அவருடைய இயல்பான, நியாயமான அவநம்பிக்கையையும் பொதுவான சுய சாமர்த்தியத்தையும் மீறி எனது பொய்களை நம்புபவர் லபக்குதாஸ். அதைப் பார்க்கவே அவரிடம் அடிக்கடி எதையாவது கிளப்பிவிடுவது என் வழக்கம். நாவலில் Sparingly Written Novel என ஒரு வகை இருப்பதாகவும் Pedro Paramo, Daisy Miller போன்ற நாவல்களும் ஒரு சில குறும்படங்களும் கூட அவ்வகையைச் சேர்ந்தவை என்றும் அவரிடம் ஒரு முறை சொன்னேன். நம்பிவிட்டார் அந்த நல்ல மனிதர். ஆனால் நம்பிக்கை என்பதை விட, இவன் பேசுவதில் தவறிப்போய் உண்மை இருந்து அது நமக்கு உபயோகமாக இருந்துவிடாதா என்கிற நப்பாசையாகத்தான் இதை நாம் பார்க்க வேண்டும் என்றும் தோன்றுகிறது.

நானும் லபக்குதாசும் கலை, இலக்கிய, சினிமாக்களைப் பற்றி உரையாடும்போது பேச்சினூடே சில வெளிநாட்டுப் பெயர்களை உதிர்ப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். இப்போதெல்லாம் பெயர்களை வெறும் பெயர்களாக யார் பார்க்கிறார்கள்? நான் ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு மாதிரியான பெறுமானத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறேன். திரைப்பட இயக்குநர் என்றால் ரூ. 20. திரைப்பட காமிராமேன், இசையமைப்பாளர் என்றால் ரூ. 17. சிறுகதை, நாவல் எழுதுபவர் என்றால் ரூ. 15. ஓவியருக்கு ரூ. 10. கவிஞருக்கு ரூ. 5. ஒரு இரண்டு மணிநேர உரையாடலில் 3 இயக்குநர்கள், 1 நாவலாசிரியர், 2 கவிஞர்கள் பெயரை உதிர்த்தேன் என்றால் பேச்சின் முடிவில் ரூ. 85ஐ லபக்குதாஸ் என் கையில் வைத்துவிடுவார். பெரும்பாலும் நூறு ரூபாய் நோட்டாகக் கொடுப்பார். மீதிப் பணத்தைத் திரும்பத் தர சில்லறை இல்லாத தருணங்களில் அடுத்த முறை கழித்துக்கொள்வேன். பரஸ்பரம் லாபகரமான ஒரு ஏற்பாடு இது.


லபக்குதாஸ் இதை ஒரு கல்விசார்ந்த அனுபவமாகக் கருதாமல் ஒருவித விளையாட்டாக நடத்துவார். மாதச் சம்பளக்காரரான அவருக்கு மாத இறுதிகளில் பணம் கட்ட முடியாத நெருக்கடி ஏற்படத் தொடங்கியதும் அக்கவுண்ட் தொடங்கிவிடும்படி கூறினேன். அன்றிலிருந்து அவர் அந்த விளையாட்டிலிருந்து விலகிக்கொண்டார். இப்போது தர்ம காரியமாகத்தான் அவரிடம் உலக கலையிலக்கியம் பேசுகிறேன். அவர் மொழிபெயர்ப்பது வேறு எழுத்தாளர்களை என்றாலும் கூட எழுத்தாளனுக்கும் மொழிபெயர்ப்பாளனுக்கும் இடையிலான உறவு எங்களிடையே தொடர்கிறது.

* * *

மொழிபெயர்ப்பாளர்கள் அடிப்படையில் எழுத்தாளர்கள் என்று ஒரு கருத்து உண்டு. லபக்குதாஸ் அடிப்படையிலேயே மொழிபெயர்ப்பாளர்தான். உண்மையில் அவர் மொழிபெயர்ப்பாளரின் மொழிபெயர்ப்பாளர். காரணம், வேறு யாரையும் விட மொழிபெயர்ப்பாளர்களுக்கே அவருடைய மொழிபெயர்ப்பு நன்றாகப் புரியும். அவரின் எழுத்துநடை அவ்வாறுபட்டது.

ஆனால் நான் இலக்கியத்திற்கு என்ன செய்துகொண்டிருக்கிறேனோ அதையேதான் அவர் மொழியாக்கம் மூலமாக இலக்கியத்திற்கு செய்துகொண்டிருக்கிறார் என்ற எனது வாதத்தை அவர் ஒருபோதும் ஏற்பதில்லை. அந்த மட்டில் அவர் இன்னும் லட்சியவாதியாகவே இருக்கிறார் போலும்.

3024இல் எதுவும் சாத்தியம்



கி.பி. 3024.

"பல்கிரக அண்டவியல் ஆராய்ச்சி மையத்திற்கு மீண்டும் நல்வரவு திரு. குமார்420."

தானியங்கிக் கதவு ஓசையின்றித் திறக்க, உள்ளே நுழைந்த குமார்420ஐ புன்னகையுடன் இனிய பெண் குரலில் வரவேற்றாள் மின்மி. 40 மில்லியன் ஆங்ஸ்ட்ராம் ரிசல்யூஷனில் இருந்த மின்மியின் 28.4-30.3-34 ஹோலோகிராம் உடலை ஊடுருவிக்கொண்டு தன் இருக்கைக்குச் சென்றார் குமார்420.

கூரையின் கீழ் இயக்கமற்று மிதந்துகொண்டிருந்த செயற்கை நேனோஃபோட்டான் விளக்குகள் குமார் அமர்ந்ததும் இயக்கத்திற்கு வந்து வசதியான தூரத்தில் நின்று ஒளிவிட்டன.

"கட்டுரையும் செயல்திட்டத்தின் மூல மாதிரியும் தயாராகிவிட்டதா மின்மி?" என்றார் குமார்420.

"எடுத்துவைத்திருக்கிறேன் சார்" என்றாள் மின்மி.

மின்மி அதிஉயர் நேனோ தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட நியூரான் திரைகளாலான முப்பரிமாண உரு. ஒரு பைக்கோ நொடியில் 20 யோட்டா கணக்குகளைப் போடும் திறனுள்ள கணினி. ஜெனன் கிரகத்துடனான நான்காம் யுத்தத்தில் பூமிக்கு நிரந்தர வெற்றி தேடித் தந்த மின்காந்த டிஃப்ளெக்டர்களை உருவாக்கியதற்காக குமார்420க்கு அரசாங்கம் கொடுத்த பரிசு. இப்போது குமார்420இன் அந்தரங்கக் காரியதரிசி. பல்லூடக கேளிக்கைச் சாதனம். அது மட்டுமா, பருவுடல் பயன்முறைக்கு மாறினால் பூமியின் முழுமுதற் தலைவருக்குக் கூடக் கிடைக்காத இன்பங்களையெல்லாம் மாயமெய்ம்மையில் அள்ளித் தரும் மனைவி.

பல கோடி வண்ணப் புள்ளிகள் திரண்டு கட்டுரை அவர் கண் முன் உருவானது. இந்தக் கட்டுரையும் மூல மாதிரியும் பிரபஞ்சம் முழுவதையும் எப்படி மாற்றப்போகிறது என்று நினைத்து சிலிர்த்தார் குமார்420. அணுக்கருவை எண்ணற்ற முறை துளைத்துக்கொண்டே இருக்கலாம் என்று 14 ஆண்டுகளுக்கு முன்பு கோட்பாட்டு ரீதியாக நிரூபித்து அழியாப் புகழைப் பெற்றார் குமார்420. தனது புதிய கண்டுபிடிப்பு பிரபஞ்சத்தை இன்னும் பெரிதாக உலுக்கப்போகிறது என்ற எண்ணம் அவரது செதுக்கிய மூக்கிற்குக் கீழ் மெல்லிய புன்னகையை வரவழைத்தது.

"கட்டுரையை நீ படித்தாயா மின்மி? எப்படி இருந்தது?" என்று கேட்டார் குமார்420.

அது பாராட்டை எதிர்பார்த்துக் கேட்கப்படும் கேள்வி என்று புரிந்துகொண்ட மின்மி, "நான் என்ன சொல்ல? உங்களை விஞ்ச ஒரு மென்மூளை கூட இல்லை" என்றாள்.

'அட, அது எனக்குத் தெரியாததா!' என்பது போல் கடகடவென சிரித்தார் குமார்420. "3024இல் எதுவும் சாத்தியம்" என்ற அவர், "எங்கே என் ப்ரோட்டோடைப்?" என்றார்.

அவர் கேட்டு முடிப்பதற்குள் அவர் மேஜையிலிருந்து ஒரு டைட்டானியத் தட்டு வெளிப்பட்டது. தோராயமாகக் காகிதப் பந்து போலிருந்த பொருள் ஒன்றை நீட்டியது. பார்வைக்கு எளிதாக இருந்தாலும் மிக சக்திவாய்ந்த நுண்ணோக்கிகளால் பார்த்தால் மட்டுமே அதன் சிக்கலான அமைப்பு முழுமையாகத் தெரியும்.

சில கோடி நேனோ ரோபோக்களால் அமைக்கப்பட்ட அந்தக் காகிதப் பந்து, R2C3 என்ற புது ரக இயந்திரத்தின் மூல மாதிரி. பிரபஞ்சத்தில் இன்னும் கண்டறியப்படாத கிரகங்களையும் தேடிக் கண்டுபிடித்து தொலைவெளி மின்காந்த வீச்சு மூலம் பூமியுடன் கம்பியில்லாமல் இணைக்கவிருந்தது R2C3. இது இயந்திரங்களின் இயந்திரம். கோள்சார் காலனியமாக்கத்தின் அடுத்த வடிவம். R2C3.

* * *

"மனித மூளை மட்டுமல்ல, வேறு எந்த அறிவுயிரின் தகவல் நிகழ்முறை அமைப்பும் கணினியை விடச் சிக்கலாக இருப்பது ஏன்?"

சுற்றிலும் தத்தமது திரைகளுக்குள்ளிருந்து கவனித்துக்கொண்டிருந்த விஞ்ஞானிகள் யாரும் டாக்டர் மிஷா42இன் கேள்விக்கு பதிலளிக்கவில்லை. மாறாக, அவர்கள் மிஷா42இன் விளக்கத்திற்குக் காத்திருந்தனர். சிலர் அறிவியலை தற்காலிகமாகத் தூக்கப் பயன்முறையில் வைத்துவிட்டு மிஷா42இன் மணல் கடிகாரத்தில் நேரம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"மனித மூளையை விட எண்ணற்ற மடங்கு கணக்கீட்டுத் திறன் கொண்ட கணினிகளை உருவாக்கிவருகிறோம். ஆனால் வன்இயந்திரங்களும் மின்னுயிர்களும் ஒரு அளவிற்குப் பின் கணிக்கத்தக்க போக்கிலேயே நடந்துகொள்கின்றன. மனித சிந்தனையின் தற்போக்குத் தன்மையை நம் இயந்திரங்களால் போலிசெய்ய முடிவதில்லை. இதனால் புதிய சிந்தனைகளுக்கு நாம் மனித மூளையைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. மனித மூளையை முற்றிலுமாக நகலெடுத்து மனித சிந்தனைப் போக்கை சிமுலேட் செய்யும் திறன் நமது மகத்தான சாதனைகளில் ஒன்று. இந்த சிமுலேஷன் மூலம் நான் உருவாக்கிய புதிய செயல்திட்டம் ஒன்றை இங்கு விவரிக்க விரும்புகிறேன்" என்று சொல்லி நிறுத்தினார் மிஷா42.

விஞ்ஞானிகள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

"R2C3 என்று நான் பெயரிட்டிருக்கும் இந்த செயல்திட்டம், நமக்காக இனி மென்பொருட்களே

சிந்திக்கும் என்பதற்கு சாட்சி" என்ற மிஷா42, தனக்கு முன்னால் இருந்த மேஜையில் ஒரு பொத்தானை அழுத்தினார். மேஜைக்கு மேல் பெரிதாக அந்தரத்தில் விரிந்தது ஒரு வெண்கோளம். அது பார்க்கத் தோராயமாக ஒரு காகிதப் பந்து போல் இருந்தது.

"நீங்கள் பார்க்கும் இந்தப் பந்து, R2C3 என்ற புது ரக இயந்திரத்தின் மூல மாதிரி. மிக சக்திவாய்ந்த நுண்ணோக்கிகளால் பார்த்தால் மட்டுமே அதன் சிக்கலான அமைப்பு முழுமையாகத் தெரியும். பிரபஞ்சத்தில் இன்னும் கண்டறியப்படாத கிரகங்களையும் தேடிக் கண்டுபிடித்து தொலைவெளி மின்காந்த வீச்சு மூலம் ழ்றஷ்ÑÐவியுடன் கம்பியில்லாமல் இணைப்பதற்காக இதை உருவாக்கப்போகிறோம். இது இயந்திரங்களின் இயந்திரம். கோள்சார் காலனியமாக்கத்தின் அடுத்த வடிவம் - "

மிஷா42இன் உணர்ச்சிப் பெருக்கில் டாக்டர் சந்திரஹால்71 குறுக்கிட்டார்: "வாழ்த்துக்கள் மிஷா. மனித சிந்தனைப் போக்கைப் போலிசெய்து கிடைத்த முதல் சிந்தனைதான் உங்கள் வெளிவலைச் செயல்திட்டம் என்கிறீர்கள். ஆனால் இத்தகையதொரு பணியைக் கையாளும் திறன் எனக்குத் தெரிந்து நமது வன்பொருட்களிடம் இல்லை."

அரசியல் சாசனத் திருத்தத்தின் மூலம் ஆயுள் நீட்டிப்பு கிடைத்ததிலிருந்து இவரது மிகைமை பொதுத் தாங்குதிறனை மீறிச் சென்றுகொண்டிருந்ததாகத் தோன்றியது மிஷா42க்கு.

தனது பேத்தியிடம் பேசுவது போன்ற பாவனையில் விளக்கினார் சந்திரஹால்71: "உங்கள் சிந்தனை நிகழ்முறைமை இந்தக் கட்டத்திலேயே பெரும் செலவு வைத்திருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. உங்கள் போலியாக்கத்திற்குத் தேவையான அளவு திறனுள்ள ஒரு பெரும் கணினியை உருவாக்குவது கட்டுப்படியாகாது."

ஜென்91 என்ற இன்னொரு இளம் விஞ்ஞானி சட்டைப் பையிலிருந்து ஒரு நுண்வட்டை எடுத்து அதிலிருந்து நீண்டதொரு ஹோலோகிராஃபிக் விளக்கப்படத்தை உருவினார். மிஷா42 அவரைக் கையமர்த்திவிட்டுத் தொடர்ந்தார்...

"இப்படியொரு வெளிமுகமான பிரச்சினையைப் பற்றி யோசிக்காமலோ, அதற்கொரு தீர்வு காணாமலோ நான் இருக்க முடியுமா? ஒரு சிந்தனை நிகழ்முறை தொடங்கி நிறைவடைய 2.4192E+18 பைக்கோ நொடிகளாவது ஆகின்றன. இதற்குச் செலவாகும் ஆற்றல் அபரிமிதமாக இருப்பதால் அந்த நிகழ்முறை இயங்கும் கணினி சிறிது காலத்திற்குப் பின் பயனற்றதாகிவிடுகிறது. ஆனால் நான் இதற்கொரு தீர்வு வைத்திருக்கிறேன்."

வெண்கோளத்தை அணைத்துவிட்டுத் தொடர்ந்தார் மிஷா42.

"எனது தீர்வு: குறுகிய காலத்திற்கு மட்டுமே பயன்படும் கணினிகளை உருவாக்குவோம். ஒரு கணினி = ஒரு சிந்தனை. பிறகு பயன் தீர்ந்த கணினிகளை மறுசுழற்சிப்படுத்தி அடுத்த சிந்தனைகளுக்குத் தயாராக்குவோம். இதைப் பெரிய அளவில் தொடர்ந்து செய்தபடி இருந்தால் நீண்டகாலப் பலன் இருக்கும்."

விஞ்ஞானிகள் எல்லோரும் யோசனையில் மூழ்கியிருந்தார்கள். தனது மைக்ரோபோட்டாக்ஸ் புருவங்கள் சுருங்க சிந்தித்துக்கொண்டிருந்த சந்திரஹால்71 சிறிது நேர மௌனத்திற்குப் பின் மெல்லப் புன்னகைத்தார்: "பிரில்லியன்ட்."

* * *

"பதினொன்று நாற்பத்தைந்து..." குமார்420இன் உதடுகளிலிருந்து பிரிந்து பரவசத்துடன்

முனகினாள் மின்மி. அவள் சொல்லி முடிப்பதற்குள் இருவரும் பயன்முறை மாறிவிட்டிருந்தனர்.

கலையாத பரட்டைக் கேசத்தையும் கசங்காத உடையையும் சரிப்படுத்திக்கொள்ள முயன்றார் குமார்420. அந்த ஆனானப்பட்ட விஞ்ஞானிக்குக் கூட மாய மெய்ம்மையின் நிஜம் இயற்கை நிஜமாகத் தெரிந்ததில் வியப்பில்லை.

இன்னமும் பருவுடல் பயன்முறையிலிருந்து முற்றிலுமாய் மீண்டிராத குமார்420, "விளக்கக்காட்சிக்குக் கிளம்பும் நேரம் வந்துவிட்டது. அந்த நுண்வட்டை எடுத்துக் கொடு மின்மி" என்று குழறியபடி கை நீட்டினார். நீட்டிய கையைப் பார்த்து அதிர்ந்தார் - அவரது கை முழுவதும் சிறுசிறு சதுரங்களாகத் திரிந்துகொண்டிருந்தது.

குமார்420க்கு வியர்த்துக்கொட்டியது. 'என்ன ஆகிறது எனக்கு?' அனைத்தும் அறிந்த டாக்டர் குமார்420க்குத் தன் உடல் அடைந்துவந்த மாற்றம் புரியவில்லை. அதைவிட பயங்கரம், அதற்கான காரணத்தை அவரால் சிந்தித்தறிய முடியவில்லை. சரும ஒவ்வாமையா? மூளைச் செயலிழப்பா? ஆயுள் கட்டுப்பாட்டு அறையில் கோளாறா?

"மின்மி, ஹெல்ப் மீ!" என்று அலறினார் குமார்420.

"அமைதியாக இருங்கள் பேராசிரியரே. உங்கள் நிகழ்முறை இன்னும் 1,700 கோடி நேனோ நொடிகளில் முடியப்போகிறது" என்றாள் மின்மி.

குமார்420இன் பருவுடல் பல்லாயிரம் கோடி பிக்சல்களாகக் கரைந்துவர, 'என்ன சொல்கிறாய் மின்மி?' என்றன அவரது வெறித்த கண்கள்.

"கடைசி முத்தத்திற்கு நன்றி மை டியர்" என்றாள் மின்மி என்கிற மிஷா42.

காஃப்கா கதைகள்

சிரித்துவிடுங்கள்

காலை நேரம் கன்னிமரா நூலகம் கூட்டமின்றிக் கிடந்தது. நான் புத்தகங்களிடையே கைவீசி அலைந்துகொண்டிருந்தேன். புனைவுகள் பிரிவிலிருந்து ஒரு வாசகர் வெளிப்பட்டார். புன்னகைத்துக்கொண்டிருந்தவர் என்னைப் பார்த்ததும் உறைந்துபோனார். "உங்கள் சிறுகதையான 'பட்டாம்பூச்சி மிருகம்' ஒரு பழைய இத்தாலிய நாடகத்தின் அப்பட்டமான நகல்" என்றார். "நான் எழுதியது காப்பியா?" என்றேன். "ஆமாம், இப்போதுதான் கண்டுபிடித்தேன்" என்றார். "சிரித்துவிடுங்கள்! சீக்கிரம், சீக்கிரம்!" என்றேன் நான், உடனே சிரிக்காவிட்டால் நகைச்சுவை மறைந்துவிடப்போவது போல.

இங்கிருந்து வெளியே

நெருங்கிய உறவினரிடம் நான் கூறினேன், "மனைவியே, எனக்காவது நீ இருக்கிறாய். உனக்கு யார் இருக்கிறார்கள், பாவம்?" நெருங்கிய உறவினர் ஆயுதம் தேட வெளியேறத் தொடங்கினேன். "எங்கே போகிறாய்?" கேட்டார் உறவினர். நான் சொன்னேன், "இங்கிருந்து வெளியே - அதுதான் என் இலக்கு."

வாழும் கணங்கள்

முக ரோமத்தின் கடைசி மில்லிமீட்டரில் ஒரு பகுதியை மட்டும் சதைக்குள் மிச்சம் வைத்து சவரத்தை முடித்துத் தெருவில் இறங்கினேன். காற்றும் வெப்பமும் ஊடும் பாவுமாகக் கலந்திருந்தாலும் அப்போதுதான் சவரம் செய்து கழுவப்பட்டிருந்த முகவாயில் காற்று படும்போதெல்லாம் குளிர்ந்தது. அந்தக் குளிர்ச்சியையும் ஷேவிங் லோஷனின் மெல்லிய ரசாயன நறுமணத்தையும் அதைவிட மெலிதாக ரசித்தபடியே எனது கால்களை ஒவ்வொன்றாக எடுத்துவைத்துத் தெருவில் நடந்தேன். ஒரு காலைத் தரையிலிருந்து எடுக்கும்போது சமநிலை தவறிக் கீழே விழ வாய்ப்பளிக்காதபடிக்கு மறு கால் உடனே தரையிறங்கிவிடும் அதிசயத்தை ரசிக்காதிருக்க முடிக்கவில்லை.

தெரு முடியும் இடத்தில் ஒரு பெரிய மரம் பல்வேறு கிளைகளை நீட்டி என்னை வரவேற்றது. பார்த்ததும் நெகிழ்ந்தேன். இன்றுதான் முளைத்தது போல் ஒரு புத்துணர்ச்சி உடனே என்னுடனான ஒரு பந்தத்தை நிறுவிவிடுகிறது. அந்த மரத்திற்கு அங்குமிங்கும் நகரும் வசதி இல்லை. அதன் உடலின் ஆயிரக்கணக்கான உறுப்புகள் சதா அழிந்துகொண்டும் உதிர்ந்துகொண்டும் இருக்கின்றன. இருந்தாலும் அந்த மரம் தொடர்ந்து தழைத்துக்கொண்டுதான் உள்ளது. வெயில் அடித்தால் காய்வதும் மழை பெய்தால் நனைவதும் காற்றடித்தால் அசைவதுமாக, எந்த நூற்றாண்டிலோ கொடுக்கப்பட்ட ஏதோ ஒரு அற்புத சாபத்தை நிறைவேற்றிக்கொண்டிருப்பது போல் நிற்கிறது அந்த மரம். மரங்களின் கடமையுணர்ச்சி, அசகாய உழைப்பு மற்றும் உறுதி ஆகியவற்றிலிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு இலையும் ஒரு பாடம்.

உடலில் துணி மூடாத இடங்களில் ஆங்காங்கே சிறு குளிர்ச்சிகள். தூறல் போடத் தொடங்கியிருந்தது. ரசிக்கலாமா ஒதுங்கலாமா என யோசித்துக்கொண்டிருக்கும்போது சாலை ஈரமாகிவிட்டிருந்தது. மழை என்றாலே ஈரம்தான். பல சிறு ஈரங்கள் சேரும் பெரிய, பரவலான ஈரம். இன்னும் கனத்துப் பெய்தால் ஓடும், தேங்கும், நனைக்கும் ஈரம். ஒரு திரவப் பனி போல் மேலே கவிந்துகொண்டிருக்கிறது மழையின் ஈரம். மர இலைகளும் மழைத் துளிகளும் நிலத்தில் விழுவதை ஒப்பிட்டுக்கொண்டேன்.

ஒரு முதியவர். வயது எண்பது இருக்கலாம். சைக்கிளில் சுக்கு காபி கேன் வைத்து விற்றுக்கொண்டிருந்தார். மழை காரணமாக நல்ல கூட்டம் இருந்தது. முகத்தில் ஒரு புன்னகையை ஓடவிட்டபடி ஒரே ஆளாக சுமார் 20 வாடிக்கையாளர்களைக் கையாண்டுகொண்டிருந்தார். வாழ்வின் அனுபவங்கள் ஏற்படுத்திய அந்த ஆழமான சுருக்கங்களின் கால்வாய்களில் மழைத் துளிகள் இறங்கி ஓடின. அவருக்கு சர்வ கண்டிப்பாகக் குடும்பம் இருக்கும். அன்றன்றைக்குக் கிடைக்கும் வருமானத்தில் பேரக் குழந்தைகளுக்கு இனிப்புகளையும் விளையாட்டுப் பொருட்களையும் அவர் வாங்கிச் செல்லக்கூடும். அம்மனிதர் அந்தத் தள்ளாத வயதிலும் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு தெருத் தெருவாக வியாபாரம் செய்துகொண்டிருந்தது எனக்குள் ஒரு இனம்புரியாத பெருமிதத்தைக் கிளறியது. இவரைப் போன்றவர்கள் வாழும் உலகில்தான் நாமும் வாழ்கிறோம் என்கிற புரிதல் புன்னகையைத் தருவித்தது. பத்து ரூபாயை அவர் கையில் கொடுத்துவிட்டு அவர் சில்லறையை எண்ணித் திரும்பத் தருவதற்குள் ரகசியமாக விலகி நடந்தேன். ஒரு அற்பத் திருப்தி நிறைவேறிய திருப்தி.

சாலையோர மழைக் குட்டை ஒன்றில் குடிசைப் பகுதிக் குழந்தைகள் இருவர் சட்டை கூட அணியாமல் குதித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். வரும் வழியில்தான் சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் "தண்ணில வெளையாடாதடா கபோதி" என்று கண்டித்ததைப் பார்த்தேன். இருவேறு உலகத்துப் பெற்றோர்கள். நமது நடுத்தரவர்க்க பாதுகாப்பின்மை உணர்வை நம் குழந்தைகளுக்கு இளமையிலேயே புகட்டிவிடுகிறோம். அவர்களுடைய

இளமைக்கு ஆயிரம் கவலைகளைக் கற்றுத் தருகிறோம். இப்படித்தான் நடுத்தரவர்க்கக் கவலைகள் மரபணு அமைப்பில் பதியப்பெற்று ஒரு வர்க்கத்தின் பரம்பரைக் குணாம்சமாக மாறுகின்றன. விளைவு, ஒரு பக்கம் குழந்தைகள் சேற்றில் விளையாடுகிறார்கள், இன்னொரு பக்கக் குழந்தைகள் எதையும் அனுபவிக்காமல் வீட்டில் தொலைக்காட்சி பார்த்து வளருகிறார்கள். இருவரும் பள்ளியில் சந்திக்கும்போது பகிர்ந்துகொள்ளும் அனுபவங்கள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் இருக்கின்றன.

மாலை முதுமையடைந்து பார்வை மங்கி இருட்டிக்கொண்டது. வெளிச்சத்தின் அனைத்துக் கதவுகளையும் சாத்திவிட்டது போல் ஒரு இருட்டு. பூச்சிகளின் இசை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது. கூடவே ஏகாந்தத்தின் இரைச்சலும் குருவிகளின் கீச்சொலியும் ஓணான்களின் சரசரப்பும் எனது காலடி ஓசையும். தெருவோர எருக்கஞ்செடிகளின் தாழ்வான நீண்ட கிளைகள் கால்களில் தட்டுப்பட்டன. எருக்க மொட்டுகளை மனதால் உடைத்துக்கொண்டு நடந்தேன். அந்தக் கும்மிருட்டில் கண்களைத் திறந்தாலும் மூடினாலும் காட்சி ஒரு வண்ணத்தியதாகவே இருந்தது. காதுகள் கண்களாக மாறி ஒவ்வொரு சிறு சப்தத்தையும் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தன. சில நொடிகளில் அங்கிருந்த உயிரினங்களும் வாயை மூடிக்கொண்டு தத்தம் வேலையைப் பார்த்துக்கொண்டு போயின. காதை அடைக்கும் நிசப்தம். அந்த நிசப்தத்தினைத் தட்டித் தட்டி வடிவம் கொடுக்கும் ஒலி போல் எனது காலடிச் சத்தம் மாறாத லயத்துடன் கேட்டுக்கொண்டிருந்தது. இருளும் நிசப்தமும் பிறப்பில் பிரிக்கப்பட்ட குழந்தைகள் போலும்.

இருளில் எதிரே இழுத்துக் கிடந்த சாலைக்குள் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மங்கிய விளக்கொளியில் புகுந்தார்கள். இருவரும் தங்கள் எண்ணங்களைத் தாங்கள் பொதுவாக அறிந்த ஒரு மொழியில் பரஸ்பரம் வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஒருவர் பேசுவதும் அதை இன்னொருவர் கேட்பதும், பிறகு இருவருடைய பாத்திரமும் தலைகீழாகி பேசுபவர் கேட்பதும் கேட்பவர் பேசுவதுமாக, ஒரு தொலைக்காட்சித் தொடரில் இருவர் பேசும் காட்சி தெருவிற்கு இறங்கி வந்தது போலிருந்தது. இவர்களது உறவின் தன்மை குறித்து சிந்திக்கத் தொடங்கினேன். கணவன்-மனைவியாகவோ காதலர்களாகவோ இருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டேன். ஒரு ஆணும் பெண்ணும் தெருவில் போகிறார்கள் என்றால் அவர்கள் தம்பதியாகவோ காதலர்களாகவோதானே இருக்க முடியும். மிஞ்சிப்போனால் மணமக்களாக இருக்கலாம். நாமுள்ள இடமப்படி. தெருவில் கணவன்-மனைவியே நடந்துபோனால் கூட அவர்களுக்கு இடையே ஏதோ உறவு இருப்பதாக சந்தேகப்படும் சமூகம் இது.

ஏதோ ஒரு வீட்டினுள்ளிருந்து குறுந்தொகைப் பாடல்கள் ஒலித்தன. நான் நெருங்குகையில் பாடல்கள் முடிந்து விளம்பரம் ஒலிக்கத் துவங்கியிருந்தது. தெருவில் இன்னும் சிலர் மிச்சமிருந்ததோடு அவர்கள் நடமாடிக்கொண்டும் இருந்தார்கள். எல்லோருமே அவரவர் நோக்கங்களுக்கேற்ப ஒவ்வோரிடத்திற்குச் சென்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் புரிந்துகொள்ளலாம். குறும்பட திரையிடல்கள் போன்ற நிகழ்வுகளுக்குத்தான் இவர்கள் தங்கள் வித்தியாசங்களை மறந்து ஒரே இடத்திற்குச் செல்லக்கூடியவர்கள். தொலைவில் எனது வீடு தெரிந்தது. உலகையே சுற்றி வந்தாலும் நம்முடைய வீட்டினை அடையும்போது அவரவருக்கு ஏற்படும் பரிச்சய ஆசுவாசம் மனதைக் கவ்விக்கொண்டது. இருளின் முடிவில் எனது தெரு தொடங்கிவிட்டிருந்தது.

சுட்டிகள்

www.writerpayon.com

twitter.com/ThePayon

t.writerpayon.com

*

